janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi janasakthitholaikatchi



புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 85 | 2022 நவம்பர் 27 - டிசம்பர் 03 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 34




அரசியல், அமைப்பு நிலை பணிகள் தொடரட்டும்!–2 ப 02

லூலா பிரகடனங்கள் ...... ப 04

ஜுவாலைக் கதிர்களாய் நெல்லை சிவந்திட வாருங்கள்! ப 05







# ஒரே நாடு ஒரே சமூக பாதுகாப்பு சட்டம்

# என்ற பெயரில் நலவாரிய உரிமைகளைப் பறிக்காதே!

## கட்டட தொழிலாளர் சங்க மாநில மாநாடு தீர்மானம்

**தமிழ்நாடு ஏஐடியூசி கட்டடத் தொழிலாளர் சங்கத்தின் 8வது மாநில மாநாடு, நவம்பர் 16, 17 தேதிகளில் ராணிப்பேட்டை நவல்பூர் என்.கே.கண்ணன் லட்சுமி மஹாலில் நடைபெற்றது. மாநாட்டு கொடியை பாரதி ஏற்றி வைத்தார். முதல் நாள் நிகழ்விற்கு தமிழ்நாடு ஏஐடியூசி பொதுச் செயலாளர் டி.எம். மூர்த்தி தலைமை தாங்கினார். மாநில துணைத்தலைவர்கள் கோவை ஆர்.பாலகிருஷ்ணன், திருச்சி சுரேஷ், கரூர் ஜி.பி.எஸ். வடிவேலன், சேலம் எஸ்.கவிதா, மாநில செயலாளர்கள் எம்.முனுசாமி தஞ்சை ஆர்.தில்லைவனம், ஈரோடு எஸ்.சின்னசாமி, திண்டுக்கல் ஜி.பாலன், தூத்துக்குடி எஸ்.சேது கோவை சி.நந்தினி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.**



தமிழ்நாடு ஏஐடியூசியின் மாநில தலைவரும், திருப்பூர் மக்களவை உறுப்பினருமான கே. சுப்பராயன் மாநாட்டை துவக்கி வைத்து பேசினார்.

தமிழ்நாடு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி சிறப்புரையாற்றினார். என்.செல்வராஜ் நன்றியுரை ஆற்றினார்.

பிரதிநிதிகள் மாநாட்டிற்கு கட்டட தொழிலாளர் சங்கத்தின் மாநில தலைவர் நா. பெரியசாமி எக்ஸ்.எம்.எல்.ஏ. தலைமை தாங்கினார். கட்டட தொழிலாளர் சங்கத்தின் மாநில செயலாளர் ஆர்.துரைசாமி அஞ்சலி தீர்மானம் வாசித்தார். பொது செயலாளர் கே.இரவி அமைப்பு நிலை மற்றும் வேலை அறிக்கை சமர்ப்பித்து பேசினார். மாநில பொருளாளர் இரா.முருகன் வரவு செலவு அறிக்கை முன்வைத்து பேசினார்.

இரண்டாம் நாள் நிகழ்வில் தமிழ்நாடு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ.கணேசன் சிறப்புரையாற்றினார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் நிறைவாக சிறப்புரையாற்றினார். வரவேற்பு குழு செயலாளர் ஏ.எஸ்.சங்கர் மேஸ்திரி நன்றி கூறினார்.

### கட்டட தொழிலாளர் சங்க மாநில நிர்வாகிகள்

தலைவராக கே. இரவி, துணைத் தலைவர்களாக நா.பெரியசாமி எக்ஸ்.எம்.எல்.ஏ., டி.எம்.மூர்த்தி, ஆர்.பாலகிருஷ்ணன், க.சுரேஷ், ஜி.பி.எஸ்.வடிவேலன், எஸ்.கவிதா ஆகியோரும், பொதுச் செயலாளராக கோவை என்.செல்வராஜ், துணைப் பொதுச் செயலாளராக எம்.முனுசாமி, பொருளாளராக இரா.முருகன் ஆகியோரும், செயலாளர்களாக ஆர்.துரைசாமி, எஸ்.சேது, ஆர்.தில்லைவனம், எஸ்.சின்னசாமி ஜி.பாலன், ஏ.எஸ்.சங்கர்மேஸ்திரி, கோவை சி. நந்தினி மற்றும் 125 பேர் கொண்ட பொதுக்குழுவும் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டது. மாவட்ட செயலாளர்கள் அனைவரும் நிர்வாகக்குழு உறுப்பினர்களாக தேர்வு செய்யப்பட்டனர்.

வரவேற்புக்குழு தலைவர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஜி.லதா, ரேவதி, ஆசிரியர் கூட்டணி மாநில பொதுச் செயலாளர் எல்.மணி, பொருளாளர் கிருபாகரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

#### தமிழக அரசுக்கு நன்றி

கட்டட தொழிலாளர் சங்கத்தின் மாநில கோரிக்கை மாநாடு கடந்த 2021 டிசம்பர் 7ம் தேதி சென்னை ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் நடைபெற்றது. இந்த மாநாட்டில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ.கணேசன் கலந்து கொண்டு மாநாட்டை வாழ்த்தி பேசினார்.

அந்த மாநாட்டில் வீடில்லாத கட்டுமான தொழிலாளர்களுக்கு வீடு கட்டுவதற்கு ரூ.4 லட்சம் நிதி உதவியும், வீட்டுமனை இல்லாத தொழிலாளர்களுக்கு நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் வீடும் ஒதுக்கீடு செய்து வழங்கும் திட்டத்தையும், பத்தாம் வகுப்பு முதல் கல்வி உதவித் தொகை என்ற பழைய நடைமுறையை மாற்றி ஆறாம் வகுப்பிலிருந்து கல்வி உதவித்தொகை வழங்கப்படும் என்றும்,

பத்தாம் வகுப்பு மற்றும் ஐ.டி.ஐ. மாணவர்களுக்கு வழங்கப்படும் உதவித்தொகை ரூ.2,400 என்பதை ரூ.3,000 என உயர்த்தியும், இளங்கலை பட்ட படிப்பிற்கு ரூ.1,500 என்பதை ரூ.4000 எனவும், முதுகலை பட்டப்படிப்பிற்கு ரூ.6,000 ஆகவும், திருமண உதவித்தொகை ரூ.5000 என்பதை ரூ.20,000 ஆகவும், மகப்பேறு உதவித்தொகை ரூ.18,000 ஆகவும், இயற்கை மரண உதவித்தொகை ரூ.20,000 என்பதை ரூ.50,000 ஆகவும் உயர்த்தி அறிவித்து அரசாணை வெளியிட்டு அமல்படுத்துவதாகவும் அறிவித்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், தொழிலாளர் நல மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ.கணேசன் அவர்களுக்கும், தமிழ்நாடு ஏ.ஐ.டி.யூ.சி. கட்டட தொழிலாளர் சங்கத்தின் மாநில மாநாடு மனமார்ந்த நன்றிகளை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறது.

மாநாட்டில் முன்வைக்கப்பட்ட இதர கோரிக்கைகளையும் நிறைவேற்ற வேண்டும் என்று மாநாடு கேட்டுக்கொள்கிறது.

#### மருத்துவக் காப்பீடு

1982ஆம் ஆண்டு தமிழ்நாடு உடல் உழைப்பு தொழிலாளர் பணி நிலைமைகள் ஒழுங்குபடுத்துதல், நிரந்தரப்படுத்துதல் சட்டம் ஏற்படுத்தப்பட்டது. அந்த சட்டத்தின் படி 1994 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நலத்திட்டம் அனைத்து தொழிலாளர் நல சட்டங்களின் பலன்களை கட்டுமான தொழிலாளர்களுக்கு வழங்குவதற்கு உறுதி அளித்தது. அதன்படி தொழிலாளர்களுக்கும், தொழிலாளர் குடும்பத்திற்கும் மருத்துவக் காப்பீடு அளிக்கும் இ.எஸ்.ஐ. திட்டத்தை நல வாரியம் ஏற்படுத்தி 28 ஆண்டுகள் கடந்த நிலையிலும் அமல்படுத்தும் முயற்சி மேற்கொள்ளாமல் இருப்பது சட்டத்தின் நோக்கத்தை சிதைப்பதாக உள்ளது. மேலும் மருத்துவ காப்பீடு, மருத்துவ சிகிச்சையும் விபத்து சிகிச்சையும், கட்டுமான தொழிலாளர்களுக்கு அவசியம் என்பதை

தொடர்ச்சி 15ம் பக்கம்

கட்சிக் கடிதம்

# அரசியல், அமைப்பு நிலை பணிகள் தொடரட்டும்!-2



பேரன்புமிக்க தோழர்களே!

**நமது அரசியல் – அமைப்புநிலை பணிகளை முன்னைக் காட்டிலும் தீவிரமாகவும், உணர்வுபூர்வமாகவும் நிறைவேற்ற வேண்டிய கடமை, பொறுப்பு மற்றவர்களைக் காட்டிலும் நமக்கு அதிகமுள்ளது என்பதனை நாம் உணர்ந்து செயல்பட வேண்டிய காலமாகும். வக்கிர புத்தியுடைய சனாதன கும்பல் மேற்கொண்டு வரும் கபட நாடகங்களை நாம் மிகுந்த எச்சரிக்கையுடன், கவனமாக பார்க்க வேண்டும்.**

முற்படுத்தப்பட்டோருக்கு 10% இட ஒதுக்கீடு குறித்து உச்ச நீதிமன்ற நீதிபதிகள் மாறுபட்ட கருத்துக்களை தெரிவித்துள்ளார்கள்.

ஆனாலும் ஐவரில் மூவர் ஒன்றிய அரசின் நடவடிக்கையை ஆதரித்த காரணத்தால், பெரும்பான்மை தீர்ப்பு என்ற ரீதியில் அதனை ஒன்றிய அரசு அமல்படுத்தும்.

ஒன்றிய அரசு அரசியல் அமைப்பு சட்டத்தை திருத்தி இதற்கான மசோதாவை நாடாளுமன்ற இரு அவைகளிலும் அவசர கோலத்தில் நிறைவேற்றியது.

இதன் மீது ராஜ்யசபையில் விவாதம் வந்தபோது, அன்று அவையில் இடம்பெற்றிருந்த நமது பொதுச் செயலாளர் டி.ராஜா இம்மசோதா சமூக நீதிக்கு எதிரானது என்று குரல் கொடுத்து அவையை விட்டு வெளிநடப்பு செய்தார் என்பதனை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இம்மசோதாவை பாஜக எத்தகைய சூழலில் கொண்டு வந்தது என்பது நம் அனைவருக்கும் நினைவு இருக்கக்கூடும் என்றாலும் மீண்டும் நினைவூட்ட விரும்புகின்றோம்.

மத்திய பிரதேசம், சத்தீஸ்கர், ராஜஸ்தான், தெலுங்கானா மற்றும் மிசோரம் ஆகிய ஐந்து மாநிலங்களுக்கு நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தலில் பாஜக தோல்வியடைந்தது.

தாங்கள் ஆட்சி புரிந்திட்ட மத்திய பிரதேசம், ராஜஸ்தான், சத்தீஸ்கர் ஆகிய மூன்று மாநிலங்களில் பாஜக ஆட்சியை பறிகொடுத்திட்ட நிலையில், தனது வாக்கு வங்கியை பெருக்கிக் கொள்ளும் உள்நோக்கத்துடன் இம்மசோதா கொண்டுவரப்பட்டு நிறைவேற்றியதையும், ராஜ்யசபாவில் நிறைவேற்றப்பட்ட அடுத்த நாளே குடியரசுத் தலைவர் கையெழுத்திட்டார் என்பதையும் கவனத்தில் கொள்க!

எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான அரசு 10% இட ஒதுக்கீட்டை தமிழ்நாட்டில் அமல்படுத்திட அனைத்துக் கட்சி கூட்டத்தை கூட்டியது. நமது மாநிலக் கட்சி அன்றைக்கும் இதனை ஏற்கவில்லை – சமூக நீதிக்கு எதிரானது என்று நமது கடுமையான எதிர்ப்பை தெரிவித்தோம்.

தற்போதும் அதனை நாம் எதிர்க்கின்றோம்– சமூகநீதி பிரச்சனையில் நாம் தெளிவாகவும், உறுதியாகவும் இருக்கின்றோம்.

எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, பொருளாதார அடிப்படையில் இட ஒதுக்கீடு என்று அறிவித்தபோது, நமது மாநிலக் கட்சி மிக கடுமையாக ஆட்சேபனையை தெரிவித்தது. தோழர் தா.பா அவர்கள் எம்.ஜி.ஆர். இட ஒதுக்கீடு கொள்கையை மிக கடுமையாக விமர்சித்து ஜனசக்தியில் தொடர்ந்து கட்டுரைகள் எழுதியதை நினைவு கூருகின்றோம். சமூக நீதி என்பது ஏன்? எதற்காக இட ஒதுக்கீடு கொண்டுவரப்பட்டது என்பதனை உணர்ந்தும், புரிந்தும் செயல்பட வேண்டும்.

இட ஒதுக்கீடு என்பது கல்வி காலங்காலமாக மறுக்கப்பட்ட மக்களுக்காக கொண்டுவரப்பட்டது.

தயவு கூர்ந்து மனுதர்ம நூலை ஆழ்ந்து படியுங்கள்– உண்மைகள் தெரியும்.

ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் தத்துவமான மனுதர்மம் என்ன கூறுகின்றது? மனிதர்களை நான்கு வகையாக பிரிக்கின்றது.

1. பிரம்மாவின் நெற்றியில் இருந்து பிறந்தவர்கள் பிராமணர்கள். இவர்களுக்கான வேலைப் பிரிவினை என்பது கற்பது, கற்பிப்பது இதனைத் தவிர வேறு எந்த வகையான உடல் உழைப்பையும் செய்தல் கூடாது.
2. பிரம்மாவின் தோளில் இருந்து பிறந்தவர்கள் சத்திரியர்கள் – அரசர்கள்.
3. பிரம்மாவின் தொடையிலிருந்து பிறந்தவர்கள் வைசியர்கள், வணிகர்கள்.
4. பிரம்மாவின் பாதங்களில் இருந்து பிறந்தவர்கள்– சூத்திரர்கள். இவர்களுக்கான வேலை என்பது மேற்கண்ட மூவருக்கும் பணிவிடை செய்பவர்கள் – உடல் உழைப்பாளர்கள். அனைத்து தொழில்களையும் செய்யக்கூடியவர்கள். இவர்கள் கல்வி கற்க கூடாது – கற்பிப்பதை கேட்கவும் கூடாது, அவ்வாறு கேட்டால் அவர்களின் காதுகளில் ஈயத்தை காய்ச்சி ஊற்ற வேண்டும்.

கற்கவோ – கற்றதை கேட்கவோ கூடாது என்று மறுக்கப்பட்டவர்கள். கல்வி முற்றிலுமாக மறுக்கப்பட்டவர்களுக்கு சமூக நீதி கிடைக்க வேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையில் இட ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டது.




காலம் காலமாக கல்வியை தனது சொந்த சொத்தாக்கி கொண்டவர்களுடன், மறுக்கப்பட்டவர்கள் போட்டியிட முடியாது என்ற எதார்த்த உண்மையை ஏற்றுக்கொண்ட காரணத்தால் இட ஒதுக்கீடு முறை அமல்படுத்தப்பட்டது.

இத்தகைய உண்மைகளை மூடி மறைத்து விட்டு, முற்பட்ட வகுப்பில் உள்ளவர்களுக்கு, அதுவும் ஏழைகளுக்கு வழங்கப்படுவதை ஏன் எதிர்க்க வேண்டும் என்று கேட்கிறார்கள்!

ஏழைகள் என்பவர் யார்?

ஆண்டுக்கு ரூ. 8 லட்சம் வருமானம் உடையவர்கள். அதாவது மாதம் ரூ.66,000 வருமானம் உடையவர்கள் ஏழைகளா?

இட ஒதுக்கீட்டைப் பொறுத்தவரை தமிழ்நாட்டில்,
பி.சி.க்கு 26.5%
பி.சி. முஸ்லிம் 3.5%
எம்.பி.சி. 20%
எஸ்.சி. 15%
எஸ்.சி. அருந்ததியர் 3%
எஸ்.டி. 1%
மொத்தம் 69%

இந்த 69% இட ஒதுக்கீடு போக மீதமுள்ள 31% ல் தான் 10% இட ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இதில் என்ன தவறு என்று கேட்கிறார்கள்?

முற்படுத்தப்பட்டவர்களுக்கு இட ஒதுக்கீடு என்பது சமூக நீதிக்கு எதிரானது.

முற்படுத்தப்பட்டவர்கள் எத்தனை சதவிகிதம் உள்ளனர் என்ற கேள்விக்கு பதில் இல்லை.

நாம் கேட்டது சாதிவாரியான கணக்கீடு செய். அதன் அடிப்படையில் பிரித்துக் கொடு!

இந்த நியாயமான கோரிக்கை மறுக்கப்படுவது ஏன்?

பத்து சதவீத இட ஒதுக்கீட்டின் உண்மைகளை மூடி மறைத்து விட்டு, மேலெழுந்த வாரியாக நியாயம் கற்பிக்க முயல்வது முழு பூசணிக்காயை சோற்றில் மறைப்பது போன்று உள்ளது. பூசணிக்காயை சேற்றில் மறைக்கலாம்; சோற்றில் மறைக்க முடியுமா?

அடுத்ததாக தமிழின் பெயரால் மோடியால் நடத்தப்பட்டு வரும் மோசடி! காசி தமிழ் சங்கமம் நாடகத்தை பார்ப்போம்!

வாரணாசியில் (காசி) தமிழ் சங்கமம் என்ற நாடகத்தை ஒரு மாத காலம் நடத்திட மோடி தொடங்கி வைத்திருக்கின்றார்.

ஒரு மாத காலம் நடத்தப்படும் இந்நாடகத்தை காண தமிழ்நாட்டில் இருந்து மாணவர்கள், ஆசிரியர்கள், இலக்கியவாதிகள், கலைஞர்கள், ஆன்மீகவாதிகள், வர்த்தகர்கள், தொழில் முனைவோர் என 2500 பேர் அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

இவ்விழாவில் தொடக்க உரையாற்றிய பிரதமர் மோடி உலகின் மூத்த மொழி தமிழ் என்றும், தமிழ் மரபை பாதுகாப்பது 138 கோடி இந்தியர்களின் கடமை என்றும், அதனை புறக்கணிப்பது தேசத்திற்கு செய்யும் பெரும் அவமதிப்பு என்றும் பேசியுள்ளார்.

இதனை சிலர் தமிழ் மீதும், தமிழ் இனத்தின் மீதும் பிரதமருக்கு இருக்கும் பற்றையும், புரிதலையும் வெளிப்படுத்துகின்றன என்று வானளாவ புகழ்ந்து தள்ளுகின்றனர்.

பிரதமர் மோடிக்கு தமிழ் மீதும், தமிழ் இனத்தின் மீதும் உண்மையில் பற்றுள்ளவரா? அல்லது போலித்தனமான நாடகமா?

தமிழ் மீது பற்றுள்ளவர் எனில் அதன் வளர்ச்சிக்கு எவ்வாறு நிதி ஒதுக்குகின்றார் என்பது குறித்து விவாதிக்கப்பட வேண்டும்!

சமஸ்கிருத மொழி – அது மூத்த மொழி என்பதில் கருத்து வேறுபாடு இல்லை – அம்மொழி பேச்சு வழக்கில் உள்ளதா? இல்லை – குறிப்பிட்ட சிலர் பேசுகின்றனர்! எங்கே பேசுகின்றனர்? மக்களிடத்திலா? இல்லை, வேறு எங்கே பேசுகின்றனர், சிலையோடு பேசுகின்றனர் – அவர் சிலையோடு பேசுவதை சிலை கேட்கின்றதா? சிலை கேட்க முடியுமா? முடியாது!

சிலையோடு பேசும் மொழிக்கு ஆண்டுதோறும் ஒன்றிய அரசால் ஒதுக்கப்படும் நிதி எவ்வளவு?

நம் தாய் மொழியாம் தமிழுக்கு ஒதுக்கப்படும் நிதி எவ்வளவு? ஒப்பிட்டு பார்க்க வேண்டாமா?

தொடர்ச்சி 3ம் பக்கம்

# ஏஐடியூசி மாவட்ட மாநாடுகள்



**திருச்சி:** திருச்சி மாவட்ட ஏஐடியுசி தொழிற்சங்கத்தின் 10வது மாநாடு உறையூர் ராமலிங்க நகர் கூட்டுறவு மினிஹாலில் ரயில்வே கந்தசாமி நினைவு அரங்கில் வே. நடராஜா தலைமையில் மாநாட்டு கொடியினை மாநில செயலாளர் ஆர். ஆறுமுகம் ஏற்றி வைத்து துவக்க உரையாற்றினார். கட்டுமானம் செல்வகுமார் வரவேற்புரையாற்றினார். அஞ்சலி தீர்மானத்தை போக்குவரத்து சுப்பிரமணியன் முன்மொழிந்தார்.

மாவட்ட பொதுச் செயலாளர் க. சுரேஷ் வேலை அறிக்கையினையும், பொருளாளர் பாலமுருகன் வரவு செலவு அறிக்கை சமர்ப்பித்தார். பிரதிநிதிகள் விவாதத்திற்கு பின் ஏக மனதாக ஏற்கப்பட்டது.

மாநிலச் செயலாளர் ஈரோடு சின்னசாமி சிறப்புரையாற்றினார்.

தலைவராக வே.நடராஜா, பொதுச் செயலாளராக மாமன்ற உறுப்பினர் க.சுரேஷ், பொருளாளராக வங்கி ராமராஜ், துணைத்தலைவர்களாக கட்டுமானம் செல்வகுமார், ஜனசக்தி உசேன், சிவா, நேரு துரை, திராவிட மணி, செயலாளர்களாக சுப்பிரமணியன், அன்சர் தீன், கணேசன், முருகன், கங்காதரன் உள்ளிட்டோர் தேர்வு செய்யப்பட்டனர்.

மாநாட்டினை வாழ்த்தி தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநிலத் துணைச் செயலாளர் த.இந்திரஜித், விவசாய தொழிலாளர் சங்க மாவட்ட செயலாளர் கணேசன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநகர் மாவட்ட செயலாளர் சிவா, அகில இந்திய வங்கி நிதி வசூலிப்போர் சம்மேளன பொதுச் செயலாளர் பொன்னுசாமி, தொலைத்தொடர்பு ஊழியர் சம்மேளன அகில இந்திய துணைத் தலைவர் பழனியப்பன், பொதுஇன்சூரன்ஸ் தொழிற்சங்க திருச்சி மண்டல செயலாளர் ஸ்ரீவத்சன் உள்ளிட்டோர் உரையாற்றினர். சுரேஷ் முத்துசாமி நன்றி கூறினார்.

**கன்னியாகுமரி:** கன்னியாகுமரி மாவட்ட ஏஐடியூசி மாநாடு மாவட்டத்தலைவர் கே.சி.துரைராஜ் தலைமையில் நடைபெற்றது. செல்வராணி, காளிராஜ், அருள்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். அனில்குமார் செயல் அறிக்கை மற்றும் வரவு செலவு அறிக்கையை வாசித்தார்.

கூட்டத்தில் டாஸ்மாக் பணியாளர் சங்க பொறுப்பாளர்கள் ஜோதி, மால்டன் கட்டுமான தொழிற்சங்க பொறுப்பாளர் சுரேஷ் மேசியதால், டாக்சி, வேன் ஓட்டுநர் சங்க பொறுப்பாளர் எஸ்.இசக்கிமுத்து, இராமகிருஷ்ணன், முந்திரி ஆலை தொழிலாளர் சங்க பொறுப்பாளர் ஆனந்தவள்ளி, ஆஷா பணியாளர் சங்க பொறுப்பாளர் உஷா, பொதுத் தொழிலாளர் சங்க மாவட்ட பொருளாளர் ஆரல் அருள்குமார், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மாநகரச் செயலாளர் ஆர்.இசக்கிமுத்து, மாநகர பொருளாளர் கே.நாகராஜன், தூய்மை பணியாளர்கள் சங்க மாவட்ட அமைப்பாளர் நரேந்திர குமார் உட்பட பல்வேறு சங்க பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

மாவட்ட தலைவராக எஸ்.அனில்குமார், மாவட்ட செயலாளராக ஜி.சுரேஷ்மேசியதாஸ், மாவட்ட பொருளாளராக வி.அருணாசலம் ஆகியோரும், புதிய மாவட்டக்குழுவும் தேர்வு செய்யப்பட்டது. புதிய பொறுப்பாளர்களை வாழ்த்தி ஏஐடியூசி மாநில பொதுச்செயலாளர் டி.எம்.மூர்த்தி, சிபிஐ மாவட்ட செயலாளர் தா.சுபாஷ் சந்திரபோஸ், ஏஐடியூசி மாநில செயலாளர் காசிவிஸ்வநாதன் ஆகியோர் வாழ்த்தி பேசினர்.

## 2 ம் பக்கத் தொடர்ச்சி

சமஸ்கிருத மொழிக்கு ஒதுக்கப்பட்ட நீதி வருமாறு:

2017–18 ஆம் நிதி ஆண்டில் ரூ.198.31 கோடி

2018–19 ஆம் நிதி ஆண்டில் ரூ.214.38 கோடி

2019–20ஆம் நிதி ஆண்டில் ரூ.231.15 கோடி.

ஆண்டிற்கு ஆண்டு நிதி அதிகரிக்கின்றது.

ஆனால் தமிழ் மொழி மீது பற்று கொண்ட பிரதமர் மோடி தமிழுக்கு இந்த ஆண்டுகளில் ஒதுக்கிய நிதி எவ்வளவு தெரியுமா?

2017–18 ஆம் நிதி ஆண்டில் ரூ.10.59 கோடி

2018 – 19 ஆம் நிதி ஆண்டில் ரூ.4.65 கோடி

2019–20 ஆம் நிதி ஆண்டில் ரூ.7.7 கோடி

சமஸ்கிருதத்திற்கும் – தமிழுக்கும் ஒதுக்கப்படும் நிதி, மலைக்கும் – மடுவிற்கும் உள்ள வித்தியாசம்! வேறுபாடு!

சமஸ்கிருதம் என்கிற கண்ணில் வெண்ணெய் – தமிழ் என்கிற கண்ணில் சுண்ணாம்பு!

13 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட திருக்குறள் நூல்களை வெளியிட்டு குறளுக்கு பெருமை சேர்த்ததாக இங்கே புகழ் பாடுகின்றார்கள்.

திருக்குறள் பொதுமறை என போற்றப்படுகின்றது. ஆனால் இங்கே உள்ள மேதகு ஆளுநர் குறளை இந்து மத நூல் என்று உலகப் பொதுமறையை சின்னஞ்சிறு சிமிழுக்குள் அடைக்கின்றார்! இதற்கு மோடியின் புகழ்பாடும் கும்பல் என்ன பதில் சொல்கின்றது – வாய்மூடி மவுனியாக இருப்பது ஏன்?

நமது உலக மகா கவி பாரதியை பிரதமர் போற்றி புகழ்கின்றார்– கவி பாரதி காசியில் தனது அத்தை வீட்டில் சில ஆண்டுகாலம் வசித்தார் என்பது உண்மையே, சமஸ்கிருதத்தை கற்றார் என்பதும் உண்மையே! அவர் சமஸ்கிருதத்தை மட்டுமல்ல பலமொழிகளையும் கற்றுத் தேர்ந்த பன்மொழிப் புலவராவார்!

பல மொழிகளை கற்றுணர்ந்து விட்டு

“யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்

இனிதாவ தெங்குங் காணோம்” என்று கூறினார். சமஸ்கிருதம் அல்லது ஹிந்தி இனிதானதல்ல என்றார்.

நாட்டின் பிரதமர் அனைத்து மொழிகளுக்கும் சம வாய்ப்பு அளித்திட வேண்டும்– அனைத்து மொழிகளையும் சமமாக மதித்திடல் வேண்டும்– அவ்வாறு இல்லையே!

பிரதமருக்கு அடுத்த சிம்மாசனத்தில் அமர்ந்துள்ளவர் சாட்சாத் உள்துறை அமைச்சர் அமித்ஷா.

அவரது தலைமையிலான நாடாளுமன்ற நிலைக்குழு, இந்தி பேசாத மாநில மக்களும் இந்தி பேச வேண்டும், வினாத்தாள்கள் இந்தியிலேயே இருக்க வேண்டும் என்று குடியரசு தலைவருக்கு பரிந்துரை செய்திருப்பது எந்த வகையில் நியாயம்?

மோடி – அமித்ஷா கூட்டணி எதனை விரும்புகின்றது? அரசியலமைப்பு சட்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள 22 மொழிகளில் இந்தி, சமஸ்கிருதம் என இரு மொழிகளுக்கு மட்டுமே முக்கியத்துவம் அளிப்போம்– பிற மொழிகளை புறக்கணிப்போம் – இதுதான் அக்கூட்டணி நோக்கமாகும்!

இக் கூட்டணி தாங்கள் ஏற்று கொண்டுள்ள, நம்புகின்ற மனுதர்மக் கொள்கையை அமல்படுத்துவதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளனர்–

இத்தகைய உண்மைகளை மூடி மறைத்து விட்டு– சிலைகளுக்கு தங்க முலாம் பூசி, ஒரிஜினல் தங்கமான மக்களை நம்ப வைக்க முயல்கின்றனர்.

கேழ்வரகில் நெய் வடிகின்றது என்கின்றனர்– அதனை நாம் நம்ப வேண்டும் என்று கூறுகின்றனர்.

பாரதி காசியில் இருக்கும் போதுதான் முறுக்கு மீசை வைத்தார் என்று கூறுகின்றார்கள் என்கிறார் மோடி.

ஆம் முறுக்கு மீசை வைத்ததும் உண்மைதான், அதே போன்று ஜாதியின் அடையாளமாக திகழ்ந்த பூணூலை அறுத்து எறிந்தார் என்பதும் உண்மைதான். இந்த உண்மையை மோடிக்கு யாரும் எழுதிக் கொடுக்க வில்லை போலும்!

சாதிகள் இல்லையடி பாப்பா! என்று பாரதி கூறியது மோடிக்கு தெரிய நியாயம் இல்லை–

“தனியொரு மனிதனுக்கு உணவு இல்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம்“ என்றான் பாரதி.

நரேந்திர மோடியின் ஆட்சியில் 20 கோடி மக்கள் இரவு உணவின்றி உறங்குகின்றனர் என்பதால், பாரதியின் கவிதை வரிகளை வசதியாக எழுதிக் கொடுத்தவர்கள் மறைத்திருக்கலாம்.

தமிழைக் காட்டி, குறளை காட்டி, பாரதியைக் காட்டி தமிழக மக்களை எளிதில் ஏமாற்றி விடலாம் என மோடி முயற்சிப்பது பகற்கனவாகும்!

தோழர்களே மோடி வகையறாக்களின் மோசடிகளை– நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

நாம் புரிந்து செயல்படவில்லை எனில் மோடியின், அதன் கும்பலின் கபட நாடகத்திற்கு பலியாகிவிட நேரிடலாம்.

நாமே பலியாகிவிட்டால் மக்களின் கதி என்னவாகும் என்று நினைத்துப் பாருங்கள்.

நாம் விழிப்புணர்ரோடு இருக்க வேண்டுமெனில் நமக்கான பேராயுதம் ஜனசக்தி என்பதனை மறந்து விடலாகாது.

ஒவ்வொரு கட்சி உறுப்பினரும் ஜனசக்தி படிக்க வேண்டாமா?

“கொள்கை தெளிவு பெற, குழப்புவோர் வாயடைக்க ஜனசக்தி படியுங்கள்” என்று நமது பேராசன் ஜீவா கூறியதை மறக்கலாமா?

காகிதத்தில் ஓர் ஆயுதம் என்று தோழர் தா.பா. கூறியதை நாம் மறந்து விடலாமா?

இன்று தமிழகத்தில் ஏராளமான நாளிதழ்களும், வார, மாத ஏடுகளும் நிரம்பவே உள்ளன. தொலைக்காட்சிகளும் நிறைந்துள்ளன.

இவைகளை நடத்துபவர்கள் யார்? சாமானியர்கள் அல்ல – பெரும் முதலாளிகள் முதலீடு செய்து லாபத்தை மட்டுமே குறிக்கோளாக கொண்டு நடத்தி வருகின்றனர்.

இவர்கள் நடத்திவரும் இதழ்கள், தொலைக்காட்சிகள் யாருக்கு முக்கியத்துவம் கொடுப்பார்கள்.

வர்க்க நலன் சார்ந்தே செயல்படுவார்கள்– அதில் ஆச்சரியப்பட ஒன்றும் இல்லை.

மக்கள் விரோத மோடியின் ஆட்சியை தூக்கிப் பிடிப்பதும், மோடிக்கு புகழ் பாடுவதும் தங்களது கடமை என கொண்டுள்ளார்கள்.

ஊடகங்கள் மேற்கொள்ளும் இத்தகைய முயற்சிகளை கொள்கை ரீதியாக முறியடிக்க வேண்டாமா?

கொள்கைப் போரில், தத்துவப் போரில் நாம் வெற்றிவாகை சூட வேண்டாமா?

முதலாளித்துவ, கார்ப்பரேட்ரியத்தை, சனாதனத்தை எதைக்கொண்டு எதிர்கொள்ளப் போகின்றோம்?

நமக்கான ஆயுதம், பேராயுதம் என விளங்கிவரும் ஜனசக்தி, விற்பனை அதிகரிக்க வேண்டாமா? பன்மடங்கு ஜனசக்தி விற்பனையை அதிகரிப்பதன் மூலம், நல்லதொரு அரசியல் விடியலைக் காண முடியும்!

ஒவ்வொரு கட்சிக் கிளையும் குறைந்தபட்சம் ஐந்து ஜனசக்தி ஆண்டு சந்தா செலுத்திட வேண்டும் என்று நமது கட்சி மாநில நிர்வாகக் குழு மேற்கொண்டுள்ள முடிவு என்பது எதார்த்தத்திற்கு புறம்பானதா?

நமது கட்சி உறுப்பினர்களில் பெரும்பகுதியினர் தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் தான் என்று, நமது மாவட்ட, மாநில மாநாடுகளில் தகுதி ஆய்வறிக்கை கூறுகின்றது.

அவ்வாறாயின் படிக்கத் தெரிந்த தோழர்கள் அனைவரும் ஜனசக்தி ஆண்டு சந்தா செலுத்தி பெறுவதில் என்ன தயக்கம்!

நம் கட்சி உறுப்பினர் ஒவ்வொரு தோழரும் அரசியல் ரீதியாக, அமைப்பு ரீதியாக செயல்பட வேண்டாமா?

அரசியல் அற்ற செயல்பாடுகள் எவ்வளவு அதிகமிருப்பின் அதனால் என்ன பயன் என்பது குறித்து நாம் கவலைப்பட வேண்டாமா?

ஒவ்வொரு கட்சி கிளையிலும் ஒரு தோழர் பொறுப்பேற்று ஜனசக்தி 5, 10 என்று பொதுமக்களிடத்தில் விற்பனை செய்ய வேண்டாமா?

ஊர் தோறும் “இந்த வாரம் ஜனசக்தியை படித்தீர்களா” என்று சுவர் விளம்பரம் செய்ய வேண்டாமா?

இவைகளையெல்லாம் நிச்சயமாக, உறுதியாக நமது கிளைகளும், கட்சி உறுப்பினர்களும் மேற்கொள்வார்கள் என்று கட்சித் தலைமை உறுதியாக நம்புகின்றது.

கட்சித் தலைமை கொண்டுள்ள நம்பிக்கையை செயல்படுத்தி, மெய்ப்படுத்தி காட்டுவது உங்களின் கடமையாகும்.

மேலும் கேளுங்கள் வரும் டிசம்பர் 26ஆம் நாள் நமது வாழ்க்கையில் மறக்கவொண்ணா நன்நாளாகும்.

ஆம் நமது நாட்டின் மகத்தான புரட்சியை மேற்கொண்டு பொதுவுடமை சமுதாயம் பூத்துக் குலுங்க நம்பிக்கையை நட்சத்திரமாக தோன்றிய இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தொடங்கிய நாளாகும்.

அந்நாளில் அனைத்து கிளைகளிலும் உற்சாகப்பெருக்கோடு கட்சிக் கொடி ஏற்றி, இனிப்பு வழங்கி கோலாகலமாக கொண்டாடி மகிழ்வதுடன், ஜனசக்தி விற்பனை இயக்கத்தை வெற்றிகரமாக மேற்கொண்டு, அனைத்து பகுதி மக்களையும் சந்தித்து, ஜனசக்தி விற்பனை இயக்கத்தை வெற்றிகரமாக மேற்கொள்ள வேண்டுகின்றோம்.

இவை மட்டுமின்றி வரலாற்றுப் பதிவுடன் ஆண்டுதோறும் ஜனசக்தியால் வெளியிடப்படும் மாதாந்திர நாட்காட்டி இவ்வாண்டும் வருகின்றது.

இது வெறும் நாள்காட்டி மட்டுமல்ல – உலகில் – தேசத்தில் ஒவ்வொரு நாளும் நடைபெற்ற வரலாற்றை குறிப்பிடும் நாள்காட்டியாகும்.

உலகிற்கு விடியலை வெளிப்படுத்திய மாமேதைகள் மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின் என உலக தலைவர்கள்.

நாட்டின் விடுதலைக்கு அர்ப்பணித்துக் கொண்ட மகத்தான தேச பக்தர்கள், நமது தியாகத்தின் வரலாறு படைத்திட்ட தியாக சீலர்கள் உள்ளிட்ட அழகிய, வண்ணமயமான படங்களுடன் வெளிவர உள்ளதை நம் இல்லம் தோறும் அலங்கரிக்க வேண்டாமா?

நமது வீட்டின் முகப்புச் சுவற்றில் காலண்டர் அலங்கரிக்க வேண்டாமா?

ஒவ்வொரு கட்சி உறுப்பினரும் ஜனசக்தி சிறப்பு மலரை, காலண்டரை வாங்கி மகிழ்வீர்!

பெருமைக்கும், போற்றுதலுக்கும் உரிய தோழர்களே – அரசியல் எத்திசை நோக்கி நகர்கின்றது என்பதனை கவனித்து வலது பக்கம் செல்லாமல் இடது பக்கம் திரும்பும் ஆற்றல் உங்கள் ஒவ்வொருவருக்கும் உண்டு!

உங்கள் பலத்தை நீங்கள் அறியாமல் இருக்கலாம். ஆனால் நம் அரசியல் எதிரிகள் நன்கே உணர்ந்துள்ளனர்.

நமது பலத்தை, ஆற்றலை வெளிப்படுத்திட, மெய்ப்பிக்க நாம் ஒவ்வொரு நொடிப் பொழுதையும் பயன்படுத்திட வேண்டும்!

முன் முயற்சிகளை மேற்கொள்வோம்; நிறைவேற்றுவோம்; சாதிப்போம்!

மீண்டும் சந்திப்போம். வணக்கம்.

தோழமைமிக்க,

இரா.முத்தரசன்

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 85 இதழ் 34

# இந்தியருக்கு அந்தரங்கம் கூடாது; மோடி அரசின் புதிய சட்டம்

மோடி அரசு இரண்டு நாட்களுக்கு முன், டிஜிட்டல் பர்சனல் டேட்டா ப்ரொட்டெக்ஸன் பில், 2022 (எண்ணியல் தனிநபர் அந்தரங்க தரவு பாதுகாப்பு சட்ட முன்வரைவு என்று மொழி பெயர்க்கலாம்!) ஒன்றை பொதுமக்கள் கருத்து செல்வதற்காக பொதுவெளியில் வெளியிட்டுள்ளது.

பிஎஸ்என்எல் அல்லது தனியார் தொலைத்தொடர்பு நிறுவனத்திலிருந்து 'சிம்' ஒன்றை வாங்கி நமது அலைபேசியில் பொருத்துகிறோம். கட்டணத்தையும் செலுத்துகிறோம். அவை தரும் இணையதளத்தைப் பயன்படுத்தி, கூகுள், ஃபேஸ்புக், வாட்ஸ்ஆப், இன்ஸ்டாகிராம் உள்ளிட்ட பல செயலிகளுக்குள் நுழைந்து, பேசுகிறோம், எழுதுகிறோம், தகவல் பரிமாறிக் கொள்கிறோம்.

இவற்றுக்கு கட்டணம் ஏதுமில்லை. அந்த செயலிகளை இயக்கும் நிறுவனங்கள், நமக்கு இந்த வசதிகளை வள்ளல் தன்மையோடு இலவசமாகத் தந்து கொண்டிருக்கிறார்களா?

2014இல் வாட்ஸ்ஆப் செயலியை, ஃபேஸ்புக் நிறுவனம் 19,600 கோடி டாலர் கொடுத்து விலைக்கு வாங்கி தனதாக்கிக் கொண்டது. வாட்ஸ்ஆப் நிறுவனத்திடம் என்ன இருந்தது? 200 கோடி வாடிக்கையாளர்கள்தான் அதன் சொத்து.

எடுத்துக்காட்டாக, ஒரு மை ஊற்றும் பேனாவை வாங்க வேண்டும் எனில், கூகுளில் போய் தேடுகிறோம். அதை விட்டு வெளிவந்தாலும், ஃபேஸ்புக் உள்ளிட்ட எந்த செயலியைத் திறந்தாலும், அங்கே பல்வேறு வகை பேனாக்கள் தொடர்ந்து பரிந்துரைக்கப்படுவதைப் பார்க்கிறோம். எந்த பொருளை வலைதளத்தில் தேடினாலும், நாம் கேட்காமலேயே எப்படி பரிந்துரை வருகிறது. ஒருவருக்கு பேனா தேவைப்படுகிறது என்ற தரவை (டேட்டாவை), நாம் பயன்படுத்திய செயலி, அமேசான் பிளிப்கார்ட் உள்ளிட்ட பன்னாட்டு வியாபார நிறுவனங்களுக்கு நல்ல விலை வைத்து விற்று விடுகிறது. அந்த வியாபார நிறுவனம், எல்லா செயலிகளிலும் கடை விரித்து, நம்மை வாங்க வைக்கிறது.

இத்தகைய ஏராளமான தரவுகள் விற்கப்படுவதால் தான் அந்த நிறுவனங்கள் எண்ணிப் பார்க்க முடியாத பெரும் தொகையை சம்பாதிக்கின்றன. இது தவறில்லையா என்று கேட்கலாம். அந்த செயலி (App) வேண்டுமென நம் அலைபேசியில் ப்ளே ஸ்டோருக்கு போய் பதிவிறக்கம் செய்கிறோம். அப்போதே இதற்கான அனுமதியை நம்மிடமிருந்து அது பெற்று விடுகிறது. அந்த நிபந்தனைகளை படித்துப் பார்க்காமலேயே ஏற்பதாக, அழுத்தி விடுகிறோம்.

இந்த செயலிகளிடம் உள்ள தரவுகளை மோடி அரசாங்கம் தனக்குத் தர வேண்டும் என வலியுறுத்துகிறது. இதனை எதிர்த்து வாட்ஸ்ஆப், ட்விட்டர் நிறுவனங்கள் ஒன்றிய அரசின் மீது வழக்கு தொடர்ந்தது நினைவில் இருக்கலாம்.

இவற்றை இந்தியாவில் நூறு கோடிக்கு மேற்பட்டோர் பயன்படுத்துகிறார்கள். அவர்கள் அந்தரங்கமாக பரிமாறிக் கொள்ளும் எந்த ஒரு தகவலையும் அரசாங்கம் அந்தச் செயலி நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொள்ள அதிகாரம் பெறுவது தான் இந்தச் சட்டம்.

மூன்று மாதத்துக்கு முன்பு 90 பிரிவுகளோடு வைக்கப்பட்ட இதே போன்ற சட்டம் முன்வரைவு கடுமையான விமர்சனத்திற்கு ஆளாகி திரும்பப் பெறப்பட்டது. இப்போது மென்மையான, ஆனால் தெளிவில்லாத சொற்களில், அவற்றுக்கான பொருளை அவ்வப்போது அரசாங்கம் சொல்லலாம் எனும் வகையில் 30 பிரிவுகளோடு இப்போது வைக்கப்பட்டுள்ளது. முன்னதை விட இது படுமோசம்.

'தனிநபர் அந்தரங்கம், என்பது அடிப்படை உரிமை என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. ஆனால் "நாட்டின் பாதுகாப்பை விட தனிநபர் அந்தரங்கம் முக்கியமானது அல்ல" என்று வெளிப்படையாக அறிவித்து இந்த சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது.

ஒரே வரியில் சொன்னால், 'அரசாங்கத்தின் ஏஜென்சிகள் எந்தத் தகவலை வேண்டுமானாலும் செயலி நிறுவனங்களிடம் இருந்து பெற்று, எவ்வளவு காலம் வேண்டும் என்று தோன்றுகிறதோ அதுவரை வைத்துப் பயன்படுத்தலாம்' என்பதுதான் சட்டத்தின் உள்ளடக்கம்.

எந்தெந்த நாடுகளுக்கு இந்த தரவுகளை தருவது என்பதையும் அரசாங்கம் முடிவு செய்யும். இதற்கான ஒரு வாரியத்தை அரசு அமைக்கும். வாரியத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களை நியமிப்பது ஒன்றிய அரசின் தனி விருப்புரிமையாகும். அதனை யாரும் கேள்வி கேட்க முடியாது.

கண்காணிப்பு கேமராக்கள் கூட பொதுவெளியில் நடமாட்டத்தை தான் பதிவு செய்யும். ஆனால் இந்திய மக்களை, அவர்களது படுக்கையறை, கழிப்பறைக்குள்ளும் புகுந்து கண்காணிக்க, வேவு பார்க்க ஒன்றிய அரசுக்கு சட்டம் அதிகாரம் தருகிறது.


ஒரு ஜனநாயக நாடு மேற்கொள்ள கூடாத இந்த நடவடிக்கையை, மக்கள் எதிர்த்து நின்று முறியடிக்க வேண்டும்.

# லூலா பிரகடனங்கள்



மு.வீரபாண்டியன்

**தென் அமெரிக்க கண்டமே மிகுந்த ஆவலோடு எதிர்பார்த்த பிரேசில் பொதுத் தேர்தலில் தோழர் லூலா வெற்றி பெற்றதை உலகறியும். அவரது வெற்றிக்கு மூன்று பிரதான காரணங்கள் சொல்லப்படுகிறது.**



1. தொழிலாளர்களின் போராட்டங்கள்
2. பல்கலைக்கழகங்கள்
3. சோசலிச முழக்கங்கள்

கடந்த 20 ஆண்டுகளில் வலதுசாரி ஆட்சியாளர்கள் வெறுப்பு அரசியலை, கார்ப்பரேட் அரசியலை, அமெரிக்க ஆதரவு அரசியலை முன்னெடுத்தனர். பிரமாண்டமான தொழிலாளர் போராட்டங்கள்தான் இதனை அம்பலப்படுத்தின.

வெறுப்பு அரசியலை, பிளவு அரசியலை தொழிலாளர் போராட்டங்கள் தோலுரித்தன, நாட்டு நல்லனுக்காக முழங்கின.

அதேபோல் பிரேசில் மற்றும் லத்தீன் அமெரிக்கா முழுவதும், பல்கலைக்கழகங்கள் இடது சிந்தனை அரங்கமாகவே மாறி வருகிறது.

பிரேசில் பல்கலைக்கழக பேராசிரியர்கள், மாணவர்கள் இடது சிந்தனையாளர்களே என்கிறது பிரேசில் தேசிய மாதிரி ஆய்வறிக்கை.

அடுத்த தோழர் லூலாவின் சோசலிச முழக்கங்கள். இது முதலாளித்துவத்தை தோலுரித்தன. அமேசான் காடு துவங்கி, ஆற்று மணல் வரை கார்ப்பரேட் சூறையாடலை மக்களுக்கு எடுத்துச் சொன்னது. அமெரிக்காவும், மேற்குலகமும் எப்படி தங்கள் நலனுக்காக, அவர்களின் கொள்கைகளை திணிக்கிறார்கள் என்பதனை லூலாவின் சோசலிச முழக்கங்கள் அம்பலப்படுத்தின. லூலா வெற்றி பெற்ற மறுதினமே சில பிரகடனங்களை அவர் முன்மொழிந்துள்ளார். ஒன்று உள்ளூர் தற்சார்பு குறித்து, அடுத்து உலக நிர்வாக முறைமை குறித்து, மற்றொன்று ஐ.நா. சபை மீட்டுருவாக்கம் குறித்து.

**உள்ளூர் தற்சார்பு கொள்கைகள்**

விவசாயம், கைத்தொழில், சிறு தொழில், கல்வி, உள்ளூர் மருத்துவம், கிராம சபைகளுக்கு கூடுதல் அதிகாரம், உள்ளூர் ஆய்வுக் கழகங்கள் என பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

இதற்கான நிதி, திட்டமிடல் குழு என மிகுந்த முன்னுரிமை தரப்பட்டுள்ளது. சமூக நலன் சார் திட்டங்கள் புதிய முன்னுரிமை பெறப்பட்டுள்ளது.

அடுத்து உலக நிர்வாக முறைமை என்பது

இவை அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நலம் சார்ந்தே வடிவமைக்கப்பட்டுள்ளது. இதுகாறும் உலக நிர்வாக முறைமையில், பிரதான வர்த்தகம் மற்றும் நிதி முறைமை. இவை முழுக்க முழுக்க ஏகாதிபத்தியங்களின் நலனுக்காகவும், கார்ப்பரேட் நிறுவனங்களின் நலனுக்காகவும் முன் வரையப்பட்டுள்ளது.

வர்த்தகம் முழுக்க முழுக்க மேற்குலகின் உற்பத்தி பொருளுக்கான சந்தையை கோருகின்றன. தங்கள் உற்பத்தி பொருளுக்கு தடையில்லாத நாடுகளை கோருகின்றன.

உதவி, கடன், தொழில்நுட்பம் என அமெரிக்கா மற்றும் மேற்குலக நாடுகளை – நாடுகின்ற நாடுகளை இவை மேற்கண்ட காரணிகளால் வளைக்கின்றன.

கடன் ஒரு பொறியாக பாவிக்கப்பட்டு, நாடுகளை தன் பக்கம் வளைத்து போடுகிறது. இவையாவும் ஐ.நா. சபை வாக்கெடுப்பில் பிரதிபலிக்கின்றன. எனவே தான் லூலா "பிரிக்ஸ்" வலுப்பெற வேண்டும் என்கிறார்.

தென் அமெரிக்கா முழுவதுமே தனக்கான ஒன்றிய முறைமைகளை வகுத்துக் கொள்ள வேண்டும் என்கிறார். அதாவது ஐரோப்பிய ஒன்றிய முறைமை போல். இது தென் அமெரிக்காவிற்கு தோழர் பிடல் முன்மொழிந்தது. இதனை தோழர் சாவேசும் வழிமொழிந்தது வரலாறு.

நிறைவாக ஐநா சபையை மீட்டுருவாக்கம் குறித்து ஐ.நா.வின் பாதுகாப்பு கவுன்சில் சீரமைக்கப்பட வேண்டும். இதில் தென் அமெரிக்கா, ஆப்பிரிக்கா இடம்பெற வேண்டும் என்பது.

பிரேசில் இடம்பெறும் அதே நேரத்தில் இந்தியாவும் இடம்பெற வேண்டும் என்கிறார் லூலா.

ஐ.நா. சபையில் பாதுகாப்பு கவுன்சில் நிரந்தரக் குழுவில் இந்தியா இடம்பெற வேண்டுமென தொடர்ந்து கியூபா, சோவியத் ரஷ்யா வலியுறுத்தி வருவது நினைவு கூரத்தக்கது.

ஐநா சபையில் கைகளை உயர்த்தும் வாக்கெடுப்பு முறைக்கு மாறாக ரகசிய வாக்கெடுப்பை லத்தீன் அமெரிக்காவில் பல நாடுகள் முன்மொழிகின்றன.

ரஷ்ய – உக்ரைன் போர் சூழலில் ஐ.நா. வாக்கெடுப்பில் ரஷ்யா ரகசிய வாக்கெடுப்பு முறையைக் கோரியது கவனிக்கத்தக்கது.

பனிப்போர் முடிந்த சூழலில், "நேட்டோ" போன்ற இராணுவ கூட்டமைப்புகள் ஜி 7, பணக்கார நாடுகளின் நடவடிக்கை, ஜி 20 போன்ற கூட்டமைப்புகள் ஐ.நா.வின் நோக்கங்களை அர்த்தமிழக்க செய்கிறது. ஐ.நா.வையே அர்த்தமிழக்க செய்கின்றது.

இச்சூழலில் தோழர் லூலா ஐ.நா. மீட்டுருவாக்கம் கோருவது இன்றைய உலக சூழலில் அவசியப்படுகிறது.

## வத்திராயிருப்பு நகரக் குழுவிற்கு புதிய நிர்வாகிகள் தேர்வு

விருதுநகர் மாவட்டம் வத்திராயிருப்பில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நகர குழுவின் பேரவைக் கூட்டம் நடைபெற்றது. பேரூராட்சி தலைவர் தவமணிபெரியசாமி தலைமை வகித்தார். தேசிய குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, மாவட்ட பொருளாளர் எஸ்.பழனிக்குமார், வட்ட செயலாளர் கோவிந்தன் ஆகியோர் பேசினார்கள். நகரகுழுவிற்கு 28 பேர்களும், நகர செயலாளராக காளீஸ்வரன், துணை செயலாளர்களாக பெரியசாமி, கோபால் ஆகியோர் ஏகமனதாக தேர்வு செய்யப்பட்டார்கள். 60 படுக்கை உள்ள அரசு மருத்துவமனைக்கு போதிய மருத்துவர்கள் , ஊசி ,மருந்து உள்ளிட்டவைகள் பற்றாக்குறையாக உள்ளது. அரசு உடனே நடவடிக்கை எடுக்கவும் , புறவழிச் சாலைக்கு ஒதுக்கிய ரூ51 கோடி நிதியை உடனே விடுவித்து வேலையைத் தொடங்க வேண்டுமென உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## மதுரை மாநகர் மாவட்டக் குழு கூட்டத்தில் நிர்வாகிகள் தேர்வு

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மதுரை மாநகர் மாவட்டக்குழு கூட்டம் மா.இருளாண்டி தலைமையில் நடைபெற்றது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் திருப்பூர் என்.ரவி கூட்டத்தில் கலந்து கொண்டார். மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் எம்.எஸ்.முருகன் கூட்டத்தின் நோக்கம் குறித்து பேசினார்.

அதனடிப்படையில் மாவட்ட குழு கூட்டத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மதுரை மாநகர் மாவட்ட துணை செயலாளராக சி.தாமஸ், பொருளாளராக மா.இருளாண்டி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். எம்.நந்தாசிங், பா.ராஜலெட்சுமி, இரா.ஜெயராமன், பா.சுமதி, ஜனசக்தி என்.ஜீவா, மற்றும் ரவிச்சந்திரன், ஜெயந்தி நந்தாசிங், இரா. முருகன், விளாங்குடி கே.எஸ்.மணி, கே.கே.மணி உட்பட தோழர்கள் கலந்து கொண்டனர்.



எஸ்.காசிவிஸ்வநாதன்

# ஜுவாலைக் கதிர்களாய் நெல்லை சிவந்திட வாருங்கள்!

**பொங்கருவி தூங்கும் பொதிகை மலை; பொன்னி நிறத்துப் புனல் பெருகும் பொருனை நதி; வானின் வானின் வழி தேனொழுகும் குற்றால சீரருவி; ஒண் முத்துக் கொழிக்கும் தண்கடல் பகுதி என பல சிறப்புகளை பெற்றது தான் நெல்லை சீமை. தமிழ்நாடு ஏஐடியூசி 20வது மாநில மாநாடு நெல்லையில் டிசம்பர் 1, 2, 3 தேதிகளில் நடைபெறுகிறது என்பது தங்களுக்குத் தெரிந்ததுதான். ஜுவாலைக் கதிர் என சிவந்திட வாருங்கள் தோழர்களே!**



தியாகத்தின் வழித்தோன்றல்கள் பலரால் கட்டியமைக்கப்பட்ட செங்கொடி தொழிலாளர் இயக்கம் திருநெல்வேலி மாநகரில் மாநாடு நடைபெறுகிறது.

இம் மண்ணின் முதல் தலைமுறை தியாகிகளுடைய போராட்டங்கள் அளப்பரியன. இவற்றையெல்லாம் தொடர்ந்து படித்துக் கொண்டே வருகிறோம். வரலாற்றில் தடங்களை திரும்பி பார்க்கிறோம்!

1885 ஆம் ஆண்டு நெல்லை மாவட்டம் பாபநாசத்தில் திருநெல்வேலி மில்ஸ் கம்பெனி லிமிடெட் என்ற பெயரில் ஹார்வி சகோதரர்களால் இயக்கப்பட்ட பஞ்சாலை 1888 ஆம் ஆண்டில் தூத்துக்குடி கடற்கரைச் சாலையில் கோரல் மில் என்று பெயரில் இயங்கத் தொடங்கியது.

காலை ஆறு மணி முதல் சூரிய அஸ்தமனம் வரை ரேகை பார்த்து வேலை வாங்குதல் நடைபெற்றது. விடுமுறை என்ற பேச்சுக்கே இடமில்லை. லீவு போட்டால் வேலை போகும். சாப்பிட கூட சரியான நேரம் ஒதுக்கப்படவில்லை. வெயில் ஆனாலும், மழையானாலும் தார் விரிக்கப்பட்ட தளத்தில் நின்று தான் வேலை செய்ய வேண்டும். கூலியோ மிக மிகக் குறைவு. தெரிந்தோ தெரியாமலோ தவறு செய்தால் பிரம்படி கிடைக்கும்.

'அண்டி விழுகுதுன்னு அடிக்கிறானே சூசமுத்து, அடி பொறுக்க மாட்டாம ஓடுறாலே செங்கமலம் கடற்கரைக்கு..' என்ற நாட்டுப்புற பாடல் அன்றைய வேலையின் கொடுமைகளை எடுத்துக்காட்டும்.

தொழிலாளர்கள் என்று கூட அழைக்கப்படவில்லை. கூலிகள் என்று தான் அழைக்கப்பட்டார்கள். இவர்களை அணிதிரட்டிய பெருமை வ.உ.சிதம்பரனார், சுப்ரமணிய சிவா, பத்மநாப அய்யங்காரை சாரும். நாட்டு விடுதலைக்காக சுதேசிபுயல் சுற்றி அடித்துக் கொண்டிருந்த நேரம். தங்களுக்கு வாழ்க்கையே கிடைக்காதா என்று ஏங்கிய கூலி தொழிலாளர்கள் இவர்களின் உரையைக் கேட்கிறார்கள். ஆயிரக்கணக்கிலே அணிதிரண்டு வீதி களிலே முழுக்கமிடுகின்றார்கள்.

**1905 இல் நடைபெற்ற ரஷ்ய புரட்சியின் தாக்கம் தூத்துக்குடியிலும் எதிரொலிக்கிறது. சிவா பேசுகிறார். "புரட்சிகள் எப்போதும் உலகிற்கு நல்லதே கொண்டு வரும். இந்திய தொழிலாளர்கள் 15 நாட்களுக்கு வேலை நிறுத்தம் செய்தால் இங்கிலாந்தில் உள்ள மான்செஸ்டர் (பஞ்சாலைகள் அதிகம் உள்ளே ஊர்) மூடப்படும். ஆலை முதலாளிகளை முடக்குவதற்கு இரண்டு வழிகள் உள்ளன. இயந்திரங்களுக்கு ஊறு விளைவிப்பது ஒன்று.. வேலை நிறுத்தம் செய்வது இரண்டாவது...**

"27.2.1908 அன்று வேலை நிறுத்தம் தொடங்கியது. சிதம்பரனார் ஆலை நிர்வாகத்துடன் பேசியதன் விளைவாக 50% சம்பள உயர்வு கிடைத்தது. விடுமுறையும் சலுகைகளும் கிடைத்தன. தொழிலாளர்கள் 7.3.1908 அன்று வேலைக்குத் திரும்பினர்.

சிதம்பரனாரும், சிவாவும் 12.3.1908 அன்று கைது செய்யப்பட்டார்கள். தொழிலாளி வர்க்கம் பொங்கி எழுந்தது. நெல்லையிலே நான்கு பேர் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். இதனால், கலவர பூமியாக மாறி எழுச்சிமிகு போராட்டம் நடைபெற்றது.

ஹார்வி மில் தொழிலாளர்கள் 1908 மார்ச் 13 முதல் தன்னெழுச்சியாக மீண்டும் வேலை நிறுத்தம் செய்தனர். மார்ச் 19 வரை வேலை நிறுத்தம் நடைபெற்றது. இதுதான் இந்தியாவில் நடைபெற்ற முதல் அரசியல் வேலை நிறுத்தம்.

எனவே முதல் வேலை நிறுத்தம் நடைபெற்ற மண்ணுக்கு தீ ஜுவாலைகளாய் வாருங்கள்ஞ்

இந்திய நாட்டின் அரசியலமைப்புச் சட்டம் முகப்புரையில் "இந்திய குடிமக்களாகிய நாம் இந்தியாவை இறையாண்மை கொண்ட, சமன்மைமிக்க, சமய சார்பற்ற, ஜனநாயக, குடியரசாக அமைப்பதென உறுதி பூண்டுள்ளோம். இதன் மூலம் அனைத்து குடிமக்களையும் பாதுகாப்பதுடன் சமூக பொருளாதார அரசியலில் அனைவருக்கும் நீதி, எண்ணியதை வெளிப்படுத்த, எடுத்துச் சொல்ல, நம்பிக்கை வைக்க, உண்மையைச் சொல்ல, வழிபாடு செய்ய சுதந்திரம்ஞ். தகுநிலையிலும் வாய்ப்பிலும் சமத்துவம் அளித்து உயர்வுறச் செய்தல்..

தனிமனிதர்களுடைய மாண்பு, நாட்டின் ஒற்றுமை, ஒருமைப்பாடு, ஆகியவற்றை உறுதிப்படுத்தும் சகோதரத்துவத்தோடு வாழ்வது என்று உறுதி பூண்டுள்ளோம்''

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை கேள்விக்குள்ளாக்கும் ஆட்சி அதிகாரங்கள் நடைபெறுகின்றன. எண்ணற்ற தியாகிகளின் கனவுகள் சிதைக்கப்படாமல் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியம். நம்முடைய போராட்டங்கள் முடியவில்லை.

கூடுவதும் கலைவதும் அல்ல நம்முடைய நோக்கம். இந்திய நாட்டினுடைய தொழிலாளி வர்க்கத்தினுடைய உரிமைகளை பாதுகாப்பதற்கு உருவாக்கப்பட்ட ஏஐடியூசி, 103 ஆண்டுகளுக்குப் பிறகும் தமிழகத்தில் தன்னுடைய போராட்டங்களை தொடர மாநாட்டில் திட்டமிட உள்ளது.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படை கூறுகளை செயல்படுத்துவதற்காக மாநில மாநாடு கூடுகிறது.

இடதுசாரி பிரிவினர்கள் மட்டுமின்றி, ஜனநாயக சக்திகள், மதச் சார்பற்ற சக்திகள், அனைவரும் ஒன்றாக கூடுகின்றோம். புதிய தாராளமய கொள்கைகளில் மட்டுமில்லாமல் மத வெறி பிடித்த ஆட்சியினுடைய விளைவாக பொருளாதார வளர்ச்சி வீழ்ச்சி அடைந்துள்ளது.

பண மதிப்பு நீக்கம் மற்றும் ஜிஎஸ்டி போன்ற பல்வேறு காரணங்களால் வளர்ச்சி குறைந்து விட்டது. சிறு குறு நடுத்தர தொழில்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தில் விவசாயிகள், விவசாய தொழிலாளர்களின் நிலைமை பரிதாபகரமாக உள்ளது. நிலச் சீர்திருத்தம் கேள்விக்குறியாக மாறிவிட்டது. வேளாண்மை அழிவுற்றதால் கிராமப்புற மக்கள் நகரங்களை நோக்கி புலம் பெயர்ந்து செல்வது பெருகி உள்ளது. வேளாண் சட்டங்களை கார்ப்பரேட்டுகளுக்கு ஆதரவாக திருத்த ஒன்றிய அரசு முயன்றது. இது தடுக்கப்பட வீரம் செறிந்த போராட்டங்களை விவசாயிகள் நடத்தினார்கள். தொழிலாளர்களும் கரம் கோர்த்து நின்று போராடினோம்.

ஆனாலும் தொழிலாளர் சட்டங்களை கார்ப்பரேட் முதலாளித்துவதற்கு ஆதரவாக ஒன்றிய அரசு திருத்தி உள்ளது. தமிழகத்தினுடைய தொழிலாளர்களின் நலன்களை பாதுகாப்பதற்கு பதிலாக, தொழிலாளர் துறை அதற்கான விதிகளை உருவாக்க துடிக்கிறது. இவற்றை எதிர்த்து போராடி தற்காலிகமாக தடுத்து நிறுத்தி இருக்கின்றோம். ஆனாலும் அபாயம் முற்றாக நீங்கவில்லை.

தமிழ்நாட்டின் மொத்த தொழிலாளர்களின் 90 சதவீதத்திற்கும் அதிகமானவர்கள் அமைப்புசாரா தொழிலாளர்கள் வேலையின்மை அதிகரிப்பதால் தொழிலாளர்களின் வாழ்க்கை கேள்விக்குறியாகி உள்ளது. பல்வேறு பணி இடங்கள் காலியாக இருக்கின்றது. இந்த இடங்கள் நிரப்பப்படவில்லை.

படித்த இளைஞர்கள் வேலை இல்லா திண்டாட்டத்தில் ஆழ்ந்திருக்கின்ற போதும், படிக்காத இளைஞர்களுக்கு வேலை என்பது குதிரைக் கொம்பாக மாறிவிட்டது. நாட்டின் மிகப் பெரும்பாலான தொழிலாளர்களுக்கு சட்டப் பாதுகாப்பும் இல்லை. சமூகப் பாதுகாப்பும் இல்லை. இளைஞர்களின் இருளடைந்த எதிர்காலத்தை போக்குவதற்காக கூடுகிறோம்.

கொதித்துக் கொண்டிருக்கும் இளைஞர்களின் போராட்டங்களை மட்டுப்படுத்துவதற்காக 'அக்னி பாத்' என்றநான்காண்டுஒப்பந்தகூலிமுறையை அமல்படுத்துவது இளைஞர்களின் எதிர்காலத்தைத் ஆர்எஸ்எஸ் தன் வசம் எடுத்துக்கொள்ளும் அபாயம் உள்ளது. மதத்தின் பெயரால் மனிதர்களை பிளவுபடுத்துவதற்கு தமிழகத்தில் இடம் இல்லை என்பதை உணர்த்துவதற்காக மாநாடு கூடுகிறது.

மாற்றுப் பொருளாதாரத் திட்டத்தை, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் வழிகாட்டுதல்படி, வலிமையாக மாநில அரசு செயல்பட வேண்டும் என்பதை வற்புறுத்த மாநில மாநாடு கூடுகிறது.

தாராளவாத தனியார்மய சுரண்டலை எதிர்த்து, சமர் புரிவதற்காக திட்டங்களை வகுக்க இருக்கின்றோம்.

வாருங்கள் தோழர்களே! நெல்லை செஞ் ஜுவாலை கதிர்களால் தகி தகிகட்டும்!

மாநாட்டில் எடுக்கப்படும் முடிவுகளையும், தீர்மானங்களையும் மக்கள் மத்தியில் கொண்டு செல்ல, டிசம்பர் மூன்றாம் நாள் மாபெரும் பேரணி உழைக்கும் மக்களின் உரத்த குரல்கள் நமது கோரிக்கைகளை எதிரொலிக்கும்.

கேரள மண்ணின் தொழிலாளி வர்க்கத்தின் தவப்புதல்வர் கேரள மாநில வருவாய்த்துறை அமைச்சர் கே. ராஜன் சிறப்புரையாற்றுகிறார். தமிழகத்தின் தனிப்பெரும் செங்கொடித் தலைவர்கள் பலர் உரை நிகழ்த்த இருக்கின்றார்கள்.

ஆட்டம், பாட்டங்கள், கொண்டாட்டங்கள் மட்டுமல்ல... பாரம்பரியம் மிகுந்த நெல்லை மாநகர் சிகப்பு உடை அணிந்த தோழர்களின் போர்க் குரல்களால் அதிரட்டும்.

"வேளை வந்தது வேளை வெற்றி மேவும் நமது தோளை
ஊளையிட்ட நரிகள்பல ஊர் திருடிய எலிகள்
வாளைப் போன்ற நமது கை வண்ணம் கண்டு நடுங்கும்
மன்னர் முடிவுகள் உடையும், ஏழை மனித முடிகள் உயரும்!
இன்னல் பட்டு நாளும்பசி எய்து உழைத்த தோழர் சொன்னபடியே நடக்கும்! புது சுதந்திரங்கள் பிறக்கும், முன்னேறுவோம் இவ்வேளை வெற்றி முத்தமிடும் நம் தோளை''

கவிஞர் தமிழ் ஒளியின் கவிதை நினைவாகும் நேரம் நெருங்கி விட்டது.

ஜுவாலை கதிர்கள் என சிவந்திட நெல்லைக்கு வாருங்கள் தோழர்களே!

தொடர்புக்கு: 94435 27486



ஜி.ஆர்.இரவீந்திரநாத்

# அரசு மருத்துவர்களை கைது செய்யும் முயற்சியை கைவிடுக!

**கால்பந்தாட்ட வீராங்கனை, மாணவி பிரியா மரணம் மிகுந்த வேதனையையும் வருத்தத்தையும் அளிக்கிறது. பிரியாவின் மறைவுக்கு அஞ்சலியையும், அவரது குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்களுக்கு ஆறுதலையும் சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம் தெரிவித்துக் கொள்கிறது.**

அவரது குடும்பத்தினருக்கு தமிழக முதல்வர் வீடு வழங்கியிருப்பது வரவேற்புக்குரியது. அவரது குடும்பத்திற்கு ரூ.10 லட்சம் இழப்பீடை தமிழக முதல்வர் வழங்கி இருப்பதும், குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலை வழங்கப்படும் என அறிவித்திருப்பதும் வரவேற்புக்குரியது.

சகோதரி பிரியா அவர்களின் சிகிச்சையில் ஏற்பட்ட குறைபாடுகள், கவனக் குறைவு உள்ளிட்ட அனைத்தையும் குறித்து, விரிவான முழுமையான விசாரணை நடுநிலையோடு நடத்தப்பட வேண்டும். அதற்கென AIIMS,JIPMER நிறுவனங்களின் மருத்துவ நிபுணர்களும் அடங்கிய உயர்மட்ட குழுவை அமைக்க வேண்டும்.

உடற்கூறு ஆய்வு உள்ளிட்ட அனைத்து விவரங்களையும் ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும். முழுமையான உண்மைகளை வெளிக்கொணர வேண்டும். அதன் மூலம் இது போன்ற துயர நிகழ்வுகள் எதிர்காலத்தில் ஏற்படாமல் தடுத்திட வேண்டும். அரசு மருத்துவர்களை சட்டத்திற்கு புறம்பாக, உச்ச நீதிமன்ற உத்தரவுகளுக்கு எதிராக கைது செய்யும் முயற்சியை கைவிட வேண்டும்.

தமிழ்நாடு அரசு மருத்துவமனைகளில் தரமான சிகிச்சைகள் கிடைப்பதை பாதிக்கும் வகையில், கவனக் குறைவுகள் ஏற்படும் வகையில் நமது அரசு மருத்துவத்துறையில் கட்டமைப்பு குறைபாடுகள், போதாமைகள் உள்ளன. ஊழியர்கள், மருத்துவர்கள் பற்றாக்குறை கடுமையாக உள்ளது.

இவற்றை எல்லாம் போக்காமல், கவனக்குறைவுகளால், பாதிப்புகள் ஏற்பட்ட பிறகு, அரசு மருத்துவமனைகளின் குறைபாட்டை மறைக்க, மருத்துவர்களை, ஊழியர்களை பலிக்கடா ஆக்குவது சரியா? என்ற கேள்விகள் எழுப்பப்படுகின்றன. இதற்கு அரசு தீர்வு காண வேண்டும்.

மருத்துவத் துறையில் உள்ள பல குறைபாடு களுக்கு,அடிப்படை கட்டமைப்பு குறைபாடு களுக்கு,நவீன கருவிகள் இல்லாததற்கு, உயிர்காக்கும் மருந்துகள் – ஆன்டி பயாட்டிக்ஸ் மருந்துகள் இல்லாததற்கு, போதிய மருத்துவப் பணியாளர்கள் இல்லாததற்கு , சிகிச்சை வழங்களில் protocols (பணிமுறை சார்ந்த நடைமுறை ஒழுங்கு முறை) இல்லாமை,standard treatment guidelines surgical safety check list) போதிய அளவு இல்லாமை போன்ற பிரச்சனைகளுக்கு மருத்துவர்களை பலிக்கடா ஆக்குவது நியாயமல்ல. அரசு, தனது பொறுப்புகளை தட்டிக் கழிக்கக் கூடாது.

இலக்கு நிர்ணயித்து மருத்துவர்களை, அறுவை சிகிச்சைகளை செய்யவைப்பது, பல பாதிப்புகளை உருவாக்குகிறது. இலக்குகளை அடையா விட்டால் பணி இடமாற்றம் என மிரட்டுவது கூடாது. இலக்குகள் நிர்ணயம் என்பதை கைவிட வேண்டும்.

ஆரம்ப சுகாதார நிலையங்களில் சிசேரியன் போன்ற பெரிய அறுவை சிகிச்சைகள் செய்யக் கூடாது. அது போல் ஒரு மருத்துவ மனையின் அளவு மற்றும் கட்டமைப்பு, வசதிகளுக்கேற்ப என்னென்ன அறுவை சிகிச்சை செய்ய முடியுமோ அந்தந்த அறுவை சிகிச்சை களை மட்டுமே அங்கு சேய்ய வேண்டும்.

போதிய அடிப்படை வசதிகள், இரத்தவங்கி, ஆம்புலன்ஸ் வசதி இல்லாத, நல்ல அறுவை அரங்கு இல்லாத, மகப்பேறு மருத்துவர்கள், குழந்தைகள் மருத்துவர்கள் ,மயக்க மருத்துவர்கள் இல்லாத இடங்களிலும் பிரசவம் பார்க்க வேண்டும் என மருத்துவர்கள் கட்டாயப் படுத்தப்படுகின்றனர். இது தாய் மற்றும் சேய்க்கு பல்வேறு எதிர்மறை பாதிப்புகளை ஏற்படுத்துகிறது. இறப்புகளையும் உருவாக்குகிறது. இப்போக்கை கைவிட வேண்டும். அனைத்து வசதிகளும் உள்ள சீமாங்க் (CEMONC) சென்டர் போன்ற உயர்மருத்துவமனைகளில் மட்டுமே பிரசவம் பார்க்க வேண்டும்.

அறுவை சிகிச்சைகள் என்பது அறுவை சிகிச்சை நிபுணரை மட்டுமே சார்ந்ததல்ல. அது ஒரு கூட்டு சிகிச்சைமுறை. கூட்டுச் செயல்பாடு. அறுவைசிகிச்சைக்கு முந்தைய பிந்தைய கவனிப்புகளில் பலரும் செயல்பட வேண்டியுள்ளது. இதில் எங்கு குறைபாடு ஏற்பட்டாலும் பிரச்சனை ஏற்படும்.

அறுவைசிகிச்சைக்கு முன்னும் பின்னும் உபகரணங்கள், பேண்டேஜ்துணிகள்,பஞ்சுகள் எண்ணிக்கை, கருவிகளின் எண்ணிக்கை பார்க்கப்படும். அறுவை சிகிச்சைக்கு பின்னரும் எண்ணிக்கை சரிபார்க்கப்படும்.இதற்குப் பொறுப்பானவர்கள் கவனக்குறைவாக செயல்பட்டாலும் பாதிப்புகள் ஏற்படும்.

சிகிச்சையில் குறைபாடு மற்றும் கவனக்குறைவு ஏற்படாமல் தடுக்க check list,Standard treatment guidelines,referral policy, pre operative and post operative care மற்றும் தொடர் பயிற்சிகள் போன்றவற்றை ஏற்படுத்தி நடைமுறைப்படுத்த வேண்டும்.

முதலமைச்சர் மருத்துவக் காப்பீட்டின் மூலம் வருவாய் ஈட்ட வேண்டும், அதன் மூலம் அங்கு பணிபுரியும் சில செவிலியர்களுக்கு,ஊழியர்களுக்கு ஊதியம் வழங்க வேண்டும், மருந்துகள் வாங்க வேண்டும் என்ற நிலையால், காப்பீடு அட்டை இல்லாதவர்களுக்கு சிகிச்சை மறுக்கப்படுகிறது. இதனால் நோயாளிகள் பாதிக்கப்படுகிறார்கள்.

அரசு மருத்துவமனைகளின் சேவைகள் மருத்துவக் காப்பீடை அடிப்படையாகக் கொண்டு மாற்றப்படுவதை கைவிட வேண்டும்.அரசு மருத்துவமனைகளில் அனைத்து



சிகிச்சைகளும்,பரிசோதனைகளும் முற்றிலும் இலவசமாக செய்யப்பட வேண்டும். அழைப்புப் பணி (Call duty) முறையை ஒழித்துவிட்டு, மருத்துவமனையில் இருந்து (Stay duty) பணி செய்யும் முறையை கொண்டுவர வேண்டும்.

கடந்த 10 ஆண்டுகளில் அரசு மருத்துவமனைகளுக்கு வருகின்ற நோயாளிகள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. உயர் சிறப்பு மருத்துவம் அரசு மருத்துவத் துறையில் புதிதாக துவங்கப்பட்டு வருகின்றன. இப்பிரிவுகளுக்கும் ஏராளமான நோயாளிகள் வருகின்றனர். நோயாளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப மருத்துவர்கள் ,செவிலியர்கள், இசிஜி டெக்னீசியன்கள், எக்ஸ்ரே டெக்னீசியன்கள், லேப் டெக்னீசியன்கள் போன்ற மருத்துவப் பணியாளர்களை போதிய அளவில் நிரந்தரமான அடிப்படையில் நியமிக்க வேண்டும்.

Patient satisfaction scores போன்ற குறியீடு கள் பயன்படுத்தி நோயாளிகளுக்கு தரமான சிகிச்சைகளை இலவசமாக வழங்க வேண்டும்.

தமிழக அரசு மருத்துவமனைகளில் DME,DMS,DPH பிரிவுகளில் பணிபுரியும் மருத்துவர்களில் பலருக்கு 24 மணிநேரம் வரை தொடர்ந்து வேலை வழங்கப்படுகின்றது. இதன் காரணமாக மருத்துவர்களின் உடல்நிலை, மனநிலை பாதிக்கப்படுகிறது. குடும்பங்கள் பாதிக்கப்படுகின்றன. பணியில் ஏராளமான கவனக் குறைவுகளும் ஏற்படுகின்றன. எனவே இந்த முறையை முற்றிலுமாக உடனடியாக நிறுத்திட வேண்டும். எட்டு மணி நேரப் பணியை சுழற்சி அடிப்படையில் வழங்கிட வேண்டும். அதற்கு மாறாக 24 மணி நேரம் தொடர்ந்து பணி செய்ய வற்புறுத்தும் உயர் அதிகாரிகளின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்

பயிற்சி மருத்துவர்கள் பட்டமேற்படிப்பு மாணவர்களுக்கு 24 மணிநேரம் முதல் 36 / 48 மணி நேரம் வரை தொடர்ந்து பணி வழங்கப்படுகின்றது. இது கடும் உடல் மற்றும் மன உளைச்சலை ஏற்படுத்துகிறது.நாளொன்றுக்கு 8 மணி நேரம் மட்டுமே பணி வழங்க வேண்டும். வார விடுமுறை வழங்க வேண்டும். பல்கலைக் கழகம் அனுமதித்துள்ள விடுமுறைகளை வழங்க வேண்டும்.

நோயாளிகள் மற்றும் உறவினர்களிடம் எப்படி நடந்து கொள்வது , துயரமான செய்திகளை எவ்வாறு உறவினர்களுக்கு (Breaking the bad news) தெரிவிப்பது போன்ற பயிற்ச்சி வழங்க வேண்டும்.

உயர் அதிகாரிகள் மற்றும் பேராசிரியர்கள், தங்களுக்கு கீழ் பணி புரியும்,பயிற்சி மருத்துவர்கள், முதுநிலை / உயர் சிறப்பு மருத்துவ படிப்பு படிக்கின்ற மருத்துவர்கள், உதவி மருத்துவர்கள், இளநிலை பேராசிரியர்கள் உள்ளிட்ட துறை பணியாளர்களை மரியாதையாக நடத்த வேண்டும்.அவர்களின் மனிதவளத்தை வீணடிக்காமல் சரியான வகையில் பயன்படுத்த வேண்டும்.அதற்கு soft skill,administrative skill,induction training உள்ளிட்ட பயிற்சிகளை உடனடியாக வழங்க வேண்டும்.

**மருத்துவமனைகளில், மருத்துவ பணியாளர்கள் குறிப்பாக பெண் ஊழியர்கள் வேலை செய்யும் பொழுது, அந்தத் துறைக்கு தொடர்பே இல்லாத நோயாளிகளின் உறவினரோ அல்லது பத்திரிகையாளர் என்று கூறிக்கொள்பவர்களோ செல்போனில் வீடியோ எடுப்பது, அதை மீடியாவுக்கு அனுப்பி விடுவேன் என்று மிரட்டுவது போன்ற செயல்களால், தமிழக சுகாதாரத் துறையில் பணியாளர்கள் ஒரு பாதுகாப்பற்ற நிலையில், அச்சம் மற்றும் பதட்டத்தோடு பணி புரிய வேண்டிய நிலையில் இருக்கின்றனர். இத்தகைய குற்றங்களை தடுக்க வேண்டும்.**

தமிழக அரசு மருத்துவமனைகளில் பணி புரியும் 19,000 மருத்துவர்களின் கடினமான உழைப்பால், ஒரு நாளைக்கு 6 லட்சத்துக்கும் அதிகமான புற நோயாளிகளுக்கும், ஆயிரக்கணக்கான உள் நோயாளிகளுக்கும் சிறப்பான சிகிச்சைகளை வழங்குகின்றனர்.உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை உட்பட ஆயிரக்கணக்கான அறுவை சிகிச்சைகள் செய்யப்படுகின்றன. பிரசவங்கள் பார்க்கப்படுகின்றன. இது பாராட்டத்தக்கது.

இவற்றை மேலும் அதிகரிக்க அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்த வேண்டும்.

சிகிச்சை முறைகளில், மருத்துவ அறிவியல் தொழில் நுட்பத்தை பயன் படுத்தும் போது ஏற்படும் பிரச்சனைகளுக்கு உணர்ச்சிகரமான முறைகளில் தண்டனைகளை வழங்குவது ,அத்துறை சார்ந்தோருக்கு விரக்தியையும், அவநம்பிக்கையையும், அச்சத்தையும் உருவாக்கும் என்பதை அரசு கருத்தில் கொள்ள வேண்டும். குறைபாடுகள் சரிசெய்யப்பட வேண்டும்.

எதிர்பாராத விதத்தில் அசம்பாவிதங்கள் ஏற்படும் போது மருத்துவத் துறை பணியாளர்களுக்கு சட்ட உதவி வழங்கிட வேண்டும். அவர்களுக்கு தொழில் காப்பீடு (group professional imdemnity Insurance for employees) வழங்கிட வேண்டும்.

மருந்துகள், மருத்துவ உபகரணங்களை தமிழக அரசே பொது துறை நிறுவனங்கள் மூலம் உற்பத்தி செய்ய வேண்டும். ஊதிய உயர்வு, பணி நிரந்தரம், பணி பாதுகாப்பு உள்ளிட்ட நியாயமான கோரிக்கைகள், தேர்தல் வாக்குறுதி யில் கூறிய படி நிறைவேற்றப்படாததால், மிகுந்த மன அழுத்தத்துடனும், வேதனையுடனும் மருத்துவப் பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். அவர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும்.

மருத்துவப் பணியாளர்களின் எழுத்துப் பணி, ஆவணப்படுத்தும் பணி, காப்பீடு தொடர்பான பணி போன்ற மருத்துவம் சாராத பணிகளுக்கான நேரம் மிக அதிகமாகவும், நோயாளிகளை கவனிப்பதற்கான நேரம் குறைவாகவும் உள்ளது. கணினி மயமாக்கல் மற்றும் பிற திட்டத்தின் மூலமாகவும் அதை மாற்றி அமைக்க வேண்டும்.

தொடர்புக்கு: 9940664343



சி.பாஸ்கர்

# கம்யூனிஸ்டுகளிடம் தோற்றுப் போன கயவன்!

**ஜெர்மன் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் அதன் தலைவர்களை எதிர்த்துதான் ஹிட்லர் பெரிய சர்வாதிகாரியாக உயர்ந்தான். முதல் உலகப் போரில் பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் வல்லரசுகளால் ஜெர்மனி வீழ்த்தப்பட்டது. அதன் எதிரொலியால் ஜெர்மனியில் முடியாட்சி முறை முடிவுக்கு வந்தது. அதனால் மன்னர் கெய்சர் இரண்டாம் வில்லியம் முடி துறந்தார்.**

1919 ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டின் வெர் செயில்ஸ் நகரில் போர் நிறுத்த உடன்படிக்கை செய்யப்பட்டது. அதன்படி ஜெர்மனியின் எல்லைகள் மாற்றியமைக்கப்பட்டன. பத்தாயிரம் கோடி மார்க் (ஜெர்மன் பணம்) போரின் நஷ்ட ஈடாக ஜெர்மனி கொடுக்க வேண்டி இருந்தது. முடியாட்சி முறையில் இருந்து அடுத்த சமூக வடிவத்திற்கு மாறும் கட்டத்தில் அந்த நாடு இருந்தது. அண்டை நாடான ரஷ்யாவில் ஸ்டாலின் தலைமையில் கம்யூனிஸ்ட் ஆட்சி வலுவாக அமைந்திருந்தது. ஜெர்மன் கம்யூனிஸ்ட் கட்சி ஐரோப்பா கண்டத்திலேயே ஆற்றல்மிக்க கட்சியாக விளங்கியது. மக்கள் ஆதரவு பெற்று செல்வாக்கோடு செயல்பட்டது. கட்சியின் ஊழியர்கள் சித்தாந்த மற்றும் அரசியல் ஞானத்தில் தேர்ந்தவர்களாக, வீரம் செறிந்தவர்களாக விளங்கினார்கள்.






ஜெர்மனி கம்யூனிஸ்டுகளின் கைகளுக்கு போய் விடக்கூடாது என அந்நாட்டு தேசிய முதலாளிகள் பெரிதும் கவலைப்பட்டார்கள். அந்த சமயத்தில் ஒரு சில கட்சிகள் இருந்தாலும், அவை கம்யூனிஸ்ட் கட்சியை எதிர்க்கும் ஆற்றல் கொண்டதாக இல்லை. ஜெர்மன் தொழிலாளர் கட்சி என்ற ஒரு சிறிய கட்சியை ஹிட்லர் வைத்திருந்தான். ஆட்சிக் கவிழ்ப்பு சதி வழக்கில் சிறை சென்று விடுதலை அடைந்திருந்தான். கம்யூனிஸ்ட் கட்சியை எதிர்க்க ஹட்லரை வளர்த்து விடுவது என அந்நாட்டு முதலாளிகள் முடிவு செய்தார்கள்.

கம்யூனிஸ்ட் கட்சிக்கு போட்டியாக தேசிய சோசலிஸ்ட் கட்சி என்று அவன் கட்சி பெயர் மாற்றம் செய்யப்பட்டது. பின்னாளில் அதுவே நாசிகள் என பிரபலம் அடைந்தது. ஹிட்லருக்கு முதலாளிகளிடமிருந்து பணம் ஆறாய் வந்து பாய்ந்தது. நாடு முழுவதும் அவன் கட்சிக்கு அலுவலக வசதிகள் செய்து தரப்பட்டன. அவன் கட்சியில் சூறாவளிப்படை என்ற குண்டர் படையை அமைத்தான். கம்யூனிஸ்டுகளை நாடு முழுவதும் கொலை வெறியுடன் தாக்குவது, அவர்களின் அலுவலகங்களை சூறையாடுவது, யூதர்களுக்கு எதிராக விஷம பிரச்சாரம் செய்வது, அவர்களையும், அவர்களின் நிறுவனங்களையும் தாக்குவது, கம்யூனிஸ்ட்களின் கூட்டங்களில் கலகம் செய்வது அவர்களின் முக்கிய அன்றாட பணியே இது தான். ஹிட்லரை மாவீரனாக, ஜெர்மனியை காக்க வந்த இணையற்ற தலைவராக அவனது பிம்பம் கட்டமைக்கப்பட்டது. தேர்தலில் அவன் கட்சி போட்டியிட்டு அறுதிப் பெரும்பான்மை இல்லாத, தனிப்பெரும் கட்சியாக வெற்றி பெற்றது.

1933 ஆம் ஆண்டு அன்றைய ஜெர்மனியின் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஹிண்டன்பர்க் ஜனாதிபதியாக பதவி வகித்தார். அவர் ஹிட்லரை பிரதமர் பதவி ஏற்க அழைத்தார். அந்த வைபவத்தின் போது விழா மாளிகைக்கு வெளியே கூடியிருந்த அவன் ஆதரவாளர்கள் ஹிட்லர் நீடூழி வாழ்க, யூதர்களையும், கம்யூனிஸ்டுகளையும் ஒழித்துக் கட்டுவோம் என ஆரவாரம் செய்தார்கள். ஹிட்லர் பதவி ஏற்ற ஒரு வருடத்திலேயே ஜனாதிபதி ஹிண்டன் பர்க் இறந்து போனார். ஜனாதிபதி தேர்தலை முறையாக நடத்தாமல், ஹிட்லர் சர்வாதிகாரியாக தன்னை அறிவித்துக் கொண்டான். பாராளுமன்றக் கட்டிடத்திற்கு அவனே தீ வைக்க சொல்லி, அந்தப் பழியை கம்யூனிஸ்ட் தலைவர்கள் மீது சுமத்தி அவர்களுக்கு எதிராக பிரச்சாரம் செய்தான். இந்த அபாண்டமான பழியை காரணமாக வைத்து கம்யூனிஸ்ட் தலைவர்களை பழி வாங்கினான்.

வரலாறு சந்தித்த எல்லா சர்வாதிகாரர்களைப் போலவே தனது இருப்பையும், ஆதிக்கத்தையும் நிலை நிறுத்திக் கொள்ள தனது சித்தாந்தத்தை பிரகடனப்படுத்தினான். முதலாளித்துவ வர்க்கம் அதனை சாதுரியமாக மக்களிடம் கொண்டு சென்று அவனுக்கு செல்வாக்கை தேடிக் கொடுத்தது.

ஜெர்மானியர்கள் ஆரிய இனத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள்தான் மனித இனத்திலேயே முதன்மையானவர்கள், முழு உலகையும் ஆள அனைத்து தகுதிகளையும் கொண்டவர்கள். பிரிட்டனும், பிரான்ஸும் ஜெர்மனியை அவமானப்படுத்தி அழித்தவர்கள். அவர்களை பழிக்கு பழிவாங்கி ஜெர்மனியின் இழந்த கௌரவத்தை மீட்க வேண்டும். யூதர்கள் ஜெர்மனியில் குடியேறி பிழைக்க வந்தவர்கள். மக்கள் தொகையில் இரண்டு சதவீதமான இவர்கள் ஜெர்மனியை தங்கள் ஆதிக்கத்தில் வைத்திருக்கிறார்கள். அரசின் முக்கியமான முடிவெடுக்கும் பதவிகளில் அமர்ந்து தேசத்தையே ஆளுகிறார்கள். இவர்கள் தான் பெரும் செல்வந்தர்களாகவும், வியாபாரிகளாகவும் இருந்து தேசத்தையே கொள்ளையடிக்கிறார்கள். தங்கள் ஆதிக்கத்தின் வலிமையால் ஜெர்மனிய மாதர்களை பெண்டாளுகிறார்கள். முதல் உலகப்போரில் ஜெர்மனியை காட்டிக் கொடுத்தவர்கள் யூதர்களும், கம்யூனிஸ்டுகளும்.

காரல் மார்க்ஸ் ஒரு யூதர். அவரின் தத்துவம் யூதர்களைக் காப்பாற்றி, அவர்களின் ஆதிக்கத்தை நிலை நிறுத்த உதவுகிறது. மனிதர்கள் அனைவரும் என்ற அவரது சித்தாந்தம் நடைமுறைக்கு ஒத்து வராது. இறைவன் மனிதர்களை ஏற்றத்தாழ்வாகத்தான் படைக்கிறான். தனித் திறமை படைத்த மனிதர்களே வரலாற்றின் போக்கை தீர்மானிக்கிறார்கள். கம்யூனிஸ்ட்களும், யூதர்களும் ஈவு இரக்கமில்லாமல் அழிக்கப்பட வேண்டியவர்கள். அவர்களின் அழிவின் மீது தான் வலுவான ஜெர்மனியை கட்டி எழுப்ப முடியும். இந்த அரும்பெரும் பணியை நிறைவேற்றவே இறைவன் என்னை படைத்துள்ளான். இதனை செயல்படுத்தும் அனைத்து திறமைகளையும் எனக்கு அளித்துள்ளான். இப்படியாக மிகுந்த வெறித்தனமாகவும், ஆவேசமாகவும் ஜெர்மன் தேசத்து இளைஞர்கள் மத்தியில் தன் சித்தாந்தத்தை பிரச்சாரம் செய்தான்.

**சிந்தனைமிக்க பேச்சை விட, உணர்ச்சிக் கொந்தளிப்பான நச்சுக் கருத்துக்கள் இளைஞர்களை எளிதில் ஆக்கிரமித்து விடும். ஹிட்லரின் வெறித்தனமான பேச்சு லட்சோப லட்ச இளைஞர்களை அவன்பால் ஈர்த்து, அவனை வலிமைப்படுத்தியது. அவனது நாசிக் கட்சி மிருக பலம் படைத்த கட்சியாக விரைந்து வளர்ந்தது.**

வரலாற்றின் இயங்கியல் விதி புறநிலையான அறிவியலையும், காரணிகளையும் அடிப்படையாகக் கொண்டது. எந்த கொம்பதி கொம்பனும் இந்த அறிவியலை புறந்தள்ளி வரலாற்றில் வாகை சூடி நிலைத்து நிற்கவில்லை. ஹிட்லரை போன்ற தன்தகுதி அறியாத அகநிலை அகங்காரவாதிகள் இறுதியில் துயரமான சோக முடிவையே சந்தித்தார்கள். நெப்போலியனும் வரலாற்றை நியதிக்கு மேலாக தன்னை வைத்து மதிப்பிட்டான். முடிவில் படுதோல்வி அடைந்து வீழ்ந்தான். முடியாட்சி முறை வீழ்ந்து அடுத்த கட்டத்திற்கு செல்லும் வரலாற்றின் பாதையை மறித்தான். காலம் கடந்து போன முடியாட்சி முறை என்ற பழைய வரலாற்று வடிவத்தை தக்க வைக்க வீணாக முயன்றான். இப்படிப்பட்ட இடைக்கால சரித்திர கட்டங்களில் நெப்போலியன், ஹிட்லரை போன்ற சர்வாதிகாரிகள் தற்காலிகமாக வெற்றி பெற முடிந்தது. ஆனால் அது சாசுவதமாக சரித்திரத்தில் சாதித்து நிற்க முடியாமல் சரிந்து விழுந்தது.

அடிப்படையில் முதலாளித்துவ உற்பத்தி முறைக்கு அதன் சித்தாந்தமும், அதன் பாராளுமன்ற முறையும், அதன் லாபம் குவிக்கும் வழியும்தான் ஒத்துசைவாக வரும். அதுவும் ஒரு காலகட்டத்தில் மீள முடியாத நெருக்கடியில் சிக்கித் தவிக்கும். பெருந்திரளான மக்களின் நலனை சோசலிச உற்பத்தி முறையும், அதன் சம நீதியான விநியோக முறை மட்டுமே உறுதி செய்ய முடியும்.

லாபத்தையும், தன் செல்வக் குவிப்பையும் ஏகபோகமாக்கிக் கொள்ளவும், சந்தையில் தன் ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொள்ளவும் விரும்பிய ஜெர்மன் முதலாளிகளின் எதிர்பார்ப்புக்கு மாறாக ஹிட்லர் தனது கண்மூடித்தனமான எல்லை மீறிய போர் தந்திரத்தால் அந்த நாட்டை பேராபத்தில் கொண்டு போய் இறக்கினான். அதற்கு நேர்மாறாக சோசலிச உற்பத்தி முறையை கொண்ட ரஷ்யா மற்றும் அதன் தலைவர் ஸ்டாலின் நீண்ட கால யுத்தத்தை தாக்கு பிடித்தார்கள். எந்த எதிர்பாராத திருப்பங்களையும், பின்னடைவுகளையும் வெற்றியாக்கி முன்னேறிக் கொண்டே சென்றார்கள்.

ஹிட்லர் புறநிலை எதார்த்தத்திற்கும், விதிகளுக்கும் எதிராக பயணித்து படுபாதாளத்தில் வீழ்ந்தான். ஸ்டாலின் பாதை வரலாற்று விதிகளுக்கு முரண் இல்லாமல் இசைவாக சென்றது. எனவே அமெரிக்காவும், பிரிட்டனும் பல உள்ளடி வேலைகளை செய்தும், ஹிட்லரோடு, ரஷ்யாவும் வீழ்ந்து போகட்டும் என்ற அவர்களின் ராஜதந்திரம் அச்சு முறிந்து குடை சாய்ந்தது. தர்மம் சூதை வென்று வெற்றி கொடி நாட்டியது.

ஸ்டாலின் யோசனைப்படி நேச நாடுகள், பல போர் முனைகளை திறந்திருந்தால் ரஷ்யாவும், மனித குலமும் இத்தனை கொடிய பேரழிவை சந்தித்திருக்காது. ஹிட்லரின் ராணுவத் தளபதிகளும், ஆலோசகர்களும் ரஷ்யா மீது படையெடுப்பது பெரிய பின்னடைவை ஏற்படுத்தும் என்று எச்சரித்தார்கள். அவற்றை ஏற்காத அவனின் முரட்டு அகந்தை அவனுக்கே எமனாக வந்து வாய்த்தது.

நெப்போலியனின் ரஷ்யப்படை எடுப்பு அவனது பேரரசையே நிர்மூலம் ஆக்கியது. அதே கதிபோக்கை ஹிட்லரும் சந்தித்தான். தன்னைத் தானே சுட்டு தற்கொலை செய்து கொண்டு எரிந்து போன சடலமாக குப்பையில் கிடைந்தான்.

இலட்சக்கணக்கான கம்யூனிஸ்டுகளையும், கம்யூனிஸ்ட் தலைவர்களையும் படுகொலை செய்தான். யூதர்களை சித்திரவதை செய்து கொலை செய்வதற்கு ஆஸ்ட்டுவிச் என்ற இடத்தில் பெரிய கொலைக் களத்தை நிறுவினான். அப்பாவியான பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் என்று யாரையும் விட்டு வைக்கவில்லை. அதனை இன்றும் காட்சிப்படுத்தி வைத்துள்ளார்கள். ஆவணப்படம் கூட உள்ளது. கொல்லப்பட்ட குழந்தைகள் அணிந்திருந்த உடைகள் மற்றும் காலணிகள் காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளன. அதனை தினமும் பல நாடுகளில் இருந்து வரும் பயணிகள் பார்த்து கண்ணீரும், கனத்த நெஞ்சமுமாக வெளியே வருகிறார்கள்.

வெற்றி மேல் வெற்றி பெற்ற ரஷ்ய செஞ்சேனைக்கு ஹிட்டரை உயிரோடு பிடிக்க ஸ்டாலின் உத்தரவிட்டார். ஜெர்மன் பாராளுமன்றம் ரீச்ஸ்டாக்கை கைப்பற்றி கம்யூனிஸ்ட் கொடியை கம்பீரமாக பறக்க விட்டார்கள்.

ஓநாய் குகை என்று அழைக்கப்பட்ட ஹிட்லரின் அரண்மனையை யுத்தத்திற்கு பின் செஞ்சேனை கைப்பற்றியது. கம்யூனிஸ்டுகளை முற்றாக ஒழிப்பேன் என்று கொக்கரித்த கயவன் ஹிட்லர் கம்யூனிஸ்டுகளின் காலடியில் அவன் வளர்த்த நாயோடு சடலமாக வீழ்ந்து கிடந்தான்.

கம்யூனிஸ்ட்களை வீழ்த்துவோம் என்று வெற்று முழக்கமிடும் ஞான சூன்யங்கள் இன்றும் உலகம் முழுவதும் இருக்கிறார்கள். ஹிட்லரை நாயகனாக கருதும் பாசிசவாதிகள் இந்தியாவிலும் இருக்கிறார்கள். இயற்கை மானிடத்திற்கு வழங்கியுள்ள அருங்கொடைதான் பன்முகத்தன்மை. அதுதான் அழகு – வலிமை – இனிமை – ரசனை மற்றும் உயிர்ப்புத்தன்மை.

ஹிட்லரின் ஒரே நாடு, ஒரே இனம், ஒரே மொழி, ஒரே கலாச்சாரம் மற்றும் ஒரே அடையாளம் என்ற சித்தாந்தத்தை இந்தியாவும் ஏற்காது அதனை தோற்கடிப்பது உறுதி.

இந்த நச்சு சித்தாந்தம் தற்காலிகமாக வெற்றி பெறுவது போல் தோன்றலாம். இறுதி வெற்றி என்றும் வரலாற்றின் லட்சிய மைந்தர்கள் கம்யூனிஸ்டுகளுக்கே!

தொடர்புக்கு: 96007 23726

# சிறு பத்திரிக்கையாளர்களை



இளசை கணேசன்

**பத்திரிகையாளர்கள் அடையாள அட்டை பெறுவதற்கான விண்ணப்ப படிவம்... பத்திரிகையாளர்கள் நல வாரியத்தில் உறுப்பினர்களாக சேர்வதற்கான விண்ணப்ப படிவம்... ஆகிய இரண்டு விண்ணப்ப படிவங்களையும் தமிழ்நாடு அரசு இணையதளத்தில் வெளியிட்டுள்ளது.**

இவை இரண்டுமே பத்திரிகையாளர் களிடையே பெரும் அதிர்ச்சியையும், கொந்தளிப்பையும் ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக சிறு பத்திரிக்கைகளை முழுமையாக ஓரங்கட்டும் வகையில் அமைந்துள்ளது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு கொண்டு வருகிறோம்.

மேற்கண்ட இரு அம்சங்களிலும் அரசு சார்பில் பத்திரிகையாளர்களுக்கு தெளிவு படுத்த வேண்டியவைகளும் இருக்கின்றன.

அதேபோன்று பத்திரிகையாளர்கள் சார்பில் அரசுக்கு தெளிவுபடுத்த வேண்டிய விபரங்களும் இருக்கின்றன.

- பத்திரிக்கையாளர்கள் என்பவர்கள் யார்?
- தமிழக அரசு எந்த அடிப்படையில் பத்திரிகையாளர்களை வரையறுக்கிறது?
- பத்திரிகைத் துறையில் பல்வேறு பிரிவுகளில் பணியாற்றும் அனைவருமே பத்திரிகையாளர்கள்தான். ஆனால் செய்தியாளர்களை மட்டும் தனியாகப் பிரித்து, அதிலும் வடிகட்டி எண்ணிக்கையைச் சுருக்கி, விரல் விட்டு எண்ணக்கூடிய செய்தியாளர்களை மட்டுமே பத்திரிகையாளர்கள் என்று அரசு வரையறுப்பது எந்த வகையில் நியாயம் ?
- பத்திரிகையாளர்கள் அடையாள அட்டை மற்றும் நல வாரியத்தில் உறுப்பினராக சேர்த்தல் ஆகியவற்றை அரசு எந்த நோக்கத்திற்காக செயல்படுத்தப்படுகிறது?
- பத்திரிகையாளர்கள் போராடிப் பெற்ற சில சலுகைகளை பத்திரிக்கையாளர்கள் பெறுவதற்கு அரசு அடையாள அட்டை பெறுவதை முன் நிபந்தனையாக்கப்படுவது எந்த வகையில் நியாயம்?

இது போன்ற பிரச்சனைகளுக்கு அரசு சார்பில் விளக்கம் அளித்து தெளிவுபடுத்த வேண்டியது அவசியம்.

2023 ஆம் ஆண்டிற்கான பத்திரிக்கையாளர்கள் அடையாள அட்டை பெறுவதற்கான வழி முறையில் அதற்கான விண்ணப்ப படிவத்தில் இரண்டு வகையான கடுமைகள் கட்டப்பட்டுள்ளன.

1. நிறைவேற்ற முடியாத விதிமுறைகள்.
2. இந்த ஆண்டு முதலே அமல்படுத்த வேண்டும் என்பது.

இந்த இரண்டுமே அரசு பத்திரிகையாளர்களை எப்படி நடத்த நினைக்கிறது? என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.

அடையாள அட்டை பெறுவதற்கான விதிமுறைகள் கடந்த காலங்களைக் காட்டிலும் கடுமையாக்கப்பட்டுள்ளன.

இது பத்திரிகையாளர்களை வடிகட்டும் விதமாக அதிலும் குறிப்பாக சிறு, குறு பத்திரிக்கையாளர்களை ஜமுக்காளத்தில் வடிகட்டும் விதமாக அமைந்துள்ளது.

அடையாள அட்டை விண்ணப்ப படிவத்தோடு இணைக்கப்பட வேண்டியவை என்பதில்...

- பத்திரிகையாளர்களின் பணி நியமன ஆணை.
- பத்திரிக்கையாளர்களின் கல்விச் சான்றிதழ்.
- வங்கி மூலம் ஊதியம் பெறுவதற்கான சான்று.
- மூன்று ஆண்டுகளுக்கான ஆடிட்டர் மூலம் வரவு செலவு கணக்கு.
- காலம் முறை இதழ்கள் 10000 பிரதிகள் அச்சடித்ததற்கான அச்சக பில்கள்.

இது போன்ற விதிமுறைகள் நடைமுறையில் நிறைவேற்றப்படுவது மிகவும் கடினமான ஒன்று. இது அரசு அறியாத ஒன்றல்ல.

பத்திரிகையாளர்கள் அரசுக்கு தெளிவு படுத்த வேண்டிய விவரங்கள் வருமாறு.

- அடையாள அட்டை பெறுவதற்கான தற்போதுள்ள விதிமுறைகளை பெரிய பத்திரிக்கை நிறுவனங்களே நிறைவேற்ற முடியாது என்கிற நிலையில் சிறு, குறு பத்திரிக்கைகள் எவ்வாறு நிறைவேற்ற இயலும்?
- மஜிதியா சம்பளக் குழு பத்திரிக்கையாளர்களுக்கு பரிந்துரைத்த ஊதியத்தை பெரிய பத்திரிகை நிறுவனங்களே கூட நிறைவேற்றுவதில்லை.
- சமீப காலங்களில் பெரிய பத்திரிகை நிறுவனங்களில் காண்ட்ராக்ட் (Contract) முறையில் பத்திரிகையாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள் இவர்களுக்கு நேரிடையாக பத்திரிக்கை நிறுவனங்கள் சம்பளம் கொடுக்காது. ஒப்பந்ததாரர்கள் மூலமே ஊதியம் கொடுக்கப்படுகிறது.

நிலைமை இப்படி இருக்க வங்கிகள் மூலம் சம்பளச் சான்றிதழ் எவ்வாறு தர இயலும்?

- பத்திரிகையாளன் என்பவன் யார் ?
- பத்திரிகையாளனின் நோக்கம் என்ன ?
- பத்திரிகையாளன் என்பவன் சமூகப் பொறுப்புள்ளவன். சமுதாயத்தை அறிந்து புரிந்து சமுதாயத்தை பிரதிபலிப்பவன் சமுதாயத்தை மாற்றத் துடிப்பவன்.

"அறிவுக்கண்ணை சரியாகத் திறந்தால்
பிறவிக் குருடனும் கண் பெறுவான்"
– என்ற பட்டுக்கோட்டையின் வரிகளுக்கு ஏற்ப,
"காரிருள் அகத்தில் நல்ல
கதிரொளி நீதான்"
– என்ற பாவேந்தரின் வரிகளுக்கு ஏற்பவும்...

பத்திரிகையாளர்களின் செயல்பாடு அமைய வேண்டும்.

- இந்திய விடுதலைப் போர் காலகட்டத்தில் "ஆங்கில ஏகாதிபத்தியத்திடமிருந்து இந்தியாவுக்கு விடுதலை"

என்ற ஒற்றை லட்சியமும், செயல்பாடும் பத்திரிக்கைகளுக்கு இருந்தது. விற்பனை எண்ணிக்கை, வணிக நோக்கு பிரதானமாக இருக்கவில்லை.

இந்திய விடுதலைக்குப் பின்பும் இந்தியச் சமூகம் பொருளாதார விடுதலை பெறவில்லை.

உழைப்பு சுரண்டல் காரணமாக பொருளாதாரத்தில் ஏற்றத்தாழ்வுகள் அதிகரித்துக் கொண்டே வருவதால் வர்க்க முரண்பாடும் கூர்மை அடைந்தே வருகிறது.

ஊடகம் , பத்திரிக்கை துறையிலும் இத்தகைய வர்க்க முரண்பாடுகள் தவிர்க்க முடியாது. விற்பனை எண்ணிக்கை என்பதோடு வணிக நோக்கமும் சேர்ந்து கொண்டது.



தற்போது பெரிய பத்திரிகைகள், பெரிய ஊடகங்கள் கார்ப்பரேட்டுகளின் ஆதிக்கத்தில் இருக்கிறது. இவைகளின் செயல்பாடு அடிப்படையில் கார்ப்பரேட்டுகளின் நலன்களை பிரதிபலிப்பாகவே இருக்கும்.




உழைக்கும் மக்களின் நலன்கள் மற்றும் உழைக்கும் பத்திரிகையாளர்களின் நலன்கள் பற்றி கார்ப்பரேட் பத்திரிகை நிறுவனங்கள் கவலைப்படாது.

இது அரசுக்கு தெரியாத ஒன்றல்ல. நன்றாகவே தெரியும்.

அரசின் செயல்பாட்டின் நோக்கங்கள் கார்ப்பரேட் பத்திரிகை நிறுவனங்களுக்கா ? அல்லது உழைக்கும் பத்திரிக்கையாளர்களுக்கா ? என்பது தெளிவுபடுத்தப்பட வேண்டும்.

சிறு பத்திரிகைகளின் உழைக்கும் பத்திரிக்கையாளர்களை ஓரங்கட்டுவது என்பது சமூக ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் விளிம்பு நிலை மக்களை ஓரங்கட்டப்படுவதற்கு ஒப்பாகும்.

- சிறு பத்திரிகைகளை பொறுத்த அளவில் பெரும்பாலும் வணிக நோக்கில் செயல்படுவது இல்லை.
- நியூஸ் பிரிண்ட் பேப்பர், அச்சுக் கூலி, விநியோகச் செலவு, நிர்வாகச் செலவு என்று கணக்கிட்டால் பத்தாயிரம் பிரதிகள் அச்சடித்தாலும் சிறு

---

# உலகக் கால்ப




வீ.தர்மதாஸ்

**உலக மக்கள் தொகை தற்போது 800 கோடி என்றால், ஏறத்தாழ 320 கோடி மக்கள் முழுமூச்சாக இணைந்திருப்பது உலகக் கால்பந்து திருவிழாவுடன் தான். எந்த ஆட்டத்திற்கும் இல்லாத ஒரு சிறப்பு கால்பந்து ஆட்டத்திற்கு இருப்பதற்கு காரணம் என்ன? உலகின் கால்பந்தாட்டம் ஒன்று தான். எல்லா நாடுகளிலும் விளையாடப்படுகின்ற ஆட்டமாக உள்ளது. ஆசியா, ஐரோப்பா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஆப்பிரிக்கா அனைத்துக் கண்டங்களையும் ஒன்றிணைக்கும் பெருமைமிகு விளையாட்டு கால்பந்துதான்.**

இந்தியாவை பொறுத்தவரை கால்பந்து ஆர்வம் மாநிலத்துக்கு மாநிலம் வித்தியாசப்படுகிறது. தமிழ்நாட்டைவிட கேரளா, கோவா, வங்காளம், அஸ்ஸாம், பஞ்சாப் மக்கள் கால்பந்தினை அதிகம் நேசிப்பவர்கள். மராட்டியம், ஜார்க்கண்ட், பீகார், ஒரிஸா தற்போது கால்பந்தை நேசிப்பதில் முன்னேறி வருகிறது. உலகக்கால்பந்து விளையாட்டின் போது கல்கத்தாவில் பிரம்மாண்டமான ஸ்கிரீன் தெருவெல்லாம் வைக்கப்பட்டு மக்கள் ஆரவாரமாக பார்ப்பார்கள். இத்தனைக்கும் நமது பாரதத்தாய்திருநாடு ஒருமுறை கூட உலகக்கோப்பை கால்பந்து போட்டிக்கு தகுதி பெற்றதில்லை. உலக கால்பந்து தரவரிசையில் நாம் 106வது இடத்தில் இருக்கிறோம்.

நவம்பர் 20ம் தேதி உலகக்கால்பந்து போட்டி கத்தார் நாட்டில் தொடங்க உள்ளது. இது 22வது உலகக் கால்பந்து போட்டியாகும். முதன்முதலாக ஒரு அரபு நாடு இந்த போட்டியை நடத்தும் வாய்ப்பு கிடைத்துள்ளது. 21வது உலகக்கால்பந்து ரஷ்யாவில் நடந்தது. அதில் நடப்பு சாம்பியன் பிரான்ஸ் அணி 4–2 என்ற கோல் கணக்கில் குரோஷியாவை வீழ்த்தி 2வது முறையாக சாம்பியன் பட்டம் வென்றது. அதில் பிரேசில் ஜாம்பவான் பீலே 1958ல் மிக இளம்வயதில் (வயது 19) கோல் அடித்த சாதனை முறியடிக்கப்பட்டு பிரான்ஸ் வீரர் மாப்பே 18 வயதில் கோல் அடித்து பிரான்ஸ் உலகக்கோப்பை வாங்க காரணமாக இருந்தார்.

உலகின் பலமான கால்பந்து அணிகளான பிரான்ஸ், பிரேசில், ஜெர்மனி, இங்கிலாந்து, அர்ஜெண்டினா, உருகுவே, போர்ச்சுகல், பெல்ஜியம் என 32 அணிகள் களம் காண்கின்றன. முதலில் லீக். முறையும் பின்னர் 2வது சுற்றில் நாக் அவுட் முறையும் கடைபிடிக்கப்படும். போட்டியை நடத்த ஏகாதிபத்திய அமெரிக்கா எல்லா வழிகளையும் கையாண்டு பார்த்தும் 148 என்ற ஓட்டுக்கணக்கில் கத்தாரிடம் தோல்வியைத் தழுவியது. அதற்கு பழிவாங்க அரசியல் ரீதியாக கத்தாருக்கு பல்வேறு நெருக்கடிகளைக் கொடுத்தது. அதில் இருந்து கத்தார் மீண்டு 15 இலட்சம் பேர் பார்க்கும் 9 ஸ்டேடியம் கட்டி அசத்தி இருக்கிறது. ஸ்டேடியம் கட்டுவதில் பல ஆயிரம் தொழிலாளர்கள் தங்கள் உயிரை இழந்துள்ளார்கள். பாட்டாளி வர்க்கம் படைத்த பிரம்மாண்ட அரங்குகளால் கத்தார் ஜொலித்துக் கொண்டுள்ளது. இதுவரை போட்டிக்கான செலவு ரூ.1 லட்சத்து 50 ஆயிரம் கோடி. எண்ணெய் வளம் கொழிக்கும் நாடு கத்தார் என்பதால் இது சாத்தியமாயிற்று. இதற்கு முன்னர் 20 வது உலக கால்பந்து போட்டி பிரேசில் நகரில் நடைபெற்றபோது மக்கள் போட்டியை நடத்தக்கூடாது என்று பல்வேறு இடங்களில் போராட்டம் நடத்தினார்கள். அதையும் மீறி அங்கு உலகக்கோப்பை போட்டி நடந்தது.




உலகத்திலேயே கால்பந்தை தேசியக்கொடியின் மத்தியில் பொறித்துள்ள ஒரே நாடு பிரேசில் மட்டுமே. இதுவரை 5 முறை உலகக் கோப்பையை கைப்பற்றியுள்ளது. பரிசுகளில் முதல் இடம், இரண்டாம் இடம் மட்டுமல்ல அதிக கோல் போடும் வீரர்களுக்கு தங்க காலணி பரிசும், கடைசி நேரத்தில் கோல்போட்டு வெற்றியை ஈட்டும் வீரருக்கு தங்கப்பந்து பரிசும், கோல்களை தடுப்பதில் சாதனை புரிந்தவருக்கு தங்க கையுறையும், சர்ச்சைகள் இல்லாமல் விளையாடும் வீரர்களுக்கு ஃபேர் பிளே விருதும், குறைந்த வயதில் விளையாட வந்து கோல் அடித்தவருக்கு சிறந்த இளம்

பத்திரிக்கைகளுக்கு நஷ்டம் ஏற்படுவதால் பத்திரிக்கை நடத்தவே முடியாது.

- காட்சி ஊடகங்கள், சமூக ஊடகங்கள் என்று மீடியாக்கள் விரிவுபட்ட நிலையில் சிறு பத்திரிக்கைகள் எவ்வாறு தாக்குப்பிடிக்க முடியும்?
- நஷ்டத்தோடு இயங்கும் சிறு பத்திரிக்கைகள் 10,000 பிரதிகள் எப்படி அச்சடிக்க முடியும்?
- மிக மிக குறைவான செலவில் நஷ்டத்தோடு நடத்தப்படும் சிறு பத்திரிக்கைகளுக்கு ஆடிட்டர் மூலம் கணக்கு தர முடியுமா?
- அதுவும் மூன்றாண்டு கணக்கை இப்போதே கேட்பது எந்த வகையில் நியாயம்?



ஒரு சிலவற்றை தவிர்த்து பல்வேறு சிறுபத்திரிக்கைகள் சமூகப் பொறுப்புணர்வுடன், மக்கள் நலனை முன்வைத்து, ஜன நாயகத்தின் நான்காவது தூண்களாக செயல்படுகின்றன.

பொருத்தமானது.


சிறு பத்திரிக்கையாளர்களின் இந்த யதார்த்த உண்மை நிலையை அரசு புரிந்து கொள்ள வேண்டும். சிறு பத்திரிக்கையாளர்களை கை தூக்கி உதவிட அரசு முன்வர வேண்டும்.

- அந்த வகையில் சிறு மற்றும் குறு பத்திரிக்கையாளர்கள் அடையாள அட்டை பெறுவதற்கான விதிமுறைகள் தளர்த்தப்பட வேண்டும்.
- நடப்பு ஆண்டிலிருந்து அமலுக்கு கொண்டு வருவது சாத்தியமில்லை. அடுத்த ஆண்டிலிருந்து அமலுக்கு கொண்டு வர வேண்டும்.

தமிழ்நாடு பத்திரிகையாளர்கள் பாதுகாப்பு கூட்டமைப்பின் சார்பில் கீழ்க்கண்ட ஆலோசனைகளை அரசுக்கு முன் வைக்க விரும்புகிறோம்.

- அனைத்து பத்திரிகைகளும் RNI பதிவு பெற்றிருக்க வேண்டும்.
- ஆண்டுதோறும் RNI பதிவு புதுப்பிக்கப்பட வேண்டும்.
- பணியாற்றும் பத்திரிக்கை நிறுவனங்களிடமிருந்து பணியாற்றுவதற்கான சான்றும், அனுபவச் சான்றிதழும் தரப்பட வேண்டும்.

# ள அரசு ஒதுக்கக் கூடாது!



நஷ்டத்தை ஈடுகட்ட எல்லா வகையிலும் செலவுகளை குறைக்கும் கட்டாயம் சிறு பத்திரிக்கைகளுக்கு ஏற்படுகிறது.

இதில் ஊதியமும் ஒன்று. எனவே சிறு பத்திரிக்கைகளில் ஊதியம் பிரதானமானதாக இருக்காது. சமூகப் பொறுப்புணர்வு என்ற நோக்கம் பிரதானமாக இருக்கும்.

- ஊதியம் வாங்காமலும், குறைந்த ஊதியத்திலும் அதுவும் தொடர்ந்து பெற முடியாமலும் அர்ப்பணிப்பு முறையில் செயல்படும் சிறு குறு பத்திரிகையாளர்கள் அதிகம்.
- இவர்களை சம்பளம் என்ற வரையறைக்குள் அதுவும் வங்கி மூலம் பெற வேண்டும் என்று கொண்டு வருவது நடைமுறைக்கு எப்படிப் பொருந்தும்?

"கற்பது என்பது 'ஞானம்' கற்பித்தல் என்பது 'கடமை' இந்த இரண்டுமே மக்களிடமிருந்துதான்" என்றார் தத்துவஞானி கன்பூசியஸ்.

கல்வித் தகுதி என்பதை விட பத்திரிக்கையாளர்களுக்கு சமுதாய ஞானம் மற்றும் அனுபவங்களே போதுமானது !

- பத்திரிகைகள் நிற்காமல் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்க வேண்டும்.
- தலைமைச் செயலகம், லோக்கல் காவல் நிலையம், உள்ளாட்சி அலுவலகங்கள், கிளை, நூலகங்கள் மற்றும் குறிப்பிடத்தக்க பொதுமக்களுக்கும் விநியோகிக்கப்பட வேண்டும்.
- 3000 பிரதிகளுக்கு குறையாமல் அச்சடித்தது விநியோகிக்க வேண்டும்.
- இவற்றை அரசு சீராக கண்காணித்து கட்டுப்படுத்த வேண்டும்.
- அரசு அடையாள அட்டை வழங்குவதில் Accred-ittion Card- Press Pass என்ற பேதம் தேவையில்லை. ஒரே அடையாள அட்டையாக வழங்க வேண்டும்.

இதில் தமிழக அரசு கவனம் செலுத்தி உரிய முறையில் மாற்றம் கொண்டு வரும் என்று நம்புகிறோம்!

அரசின் நோக்கங்களில் முக்கியமான ஒன்றை பத்திரிகையாளர்கள் பாதுகாப்பு கூட்டமைப்பு புரிந்து கொள்கிறது.

பத்திரிகைத் துறைக்கு சம்பந்தமில்லாதவர்கள், எந்தப் பத்திரிகையிலும் பணியாற்றாதவர்கள், பத்திரிகை அச்சடிக்காமல் டம்மி மட்டும் போட்டுக்கொண்டு அதை நகலெடுத்து ஏமாற்றுபவர்கள் மற்றும் குறுக்கு வழியில் புகுந்து அடையாள அட்டை பெற முயற்சிப்பவர்கள் இருக்கிறார்கள்.

இவர்கள் கண்டிப்பாக கண்காணிக்கப்பட்டு தடுக்கப்பட வேண்டும்; தண்டிக்கப்பட வேண்டும்.

இதில் எங்களது தமிழ்நாடு பத்திரிகையாளர்கள் பாதுகாப்பு கூட்டமைப்புக்கு எந்தவித மாற்றுக் கருத்தும் இல்லை.

போலி பத்திரிகையாளர்களை, ஏமாற்று பத்திரிகையாளர்களை தடுப்பதில் எங்களது பத்திரிகையாளர்கள் பாதுகாப்பு கூட்டமைப்பு அரசுக்குத் துணை நிற்கும்..

சமூகப் பொறுப்புணர்வு என்ற நோக்கத்தோடு செயல்படும் உண்மையான சிறு பத்திரிக்கையாளர்கள் பாதிக்கப்படக்கூடாது என்பதில் அரசு மற்றும் பத்திரிக்கையாளர்கள் ஒன்று பட்டு நிலை எடுத்துச் செயல்பட வேண்டும்.

பத்திரிகையாளர்கள் நல வாரியத்தை பொருத்தவரையில் எங்கள் தமிழ்நாடு பத்திரிகையாளர்கள் பாதுகாப்பு கூட்டமைப்பின் சார்பில் கீழ்க்கண்டவற்றை முன் வைக்கிறோம்.

- நலவாரியத்தின் செயல்பாடுகள் வெளிப்படையாக அமைய வேண்டும்.
- நல வாரியத்தின் செயல்பாடுகளை முறைப்படுத்த பத்திரிகையாளர் சங்கங்களை அரசு அழைத்துப் பேச வேண்டும்.
- நல வாரியத்திற்கான நிதி எங்கிருந்து வருகிறது? என்பது தெளிவு படுத்தப்பட வேண்டும்.
- ஊடக நிறுவனங்களில் பெறப்படும் விளம்பரங்களில் 5 சதவீதம் நலவாரியத்திற்கு சேர வேண்டும்.
- பெரிய ஊடக நிறுவனங்களின் ஆண்டு வருமானத்தில் 3 சதம் நல வாரியத்திற்கு செலுத்தப்பட வேண்டும்.
- ஆண்டுதோறும் அரசு சார்பில் ஒரு குறிப்பிட்ட தொகையை நல வாரியத்திற்கு செலுத்தப்பட வேண்டும்..
- நலவாரிய குழு ஜனநாயகமாக்கப்பட வேண்டும். அலுவல் சாரா பிரதிநிதிகளின் எண்ணிக்கை விரிவுபடுத்தப்பட வேண்டும்.
- மற்ற நலவாரியங்களைப் போன்று பத்திரிக்கையாளர் நல வாரியத்திலும் முத்தரப்பு பிரதிநிதித்துவத்தில் பத்திரிகையாளர் சங்கங்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும்.

தமிழ்நாடு பத்திரிகையாளர் பாதுகாப்பு கூட்டமைப்பு சமூகப் பொறுப்புணர்வோடு பல்வேறு பத்திரிக்கையாளர் சங்கங்களை கூட்டமைப்பாக ஒருங்கிணைத்து,

பத்திரிகையாளர்களின் நியாயமான கோரிக்கைகளை வலியுறுத்தி தொடர்ந்து போராடி வருவதோடு, பத்திரிக்கையாளர்கள் ஒற்றுமைக்கு முன்னுதாரணமாக ஓராண்டை வெற்றிகரமாக கடந்து செயல்பட்டு வருகிறது.

பதிவுபெற்ற கூட்டமைப்பாக விளங்கும், தமிழ்நாடு பத்திரிக்கையாளர்கள் பாதுகாப்பு கூட்டமைப்புக்கு நல வாரியத்தில் பிரதிநிதித்துவம் வழங்க வேண்டும்.

போலி பத்திரிகையாளர்களை மிரட்டல், பத்திரிகைகளை களை எடுக்கின்றோம் என்ற பெயரில் பத்திரிகையாளர்களையும், சிறு பத்திரிகையாளர்களையும் முடக்கும் போக்கை செய்தி மக்கள் தொடர்புத் துறை கைவிட வேண்டும்.

பத்திரிகையாளர்கள் நல வாரியம் மற்றும் அடையாள அட்டை வழங்குவதில் பெரும்பான்மையான பத்திரிகையாளர்கள் பயன்பெறும் வகையில் அரசு அணுகுமுறையை கையாள வேண்டும் என்று தமிழ்நாடு பத்திரிகையாளர்கள் கூட்டமைப்பு சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.

**தொடர்புக்கு: 72001 78028**

# ந்து திருவிழா




வீரர் விருதும் தரப்படுகிறது.

1958ஆம் ஆண்டு பிரேசில் ஜாம்பவான் பிலே இறுதி ஆட்டத்தில் கோல் அடித்து பெற்ற வெற்றியைக் காண கண்கோடி வேண்டுமென்று சொல்வார்கள். இந்த கால்பந்து போட்டியில் இன்னொரு சுவாரசியம் உண்டு. சேம் சைடு கோல் என்று அழைக்கப்படும் சுயகோல் அடித்து வேதனை மேல் வேதனைத்தரும் சம்பவங்களும் நடைபெறும். கடந்த 21வது ரஷ்ய உலகக்கோப்பை போட்டியில் 12 சுயகோல்கள் அடிக்கப்பட்டு அது சாதனையாக கருதப்பட்டது. இந்த முறை கத்தாரில் இந்த சாதனை அல்லது வேதனை தொடருமா? என்ற கேள்வியும் எழுந்துள்ளது. சுயகோல் போட்டு தன்னுடைய நாட்டிற்கு தோல்வியை வாங்கிக்கொடுத்த வீரரை கொலம்பியா இளைஞன் ஒருவன் சுட்டுக்கொன்று விட்டான். அப்படியென்றால் இந்த ஆட்டம் எத்தனை வெறித்தனத்தை சிலருக்கு உண்டாக்கி விடுகிறது என்பதையும் வருத்தத்தோடு நினைத்துப்பார்க்க வேண்டியுள்ளது.

13.07.1930 அன்று முதல் உலகக் கால்பந்து போட்டி துவங்கி தென்அமெரிக்க நாடான உருகுவே முதல் தங்கக்கோப்பையை கவர்ந்து சென்றது. அடுத்து கால்பாந்தாட்டத்தால் உலமையே தன் பக்கம் இழுக்க முடியும் என்று நிறுபித்த மாவீரன் அர்ஜெண்டினா நாட்டு மாரடோனா தான். ஒரு ஆள் அல்ல! இரு ஆள் அல்ல! ஏழு பேரின் தடையை தாண்டி மாயாஜாலம், மந்திரஜாலம், இந்திரஜாலம், தந்திரஜாலம் எப்படி வேண்டுமொனாலும் வைத்துக்கொள்ளலாம். அப்படி 1986 ஆம் ஆண்டு இங்கிலாந்திற்கு எதிராக அவர் அடித்த கோல் தான் 20ஆம் நூற்றாண்டின் இணையற்ற கோல் என்ற பட்டத்தை தக்க வைத்துள்ளது.

பிடரல் காஸ்ட்ரோவை சந்தித்து கியூபா மருத்துவத்தால் தனது போதை மாத்திரை பழக்கத்தை கைவிட்டார். எனது சித்தப்பா பிடல் காஸ்ட்ரோவால் நான் 15 ஆண்டு கூடுதலாக உயிர் வாழ்ந்தேன் என்று சொன்ன மாரடோனா, 21 ஆண்டுகள் விளையாடி 190 போட்டிகளில் 311 கோல்கள் அடித்த சாதனைகளை விவரிக்க வார்த்தைகளே இல்லை. கல்கத்தாவில் மாரடோனா சிலை இன்றும் கம்பீரமாய் காட்சியளிக்கிறது. தப்பித்தவறி மேற்கு வங்கத்தில் பிஜேபி ஆட்சிக்கு வந்து விட்டால் பிடல் காஸ்ட்ரோவின் தத்துமகன் என்ற காரணத்தால் மாரடோனாவின் சிலையைக்கூட அப்புறப்படுத்தி விடுவார்கள்.

மாரடோனாவின் சாதனை கத்தாரில் முறியடிக்கப்படுமா என்று கால்பந்து உலகம் ஆவலோடு எதிர்பார்த்துள்ளது. உலகின் 50வது தர வரிசையில் உள்ளது கத்தார். தனது குருப் ஏ அணியில் ஈக்குவடார், செனகல், நெதர்லாந்துவுடனும், குருப் பி யில் இங்கிலாந்து, ஈரான், அமெரிக்கா, வேலஸ் அணிகளும், குருப் சி யில் அர்ஜெண்டினா, சவுதி அரேபியா, மெக்சிகோ, போலந்து அணிகளும், குருப்டி யில் பிரான்ஸ், டென்மார்க், துனிசியா, ஆஸ்திரேலியா அணிகளும், குருப் ஈ பிரிவில் ஜெர்மனி, ஜப்பான், கோஸ்டாரிகா, குருப் எஃப் அணியில் பெல்ஜியம், கன்னடா, மொரோக்கோ, குரோஷியா, குருப்ஜியில் பிரேசில், செர்பியா, சுவிச்சர்லாந்த், கேமரூன், குருப் ஹெச் பிரிவில் போர்ச்சுகள், கானா, உருகுவே, தென்கொரியா அணிகள் என அணிவகுத்துள்ளன.

கத்தார் நாடு பணத்தை வாரி இறைத்துள்ளது. 3 லட்சம் டிக்கெட்டுகள் விற்று தீர்ந்தன. ஒரு கப்பலைக் கட்டி அதில் 4000 அறைகள் உருவாக்கி பார்வையாளர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் உழைப்பால் 6000 அடுக்குமாடி குடியிருப்புகள், நூற்றுக்கணக்கான ஹோட்டல்கள் கட்டி முடிக்கப்பட்டன. இதுவரை 600க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இறந்துள்ளனர் என்று உலக மனித உரிமை ஆணையம் சொன்னாலும், 36 பேர் தான் இறந்தனர் என்ற கணக்கை கத்தார் கொடுத்துள்ளது. 9 கால்பந்து மைதானங்களை படைக்க 3 ஆண்டுகள் கடுமையான உழைப்பை கட்டிடத்தொழிலாளர்கள் சிந்தியுள்ளனர். உழைப்பிற்கேற்ற சம்பளம் கொடுக்கப்படவில்லை என்ற குறையை தொழிலாளர்கள் பல்வேறு பேட்டிகளில் சொல்லியுள்ளனர்.

எதுவாயினும் உலகக்கோப்பையை முத்தமிடும் அணி எது? என்று கணக்கெடுப்பு ஐரோப்பா, அமெரிக்கா, ஆப்பிரிக்கா கண்டங்களில் தொடங்கிவிட்டது. பிரேசில், இங்கிலாந்து, பிரான்ஸ் அணிகள் பலமான அணியாக இருக்கிறது. பிரேசில் நாட்டில் லூயிஸ் லூலா தலைமையில் இடதுசாரி ஆட்சி மகுடம் சூட்டியது போல் பிரேசில் நாட்டில் 18 காரட் தங்கம்; 6.175 கிலோ வெள்ளியால் செய்யப்பட்ட தங்கக்கோப்பை மேலும் ஒரு மகுடத்தை அந்த நாட்டிற்கு சூட்டுமா? டிசம்பர் 18ஆம் தேதி வரை பொறுத்திருப்போம்.

**தொடர்புக்கு: 96593 36156**

# மயிலாடுதுறையில் டிசம்பர் 17 அன்று குத்தகை விவசாயிகள் பாதுகாப்பு கோரிக்கை மாநாடு

## தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநிலக்குழு தீர்மானம்




தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் தமிழ்நாடு மாநிலக்குழு கூட்டம் நவ. 17 அன்று விழுப்புரம் மாவட்டம் செஞ்சியில் நடைபெற்றது. மாநில தலைவர் எஸ்.குணசேகரன் முன்.எம்.எல்.ஏ. தலைமை ஏற்று அரசியல் நிகழ்வுகளையும், மாநில பொதுச் செயலாளர் பி.எஸ். மாசிலாமணி கடந்த சில மாதங்களில் ஏற்பட்ட வேளாண்மை பிரச்சனைகளையும் விளக்கிப்பேசினா். இக்கூட்டத்தில் புதுவை மாநிலத் தலைவர் ஜி.கீதநாதன் பனை மர பாதுகாப்பு குறித்து பேசினார். சி.பி.ஐ. மாவட்ட செயலாளர் ஏ.சௌரிராஜன், எம்.இலகுமையா, சி.எம்.துளசிமணி, இரா. முல்லை, கே.உலகநாதன் முன்.எம்.எல்.ஏ. ஆகியோர் பங்கு கொண்டனர்.

சங்கத்தின் விழுப்புரம் மாவட்டக்குழு உறுப்பினர்களுடன் தலைவர் எம்.ஐ.சகாபுதீன், செயலாளர்ஆர். கலியமூர்த்தி ஆகியோர் சிறப்பான ஏற்பாடு செய்திருந்தனர்.

கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

கோவில், மடம், தர்ம நிறுவனங்களின் குத்தகை விவசாயிகள் பாதுகாப்பு கோரிக்கை மாநாடு, டிசம்பர் 17 மயிலாடுதுறை

தமிழ்நாட்டில் கோவில் மடம் மற்றும் தர்ம நிறுவனங்களுக்கு சொந்தமான பல ஆயிரம் ஏக்கர் நிலங்களில் நிலமற்ற குத்தகை விவசாயிகள் பல ஆண்டுகளாக சாகுபடி செய்து வருகின்றனர். பலர் தன் மூதாதையர் காலத்திலிருந்து தலைமுறை, தலைமுறையாக இந்த நிலங்களில் சாகுபடி செய்து வருகின்றனர். இதன் மூலம் கிடைக்கிற வருவாயைக் கொண்டு விவசாயிகள் இதில் ஒருபகுதி கோவில்களுக்கு குத்தகையாக கொடுக்கிறார்கள். ஆண்டாண்டுகாலமாக பின்பற்றப்படும் இந்தநடைமுறைகளால் கோவில்களின் நிர்வாகத்திற்கு இது பயன்படுகிறது. இதை நம்பியுள்ள நிலமற்ற விவசாயிகளுக்கும் வாழ்க்கை தேவைக்கு அடிப்படை வருமானமாக ஒருபகுதி கிடைக்கிறது. எல்லாவற்றுக்கும் மேலாக சம்பந்தப்பட்ட நிலங்கள் தரிசாக விடப்பட்டு பயனற்றுப் போகாமல் நஞ்சை நிலங்களாகவே இவ்விவசாயிகளால் பாதுகாக்கப்பட்டு வருகிறது. தமிழகத்தின் உணவுத்தேவை பெருமளவு இதன் மூலம் கிடைத்து வருகிறது. தமிழகத்தின் மொத்த நிலத்தில் பெரும்பகுதி நிலம் இப்படியான குத்தகை முறையில் தான் உள்ளது.

இந்த சூழலில் உலகவெப்பமய மிகுதியால் இயற்கை பேரிடர் என்பது வெள்ளம், வறட்சி, புயல், சுனாமி என பல்வேறு வடிவங்களில் ஒவ்வொரு ஆண்டும் மாறி மாறி பாதிக்கும் காலங்களில் அரசுகள் குறைந்தபட்ச நிவாரண உதவியும் வழங்கி வருகிறது. இத்தொகை விவசாயிகளின் சாகுபடி செலவில் ஒரு சிறுபகுதியே. அரசு பாதிப்பு என அறிவித்து நிவாரணம் கொடுத்த நிலையில் கூட அந்த ஆண்டுகளுக்குரிய குத்தகை தொகையை இந்நிர்வாகங்கள் தள்ளுபடி செய்யாமல் நிலுவைத் தொகையாக சேர்த்து வருவாய் நீதிமன்றத்தில் விவசாயிகளின் மீது வழக்கு போட்டு விவசாயிகளை இழுத்தடித்து வருகிறது. இப்படி ஆயிரக்கணக்கான விவசாயிகள் வழக்குகளுக்குரிய செலவு செய்து நீதிமன்றங்களுக்கு அலைந்து கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் தற்பொழுது சில இடங்களில் அறநிலையத்துறை வருவாய் நீதிமன்றங்களையும் மதிக்காது. நேரடியாக இந்து அறநிலைய ஆட்சி துறையே. குத்தகை விவசாயிகளிடமிருந்து சம்பந்தப்பட்ட நிலங்களை பறித்து அந்த நிலங்களை பொது ஏலம் விட்டுள்ளது. இந்நடவடிக்கைகள் தமிழ்நாடு முழுவதும் எடுப்பதற்கான தொடக்கமே இது என அறிய முடிகிறது. எனவே இதிலிருந்து விவசாயிகளை பாதுகாத்திடும் முறையில் விவசாயிகள் ஒன்று திரளவேண்டிய அவசியம் வந்திருப்பதாக தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் கருதுகிறது.

எனவே குத்தகை நிலங்களை நம்பி உள்ள விவசாயிகளை பாதுகாத்திட தமிழக அரசை வலியுறுத்தி, குத்தகை விவசாயிகளின் கோரிக்கை மாநாட்டை மயிலாடுதுறையில் டிசம்பர் 17 அன்று நடத்துவது என முடிவு எடுக்கப்பட்டது.

மழைவெள்ள பாதிப்பு அறிவித்த நிவாரணத் தொகையை கூடுதலாக வழங்கக் கோரி..

கடும் பாதிப்பிற்குள்ளான மயிலாடுதுறை மாவட்டத்தை உடனடியாக வந்து பார்வையிட்டு நிவாரணஅறிவிப்புகளை செய்த தமிழ்நாடு முதல்வரை பாராட்டுகிறோம்.

தமிழகத்தில் தென் மேற்கு பருவமழை இறுதி நிலையில் பல நாட்கள் கடுமையாக பொழிந்து பல இடங்களில் பயிர் பாதிப்பை ஏற்படுத்தியது. தமிழக அரசும் அவைகளை ஆய்வு செய்து கணக்கெடுத்துள்ளது. இந்த நிலையில் வடகிழக்கு பருவமழை தொடங்குகிற இக்காலத்தில் தமிழகம் முழுவதும் பரவலாக மழை பொழிந்து பல இடங்களில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக மயிலாடுதுறை மாவட்டத்தில் 40 செ. மீட்டர் கூடுதல் மழை என்பதால் பெரும் பாதிப்பிற்குள்ளாகியுள்ளது. மேட்டூர் அணை நிரம்பியதால் கொள்ளிடத்தில் தொடர்ந்து திறந்து விடப்பட்ட தண்ணீராலும் இம்மாவட்ட மக்களின் நஞ்சை புஞ்சை பயிர்கள் முற்றாக அழிந்தும்; குடியிருப்புகள் இடிந்தும் சாலைகள் பழுதுபட்டும் இன்றுவரை தண்ணீர் வடியாது உள்ளது. நெல்பயிர்கள் எதுவும் மீண்டுவர வாய்ப்பு இல்லை. பருவமழையும் தொடர்கிறது. பின்னாள் தண்ணீர் கிடைக்காது என்கிற நிலையில் புதிய சாகுபடி மேற்கொள்ள இயலாது. எனவே போட்ட மூலதனத்தை முற்றாக இழந்து, வருமானத்தையும் இழந்துள்ள விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு குறைந்தபட்சம் ரூ. 30,000 வழங்கிட வேண்டும். வாழை, கரும்பு, நிலக்கடலை உள்ளிட்ட தோட்டக்கலை பயிர்களுக்கும் உரிய அளவு நிவாரணம் வழங்கிட வேண்டும். வாழ்வாதாரத்தை வருமானத்தை இழந்து உள்ள குடும்பங்களுக்கு ரூ.10000 வழங்கிட வேண்டும். இறந்து போன ஆடு, மாடுகள், கால்நடைகள் உள்ளிட்ட அனைத்திற்கும் உரிய அளவு இழப்பீடு வழங்கிட வேண்டும்.

ஒன்றிய அரசு உடனடியாக பேரிடர் நிதியை தமிழகத்திற்கு உரிய அளவில் வழங்கிட வேண்டும். தமிழக அரசு காப்பீடு திட்டகாப்புத் தொகை செலுத்தும் காலத்தை நீட்டிக்க கோரியபடி நவம்பர் 27வரை அனுமதி கிடைத்துள்ளது. காப்பீடு திட்ட வரன்முறையை காரணம் காட்டி பாதிப்படைந்த பகுதி விவசாயிகளின் பிரீமியத்தை மறுக்காமல், விடுபட்ட விவசாயிகளை பதிவு செய்திட வேண்டும்.

தென்பெண்ணை ஆற்றின் யார்க்கோலில் புதியஅணை தடுத்திட ஒன்றிய அரசே, நடுவர் மன்றம் அமைத்திடு

கர்நாடக மாநிலத்தில் இருந்து தமிழகத்திற்கு வருகிற தென் பெண்ணை ஆற்றில் தொடர்ந்து தடுப்பணைகளை கட்டி வரும் கர்நாடக அரசு. மேலும் ஒரு அணையை கட்டிடவும், பழைய தடுப்பணைகளை உயர்த்திடவும் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இதை தடுத்திட வேண்டுமென ஒன்றிய அரசிடம் பல தடவை வற்புறுத்தியும் பயன் இல்லாமல், தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் முறையிட்டு தொடர்ந்து வாதாடி வந்தது, தண்ணீர் பிரச்சினைகளை தீர்வுகாணாது, அரசியல் செய்ய விரும்புகிறீர்களா'' என ஒன்றிய அரசை அறிவுறுத்தி, உடனடியாக நடுவர் மன்றம் அமைத்திட வேண்டும் என உச்சநீதிமன்றம் ஆணையிட்டுள்ளது.

இந்நிலையில் ஒன்றிய அரசு உடனடியாக தென்பெண்ணை ஆற்றின் தீர்வுக்கான நடுவர் மன்றத்தை உடனடியாக அமைத்திட வேண்டும் என தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வலியுறுத்துகிறது.

தென்பெண்ணை ஆற்றில் மணல் குவாரி அனுமதியை ரத்து செய்... குடிநீர் ஆதாரத்தை காத்திடு...

விழுப்புரம் மாவட்டம், திருவெண்ணைநல்லூர் வட்டம், ஏனாதிமங்கலம் பகுதியில் தென் பெண்ணை ஆற்றில் மணல்குவாரி அமைப்பதற்காக புலஎண் 198ல் 284963 கன மீட்டர் அளவில் மணல் எடுப்பதற்கான சுற்றுச்சூழல் தடையின்மை சான்று வழங்கப்பட்டுள்ளது. ஏற்கனவே கடந்தசில ஆண்டுகளுக்கு முன்பு கோவிந்தபுரம் மற்றும் பேரங்கியூர் அரசு மணல் குவாரி அமைத்ததன் விளைவு, ஏனாதி மங்கலம் தென்பெண்ணை ஆற்றில் உள்ள எல்லீஸ் தடுப்பணையின் வலது புற கதவணை உடைந்து ஆற்றில் அடித்து செல்லப்பட்டது. அதனால் வலது புற கதவணைமூலம் பயன்பெற்றுவந்த சுமார் 17க்கும் மேற்பட்ட ஏரிகளுக்கு நீர் கொண்டுசெல்ல முடியாமல் இந்த ஏரியை நம்பி உள்ள விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த பாதிப்பு மாறுவதற்குள் மேலும் ஒரு இடியாய் அரசு மணல் குவாரி என்பது வேதனைக்குரியது.

தென்பெண்ணையாற்றில் மணல்குவாரி அமைப்பதால் இங்கு நிலத்தடி நீர்மட்டம் குறைந்து விவசாயிகளுக்கான பாசன நீர் மற்றும் குடிநீர் ஆழ்துளை கிணறுகளில் வற்றி, வரும் காலங்களில் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உள்ளது. விழுப்புரம் கூட்டு குடிநீர் திட்டம் இங்குதான் செயல்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து தென்பெண்ணை ஆற்றில் குறி வைத்து மணல் குவாரி அமைப்பதால் மணல் வளம் குறைந்து நீர் சேமிக்க முடியாத நிலை ஏற்படும். எனவே தென்பெண்ணை ஆற்றில் மணல் குவாரி அமைக்கும் முடிவை தமிழக அரசு கைவிட வேண்டும்.

திருப்பத்தூர் மாவட்டத்தில் நெல் கொள்முதல் நிலையம் திறந்திட ஒன்றுபட்ட வேலூர் மாவட்டத்தில் நெல் கொள்முதல் நிலையங்கள் செயல்பட்டு வந்தது. மூன்று மாவட்டங்களாக பிரிந்த பின் இதுவரை செயல்பட்ட கொள்முதல் நிலையங்கள் வேலூர் ராணிப்பேட்டை மாவட்ட பகுதிகளில் அமைந்துள்ளது. தற்போது கொள்முதல் நிலையம் இல்லாமல் தனியார் வியாபாரிகளை நம்பி மிகக் குறைந்த விலைக்கு விற்று விவசாயிகள் மோசடிக்குள்ளாகிறார்கள். ஆகவே திருப்பத்தூர் மாவட்டத்தில் நெல் இருப்பு வைக்க போதுமான கிடங்கு வசதிகளும் உள்ளதால் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை உடனடியாக இங்கு தொடங்கிட வேண்டும்.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# ஜனசக்தி செய்தி எதிரொலி: தமிழிசை மூவர் மண்டபத்தை சீரமைக்க அரசு ஆணை!

செப்டம்பர் 4ஆம் தேதி வெளிவந்த ஜனசக்தி பத்திரிக்கையில், மயிலாடுதுறை மாவட்ட நிருபர் பிரபாகரன் தமிழிசை மூவர் மண்டபத்தை பற்றி கட்டுரை எழுதியிருந்தார். இதன் பிரதிபலிப்பாக அரசு அக் கட்டிடத்தை பராமரிக்க நிதி ஒதுக்கி உத்தரவிட்டுள்ளது.

தமிழ் மொழி மற்றும் தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகித்தவர்களும், கர்நாடக இசைக்கு தமிழ் கீர்த்தனைகளை இயற்றிய தமிழிசை மும்மூர்த்திகளான பதினான்காம் நூற்றாண்டில் சீர்காழியில் பிறந்த முத்துத் தாண்டவர், பதினெட்டாம் நூற்றாண்டில் தில்லையாடியில் பிறந்த அருணாசலக் கவிராயர் மற்றும் திலைவிடங்கள் கிராமத்தில் பிறந்த மாரிமுத்தாப் பிள்ளை ஆகிய மூவரின் நினைவாக 2000ஆம் ஆண்டு முதலமைச்சர் மு.கருணாநிதி அவர்களால் 'தமிழிசை மூவருக்கு மணிமண்டபம் நிறுவப்படும்' என்று அறிவிக்கப்பட்டு, பின்னர் 2010 ஆம் ஆண்டு ரூ.1,51,00,000/

> செய்தி வெளியீடு எண் : 2090 நாள் : 21.11.2022
>
> **செய்தி வெளியீடு**
>
> தமிழ் மொழி மற்றும் தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகித்தவர்களும், கர்நாடக இசைக்கு தமிழ் கீர்த்தனைகளை இயற்றிய தமிழிசை மும்மூர்த்திகளான பதினான்காம் நூற்றாண்டில் சீர்காழியில் பிறந்த முத்துத் தாண்டவர், பதினெட்டாம் நூற்றாண்டில் தில்லையாடியில் பிறந்த அருணாசலக் கவிராயர் மற்றும் திலைவிடங்கள் கிராமத்தில் பிறந்த மாரிமுத்தாப் பிள்ளை ஆகிய மூவரின் நினைவாக 2000ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 'தமிழிசை மூவருக்கு மணிமண்டபம் நிறுவப்படும்' என்று அறிவிக்கப்பட்டு, பின்னர் 2010 ஆம் ஆண்டு ரூ.1,51,00,000/- (ரூபாய் ஒரு கோடியே ஐம்பத்து ஒன்று இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழியில் 0.44 ஏக்கர் பரப்பளவு இடத்தில், 358.80 சதுர மீட்டர் பரப்பளவில் கட்டப்பட்டுள்ளது.

(ஒரு கோடியே ஐம்பத்து ஓர் இலட்சம்) மதிப்பீட்டில் மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழியில் 0.44 ஏக்கர் பரப்பளவு இடத்தில், 358.80 சதுர மீட்டர் பரப்பளவில் கட்டப்பட்டுள்ளது.

மு.கருணாநிதி அவர்களின் தனிப்பட்ட வழிகாட்டுதலின் கீழ் மைய மண்டபத்தில் ஏழு கலசங்களுடன், எந்த திசையிலிருந்தும் தமிழிசை மூவரைக் காணும் வகையில் இம்மணிமண்டபம் வடிவியல் ரீதியாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த மணிமண்டபம் கடந்த காலங்களில் சரிவர பராமரிக்கப்படாததால், பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது என பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனு வரப்பெற்றதைத் தொடர்ந்து, தமிழிசை மூவர் மணிமண்டபத்தில் சிறப்பு பழுது பார்ப்பதற்கும், புதிய கழிப்பறை மற்றும் அலங்கார கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்கும், பொதுப்பணித்துறையின் மூலம் திட்ட மதிப்பீடு பெறப்பட்டு ரூ.47,02,500க்கு நிதியொப்பளிப்பு செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. புனரமைப்புப் பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளது.

– மா.பிரபாகரன்

தொடர்புக்கு: 6380677313

# கோவை மாமன்ற முன்னாள் உறுப்பினர் ஆர்.தேவராஜ் மறைவு

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னணி ஊழியரும், கோயமுத்தூர் மாநாராட்சி மாமன்ற முன்னாள் உறுப்பினருமான தோழர்.ஆர்.தேவராஜ் (64) நவ. 17 அன்று கோவையில் காலமானார் என்ற துயரச் செய்தியை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

கோவை மாநகரம், பாப்பநாய்க்கன் பாளையம் பஞ்சாலை தொழிலாளர் குடும்பத்தில் ராமசாமி சரஸ்வதி தம்பதியினரின் மூன்று குழந்தைகளில் ஒருவராக ஆர்.தேவராஜ், 1958 மே 15 ஆம் தேதி பிறந்தார். சிறுவயதில் தந்தை வழித் தொடர்பில் தொழிற்சங்க பணிகளில் ஈடுபட்ட ஆர்.தேவராஜ் பள்ளிக்கல்வி பயிலும் காலத்திலேயே கம்யூனிஸ்ட் இயக்கப் பணிகளிலும் ஈடுபடத் தொடங்கியவர்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கிளைச் செயலாளர், இடைக்குழுச் செயலாளர், மாவட்ட. நிர்வாகக் குழு உறுப்பினர், மாவட்டத் துணைச் செயலாளர், மாநிலக் குழு உறுப்பினர் என்ற பல நிலைகளில் செயல்பட்டு மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கோவை மாநகராட்சி மாமன்ற உறுப்பினராக சிறப்பாக செயல்பட்டு கட்சிக்கு பெருமை சேர்த்தவர்.

தொழிற்சங்க இயக்கத்திலும் அமைப்பு சாரத் தொழிலாளர்களையும், உடல் உழைப்புத் தொழிலாளர்களையும் சங்க அமைப்பில் அணி திரட்டுவதில் முனைப்புடன் செயல்பட்டவர். பாப்பநாய்க்கன்பாளையத்தில் கட்சியின் இடைக்குழு அலுவலகத்திற்கு நல்ல கட்டடம் கட்டியதில் முக்கியப் பங்களித்தவர்.

ஆர்.தேவராஜ் புற்றுநோய் பாதிப்புக்கு ஆளாகி, சில மாதங்களாக சிகிச்சை பெற்று வந்தார். அந்தக் கொடிய நோய் அவரது உயிரைப் பறித்து விட்டது. அவரது இழப்பு கட்சிக்கு ஈடு செய்ய இயலாத பேரிழப்பாகும். இவரது வாழ்விணையர் ரேணுகாதேவி ஊரக வளர்ச்சித் துறையில் பணியாற்றி ஓய்வு பெற்றவர். இவர்களுக்கு திருமணமான வித்யா என்கிற ஒரு மகள் இருக்கிறார்.

ஆர்.தேவராஜ் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு செவ்வணக்கம் கூறி, அஞ்சலி தெரிவித்துக் கொள்கிறது. அவரை பிரிந்து வாடும் அவரது வாழ்விணையர், மகள் உள்ளிட்ட குடும்பத்தினருக்கும், தோழர்களுக்கும் ஆறுதல் தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு மாநிலக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

### இரா.முத்தரசன் ஆறுதல்

கோவை மாவட்டத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கிய ஊழியர்களில் ஒருவராக திகழ்ந்த தோழர் ஆர். தேவராஜ் எக்ஸ்.எம்.சி. கடந்த 17ம் தேதி மாலை இயற்கை எய்தினார்.

தகவல் அறிந்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா. முத்தரசன் நவ.20 அன்று கோவை தேவராஜ் இல்லத்திற்கு வருகை தந்து அவரது மனைவி மகள் மற்றும் உறவினர்களிடம் துக்கம் விசாரித்தவுடன் ஆறுதல் கூறினார்.

அவருடன் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில பொருளாளர் எம். ஆறுமுகம், மாவட்ட செயலாளர் சி. சிவசாமி, முன்னாள் மாவட்ட செயலாளர் வி.எஸ். சுந்தரம், மாவட்டத் துணைச் செயலாளர் ஜே.ஜேம்ஸ், மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர்கள் மு.வ. கல்யாணசுந்தரம், கே.ரவீந்திரன் மற்றும் ஏ.பி.மணிபாரதி, ஆர். சுதர்சன் மாமன்ற உறுப்பினர் பிரபா ரவீந்திரன் கே.சி. மூர்த்தி, ஜி.ஆர். மணி உள்ளிட்டர் உடன் இருந்தனர்.

# தமிழறிஞர் ஔவை நடராசன் மறைவு

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்



மூத்த தமிழறிஞர் ஔவை நடராசன் (86) நவ.21 அன்று காலமானார் என்ற துயரச் செய்தி, ஆழ்ந்த வேதனையளிக்கிறது.

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறில் தமிழறிஞர் குடும்பத்தில் பிறந்த நடராசன், "புலிக்கு பிறந்தது பூனையாகாது" என்ற முதுமொழியின் இலக்கியமாக வாழ்ந்தவர்.

தமிழ்நாட்டின் சிறந்த கல்வியாளரான ஔவை நடராசன் உயர்கல்வியில் முதுமுனைவர் பட்டம் பெற்றவர்.

தமிழிலும், ஆங்கிலத்திலும் புலமை பெற்றவர். இரு மொழிகளிலும் ஏராளமான ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளார். மிக நல்ல பேச்சாளர்.

ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டின் செயலாளராகவும், பல்வேறு நாடுகளில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாடுகளில் தலைமைக் குழுவில் பணியாற்றியும், சர்வதேச தமிழ் ஆய்வு அமைப்புகளில் பொறுப்பேற்றும், தமிழுக்கும், தமிழ்நாட்டுக்கும் பெருமை சேர்த்தவர்.

நாட்டின் உயர் விருதான பத்மஸ்ரீ உள்பட பல்வேறு விருதுகள் பெற்ற சிறப்புக்குரியவர்.

இவரது உயர்கல்வி அறிவும், தமிழாய்வு ஆற்றலும் தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாட்டுத் துறை செயலாளர் பொறுப்புக்கு உயர்த்தியது. ஐஏஎஸ் அல்லாத துறைச் செயலாளராக எட்டாண்டுகள் பணியாற்றி சாதனை படைத்தவர்.

தஞ்சை தமிழ் பல்கலைக் கழகத்தில் துணை வேந்தர், செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் துணைத் தலைவர் உள்ளிட்ட உயர் பொறுப்புகளை வகித்த பெருமைக்குரியவர்.

உலகத் தமிழராய்ச்சி நிறுவனத்தில் ஔவை நடராசன் பெயரில் அறக்கட்டளை நிறுவப் பெற்று, ஆண்டுதோறும் தமிழாய்வு நிகழ்வுகள் நடந்து வருவது குறிப்பிடத்தக்கது.

தமிழாய்வு உலகில் பிரகாசித்து வந்த ஒரு சுடரொளி மறைந்து விட்டது. இது தமிழாய்வு உலகில் ஏற்பட்டிருக்கும் பேரிழப்பாகும்

அன்னாரின் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதுடன், அவரை பிரிந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், தமிழாய்வு உலக அறிஞர்கள் மற்றும் மாணவர்களுக்கும் ஆறுதலை தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு மாநிலக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

### நேரில் அஞ்சலி

தமிழறிஞர் அவ்வை நடராஜன் மறைவிற்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில குழு சார்பில் மாநில துணைச் செயலாளர் மு. வீரபாண்டியன் மலர் அஞ்சலி செலுத்தினார் மத்திய சென்னை மாவட்ட செயலாளர் பா கருணாநிதி, மாநில குழு உறுப்பினர் உதயகுமார், அம்பத்தூர் பகுதி செயலாளர் இரா.விஜயகுமார், கட்டிட சங்கம் மாநில செயலாளர் இரா.துரைசாமி, அம்பத்தூர் பகுதி குழு உறுப்பினர் என்.கோபிநாதன் ஆகியோர் உடன் இருந்தனர். மறைந்த அவ்வை நடராஜன் அவர்களின் மகனும் தமிழ் வளர்ச்சி துறை இயக்குனர் அருள் அவர்களிடம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் இரங்கலும் ஆறுதலும் தெரிவிக்கப்பட்டது.

# உலக மீனவர் தின விழா

இராமேஸ்வரம் சுனாமி காலணியில் (கடலோர காவல் நிலையம் எதிரில்) தமிழ்நாடு ஏஐடியூசி மீனவ மகளிர் சங்கத்தின் சார்பில் நவ. 21 அன்று பொங்கலிட்டு இனிப்புகள் வழங்கி தொழிற்சங்க கொடியேற்றி மீனவர் தின நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மாநில செயலாளர் சி.ஆர். செந்தில்வேல் தலைமை வாகித்தர். நிகழ்ச்சியில் மாவட்ட நிர்வாகிகள் எம்.அந்தோனிபீட்டர், எம்.பிச்சை ஆர்.நாகேஸ்வரன், ஜி.ஆதித்தன், ஏ.கே. முனிஸ்வரன், மகளிர் சங்க நிர்வாகிகள் பி.வடகொரியா, ஆர்.பூமாரி பி.லட்சுமி எம்.மரியமலர் ஏ.அனிதாசீலி முனீஸ்வரி ஆகியோர் கலந்து கொண்டனர்.


## ஆழ்ந்த இரங்கல்



**தோழர். ஆர். தேவராஜ்** Ex.Mc.

கோவை மாவட்ட முன்னாள் துணை செயலாளர்
மாவட்டக்குழு உறுப்பினர்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் கோவை மாவட்ட துணை செயலாளர் **ஆர். தேவராஜ்** அவர்கள் கடந்த (17.11.22) அன்று இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

**V.S. சுந்தரம்**
முன்னாள் மாவட்ட செயலாளர்

**R. சுதர்சன்**
முன்னாள் மாவட்ட நிர்வாகக்குழு

**K. ரவீந்திரன்**
மத்திய மண்டல செயலாளர்

**பிரபா ரவீந்திரன்**
மாமன்ற உறுப்பினர்

**A.P. மணிபாரதி**
மத்திய மண்டல துணைசெயலாளர்

**N. நந்தகுமார்**
மத்திய மண்டல பொருளாளர்

**K. ராஜேந்திரன்**
சித்தாபுதூர் கிளைசெயலாளர்

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி - கோவை**

# ஆனாம்பட்டி உயர்நிலைப் பள்ளிக்கு கூடுதல் கட்டிடம் கட்டிதருக

## இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கோரிக்கை

மணப்பாறை ஒன்றிய அலுவலகத்தில் உள்ள சட்டமன்ற அலுவலகத்தில் சட்டமன்ற உறுப்பினர் ப.அப்துல் சமதுவிடம் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நகரச் செயலாளர் ஜனசக்தி உசேன், மாவட்டகுழு உறுப்பினர் சௌக்கத்அலி, ஒன்றிய பொருளாளர் ரவிச்சந்திரன், ஒன்றியகுழு உறுப்பினர் கல்யாணசுந்தரம் ஆகியோர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஆனாம்பட்டி கிளை சார்பாக கோரிக்கை மனு அளித்தனர்.

அந்த மனுவில், சூளியபட்டி, எஃப்.கீழையூர், உசிலம்பட்டி, பொடங்குபட்டி, சாம்பட்டி ஊராட்சிகளில் உள்ள கிராம மக்கள் மருத்துவ வசதிபெற மைய பகுதியாக உள்ள ஆனாம்பட்டியில் 1980 ல் இருந்து இயங்கி வரும் துணை சுகாதார நிலையத்தை, ஆனாம்பட்டி பொது மக்கள் அரசுக்கு கொடுத்த நிலத்தில் புதிய வளாகம் அமைத்து தொடர்து இயங்கிட கோரியும், பனைமத்து பகுதியில் இருந்து சாம்பட்டி வரை மிக பழுதடைந்து உள்ள தார் சாலையை புதிப்பித்து கொடுக்க கோரியும்,

ஆனாம்பட்டி உயர்நிலைப் பள்ளிக்கு கூடுதல் கட்டிடம் கட்டித் தரக் கோரியும், ஆனாம்பட்டியில் உள்ள காவேரி உயர் நீர்தேக்க தொட்டியில் நீர் ஏற்றி தடையின்றி காவேரி குடிநீர் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு மனுவில் கூறப்பட்டிருந்தது.

# முதலாம் ஆண்டு நினைவு நாள் பேரவைக் கூட்டம்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஒத்தக்கடை நகர் குழு சார்பில் தோழர்கள் குமரேசன், தனலட்சுமி, கருப்பையா, ஜீவானந்தம், சிராஜிதீன் மற்றும் அய்யனார் ஆகியோர் முதலாம் ஆண்டு நினைவு நாள், பேரவைக் கூட்டம் நரசிங்கம் சமுதாய கூடத்தில், ஒத்தக்கடை நகர்க் குழு செயலாளர் கார்த்திக் தலைமையில் நடைபெற்றது.

இதில் மறைந்த தோழர்களுக்கு வீரவணக்கம் செலுத்தி அவர்தம் உருவப்படத்திற்கு மலர்கள் தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் தேசியக்குழு உறுப்பினர் சந்தானம், மாநில கட்டுப்பாட்டு குழு உறுப்பினர் காளிதாஸ், புறநகர் மாவட்டச் செயலர் முத்துவேல், ஏஐடியுசி மாவட்ட பொதுச் செயலாளர் சேது, மாவட்ட குழு உறுப்பினர்கள் பூமி, மெய்யர் ஆகியோர் மறைந்த தோழர்களைப் பற்றி சிறப்புரை ஆற்றினர்.

மேலும் மாவட்ட குழு உறுப்பினர்கள் அலங்கை குமரேசன், கண்ணன், மாதர் சங்கத்தின் புறநகர் செயலாளர் நாகஜோதி, அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் கிரிஷ் பாக்கியம், அனைத்திந்திய மாணவர் பெருமன்ற செயலாளர் சேதுபாண்டி, தலைவர் விக்ரம், ஒத்தக்கடை நகர் குழு உறுப்பினர்கள் உள்பட பலர் இதில் கலந்து கொண்டனர்.

# குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் திட்டத்தை விரைந்து செயல்படுத்துக!

தி.மு.க.வின் தேர்தல் வாக்குறுதிப்படி குடும்பப் பெண்களுக்கு தமிழக அரசு மாதம் ரூ.1000 உடனடியாக வழங்கிட வேண்டும் என ஏஐடியூசி பொது தொழிலாளர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

கன்னியாகுமரி மாவட்டம் ஆரல்வாய்மொழியில் கன்னியாகுமரி மாவட்ட ஏஐடியூசி பொதுத்தொழிலாளர் சங்க மாவட்ட மாநாடு என்.எப்.ஐ.டபிள்யூ. பி.விஜயலெஷ்மி தலைமையில் நடைபெற்றது.

ஆரல்வாய்மொழி ரயில் நிலையத்தில் அனைத்து ரயில்களும் நின்று செல்லவேண்டும். தமிழக அரசு குடும்ப பெண்களுக்கு மாதம் ரூ.1000 உடனடியாக வழங்கிட வேண்டும். நலவாரியத்தில் உள்ள பொதுத்தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஒய்வூதியத்தை ரூ.3000 ஆக வழங்கிடுக. வறுமைக்கோட்டில் வாழும் விளிம்புநிலை மக்கள், முறைசாரா தொழிலாளர்கள் அனைவரையும் வறுமைக்கோட்டில் சேர்த்து அவர்களுக்கு வறுமைக்கோட்டு சான்றிதழ் வழங்கிடுக என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இதில் சிபிஐ மாவட்ட செயலாளர் தா.சுபாஷ் சந்திரபோஸ், பொருளாளர் எஸ்.அனில்குமார், மின்வாரிய தொழிற்சங்க செயலாளர் ஆர்.சிவக்குமார், சிபிஐ மாவட்டதுணைசெயலாளர் நாராயணசாமி, சிபிஐ தாலுகா செயலாளர்அண்ணாத்துரை, என்.எப்.ஐ.டபிள்யூ மாவட்ட செயலாளர், சுப்பிரமணியன் உள்பட தோழர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# மாநிலக்குழு உறுப்பினர் எஸ்.பி.ஞானசேகர் தாயார் காலமானார்

தோழர் எஸ்.பால்ராஜ் எக்ஸ்.எம்.சி. அவர்களின் மனைவியும், சி.பி.ஐ. மாநிலக்குழு உறுப்பினர் எஸ்.பி.ஞானசேகர் அவர்களின் தாயாரும், சி.பி.ஐ தூத்துக்குடி மாநகர செயலாளரும் 23வது வார்டு கவுன்சிலருமான ஜி.தனலெட்சுமி அவர்களின் மாமியாருமான திருமதி பி.சந்திரா அவர்கள் நவ.20 அன்று இயற்கை எய்தினார். தூத்துக்குடி மாவட்ட செயலாளர் பி.கரும்பன் அலுவலக செயலாளர் மாடசாமி, மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் பரமராஜ், மாநிலக்குழு உறுப்பினர் பாரதிகண்ணம்மா, கோவில்பட்டி நகர செயலாளர் சரோஜா, மாவட்ட பொருளாளர் சுப்பிரமணியன் மற்றும் பலர் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

# விருதுநகரில் மீனவ தொழிலாளர்கள் பெருந்திரள் ஆர்ப்பாட்டம்




விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு தமிழ்நாடு ஏஐடியுசி மீனவத் தொழிலாளர்கள் சங்கம் சார்பில் பெருந்திரள் கோரிக்கை ஆர்ப்பாட்டம் நடந்தது. மாவட்ட செயலாளர் செல்வம் தலைமை வகித்தார். மாநில பொதுச்செயலாளர் பி.சின்னத்தம்பி சிறப்புரையாற்றினார்.

சிபிஐ மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, ஏஐடியுசி மாவட்ட செயலாளர் முத்துமாரி, தலைவர் சமுத்திரம் , தஒவாஇ மாவட்ட செயலாளர் எஸ். பழனிக்குமார், மாநில குழு உறுப்பினர் பாலமுருகன் ஆகியோர் பேசினார்கள். பின் தலைவர்கள் மாவட்ட ஆட்சியரிடம் கோரிக்கை மனுவை அளித்தனர்.

# மகளிர் சுய உதவி குழுக்கள் மூலம் வழங்கப்படும் கடன்களுக்கு கந்துவட்டி வசூல்

## தமிழக அரசு தடை செய்ய வேண்டும்!

இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் தஞ்சை மாவட்ட நிர்வாககுழுகூட்டம்தஞ்சாவூர் கீழ ராஜ வீதி மாவட்ட அலுவலகத்தில் தலைவர் எஸ்.தனசீலி தலைமையில் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் ம.விஜயலட்சுமி நடைபெற்ற பணிகள் குறித்து பேசினார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் முத்துஉத்திராபதி கலந்துகொண்டு பேசினார். கூட்டத்தில் மாவட்ட துணை செயலாளர் எஸ்தர் லீமா, தஞ்சை மாநகர தலைவர் ராஜலட்சுமி, ஒன்றிய நிர்வாகிகள் ஒரத்தநாடு எலிசபெத், திருவோணம் மகாலட்சுமி, பட்டுக்கோட்டை ஜானகி, மதுக்கூர் ஜெனிதா, தஞ்சை ஒன்றியம் சிவகாமி உள்ளிட்டோர் பங்கேற்றனர். முடிவில் மாவட்ட பொருளாளர் ஸ்ரீதேவி நன்றி கூறினார். தஞ்சை மாவட்டத்தில், கிராமப்புறங்களில் செயல்பட்டு வரும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் பகலில் மட்டுமே மருத்துவர் வருகின்றனர், இரவில் மருத்துவர்கள் இருப்பதில்லை, இதனால் பிரசவம் உள்ளிட்டு பெண்களுக்கு ஏற்படுகின்ற பிரச்சனைகள், விஷ ஜந்துவினால் உயிருக்கு ஆபத்து, திடீரென குழந்தைகளுக்கு ஏற்படுகின்ற உடல்நல குறைகள் உள்ளிட்டு இரவு நேரங்களில் மருத்துவ சிகிச்சை பெறுவதற்கு மிகுந்த சிரமம் இருப்பதால் இரவு நேரங்களிலும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருத்துவர்கள் பணியாற்ற வேண்டும்

பெண்கள் தங்களுடை குடும்ப பொருளாதார தேவகளை நிறைவேற்றிட சுய உதவி குழுக்கள் மூலம் கடன் வழங்கும் திட்டம் நடைமுறையில் உள்ளது, கொரானா காலத்தில் வேலை இல்லாமல் முடங்கி இருந்த காலத்திற்கு நிலுவையில் உள்ள கடனை அடைக்க சொல்லி சுய உதவி குழு நிர்வாகங்கள் வலியுறுத்தி துன்புறுத்துகிறது. இந்த கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும். அனைத்து சுய உதவி குழுக்களுக்கும் அரசு வங்கியின் வட்டி சதவீதத்தை கணக்கில் எடுத்து வட்டி நிர்ணயம் செய்ய வேண்டும், சுய உதவி குழுக்களுக்கும் நடைமுறை படுத்த வேண்டும், கந்து வட்டி வசூல் செய்வதை கண்டறிந்து அரசு தடைசெய்ய வேண்டும், மாதாந்திர, வாராந்திர தவணை கட்டுவதற்கு தாமதானால் அந்த தவணைகள் கட்டுவதற்கு கால அவகாசம் அளிக்க வேண்டும், சுய உதவி குழு நிர்வாக பணியாளர்கள் பெண்களை மிக மோசமாக திட்டுவது தவிர்க்க படவேண்டும் என்று தமிழ்நாடு அரசுக்கும்,தஞ்சை மாவட்ட நிர்வாகத்திற்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# சிலம்பப் போட்டியில் கின்னஸ் சாதனை



சென்னை அசோக் பில்லர் கேந்திரிய வித்யாலயா பள்ளியில், 8ஆம் வகுப்பு படிக்கும் சி.எம்.கீர்த்திகா சிலம்பப் போட்டியில் வெற்றி பெற்று கின்னஸ் சாதனை படைத்துள்ளார்.

மேலும் அதே பள்ளியில் படித்த சி.எம்.யஸ்வந்த் சிலம்பப் போட்டியில் வெற்றி பெற்று கின்னஸ் சாதனை படைத்துள்ளார்.

இவர்கள் இருவரும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக்குழு உறுப்பினர் எஸ்.ஏழுமலையின் பேரப்பிள்ளைகள், ஹேமமாலினி – சந்துரு ஆகியோரின் குழந்தைகள் ஆவர்.



# ஏஐடியூசி ஆஷா பணியாளர் சங்கத்தின் தருமபுரி மாவட்ட 2வது மாநாடு




தருமபுரி: தமிழ்நாடு ஏஐடியூசி தருமபுரி மாவட்ட ஆஷா பணியாளர் சங்கத்தின் 2வது மாவட்ட மாநாடு தருமபுரியில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மாவட்ட தலைவர் எஸ்.மேனகா தலைமை வகித்தார். நிர்வாகிகள் உத்ரா, கலைவாணி, தவமணி, முன்னிலை வகித்தனர்.லட்சுமி வரவேற்றார்.

மாநில செயலாளர் பி.வசந்தகுமாரி சங்க கொடி ஏற்றி மாநாட்டை துவக்கி வைத்து பேசினார்.மாவட்ட செயலாளர் தீபா வேலை அறிக்கை வைத்து பேசினார். மாவட்ட பொருளாளர் ருக்மணி வரவு செலவு கணக்கை வாசித்தார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் எஸ்.தேவராசன்,மாவட்ட செயலாளர் எஸ்.கலைச்செல்வம் ஆகியோர் கோரிக்கைகள் குறித்து சிறப்புரையாற்றினர்.

ஏஐடியூசி மாவட்ட பொது செயலாளர் கே.மணி, மாவட்ட தலைவர் எம்.மாதேஸ்வரன், மாவட்ட துணைத்தலைவர் ஆர்.சுதர்சனன், உள்ளாட்சி பணியாளர் சங்க மாவட்ட தலைவர் என்.மனோகரன், ஆஷா பணியாளர் சங்க நிர்வாகிகள் மகேஷ்வரி, கிருஷ்ணம்மாள், கிருஷ்ணகிரி மாவட்ட தலைவர் முனியம்மாள், மாவட்ட செயலாளர் யசோதா, தமிழ்நாடு அரசு பணியாளர் சங்க கிருஷ்ணகிரி மாவட்ட செயலாளர் பாஸ்கர் ஆகியோர் வாழ்த்தி பேசினர்.

மாவட்ட தலைவராக எஸ்.மேனகா, துணைத் தலைவராக உத்ரா, மாவட்ட செயலாளராக தீபா, துணை செயலாளராக லட்சுமி, பொருளாளராக ருக்மணி மற்றும் 22 பேர் கொண்ட மாவட்டக்குழு உறுப்பினர்கள் மாநாட்டில் தேர்வு செய்யப்பட்டனர். இறுதியில் அம்சவேணி நன்றி கூறினார்.

# கோயில்மனை குடியிருப்போர் உரிமைகளைப் பாதுகாப்போம்!

கோயில்மனை குடியிருப்போருக்கும், கடைகள் வைத்திருப்போருக்கும் சமீபகாலங்களில் அறநிலயத்துறை அதிகாரிகளால் தொடர்ந்து நெருக்கடி கொடுக்கப்பட்டு வருகின்றது. அமைச்சர்,ஆணையர்,அரசியல்கட்சி தலைவர்கள் என்று தொடர்ச்சியாக சந்தித்து, கோரிக்கை வைத்தும், நம் பிரச்சனைகள் தீர்ந்தபாடில்லை.அமைச்சரிடம் நாம் வைத்த கோரிக்கைகளின் விளைவாக 9.12.2021ல் 208 அரசாணை மூலம் நியாயவாடகை நிர்ணயக்குழு, தலைமைசெயலாளர் தலைமையில் அமைக்கப்பட்டு, பதினோரு மாதங்களாகியும், இதுநாள் வரை எந்தவொரு அறிவிப்பும் வெளியிடப்படவில்லை. திருத்துறைப்பூண்டி, சிபிஐ சட்டமன்ற உறுப்பினர் க.மாரிமுத்து சட்டமன்றத்தில் நம் கோரிக்கையை பேசியும் பலனில்லை. கோரிக்கையை வலியுறுத்தி 18.6.2022 வாழ்வுரிமை கோரிக்கை மாநாட்டினை , அனைத்துகட்சி தலைவர்களின் ஒத்துழைப்போடு நடத்தியதில் பங்கேற்ற அமைச்சர் பி.கே.சேகர்பாபு இன்னும் ஒருமாதத்தில் நம் பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்படும் என்று உறுதியளித்து 5 மாதங்களாகியும், எந்த ஒரு தீர்வும் எட்டப்படவில்லை. மாறாக அறநிலயத்துறையின் அதிரடி நடவடிக்கைகள் தொடர்ந்து அதிகரித்திருக்கின்றன. குழுவின் பரிந்துரை வரும்வரை நடவடிக்கைகளை நிறுத்திவைக்க அமைச்சருக்கு வேண்டுகோள் விடுத்தும், பலன் தரவில்லை. இந்தமாதிரியான இக்கட்டான சூழ்நிலையில் முதல்வரை சந்தித்து பிரச்சனைகளை எடுத்துக்கூற சிபிஐ மாநில செயலாளர் இரா.முத்தரசன் அவர்களையும், விடுதலை சிறுத்தைகள் கட்சி நிறுவன தலைவர் தொல்.திருமாவளவன் அவர்களையும் சந்தித்து முதல்வரை சந்திக்க வற்புறுத்தியுள்ளோம். நமக்கு தீங்குவிளைவிப்போர், கோயில் மனைகளுக்குரிய வாடகைகளை வசூலிப்பதில்லையென்றும், வாடகை குறைவாக இருப்பதாகவும், நீதிமன்றங்களை அணுகுவதால், அறநிலயத்துறை ஆணையரும், நீதிமன்ற கண்டனத்திற்கு உள்ளானார். இதனால் அறநிலயத்துறையும் வாடகை வசூலிப்பதில் கெடுபிடி காட்டுகின்றனர். ஆட்டைக்கடித்து, மாட்டைக்கடித்து, பிறகு மனிதனைக் கடித்தது என்பதுபோல், முதலில் வணிகத்திற்கு நடவடிக்கை, பிறகு விவசாய நிலங்கள் மீது நடவடிக்கை,தற்போது குடியிருப்பவர்கள் மீதும் நடவடிக்கை பாய்கிறது.

இப்படிப்பட்ட நிலையில்நம்மில் சிலர் ,அனைவருக்கும் நடப்பது தானே, நமக்கும் நடக்கப்போகிறது என்று, ஏனோ தானோ வென்ற மனநிலையில், இருப்பது நமக்கு வெற்றியை தேடித்தராது. ஒற்றுமை அவசியம், அனைவரும் ஒன்றுபட்டு ஒருமித்த குரலில் கோரிக்கைகளைஒலிக்கவேண்டும், எந்த ஒரு கோரிக்கையும் போராடாமல் வெற்றியடையாது என்பது சரித்திரம் கூறும் உண்மை.எனவே நாம் அதை நோக்கி தயாராக வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறோம்.

எனவே கோயில்மனைகளில் குடியிருப்போர் அனைவரும் தயாராக வேண்டும். அரசின் கவனத்தை நம் பக்கம் இழுக்க முயற்சி எடுக்க வேண்டும். அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் நம் செயல்பாடுகள் அமையவேண்டும். அதற்கு தமிழ்நாடு கோயில்மனை குடியிருப்போர் சங்கம் எடுக்கும் அனைத்து நடவடிக்கைகளுக்கும், முன்எப்போதும் இல்லாத அளவில், உறுதுணையாக இருந்து, முழு அளவில் ஒத்துழைப்பு கொடுத்து நம் பிரச்சனைகளுக்கு தீர்வுகாண முன்னெடுக்கும் போராட்டங்களில்,அனைவரையும்,பங்கெடுத்துக்கொள்ளும்படி செய்து, நம் முயற்சிகள் வெற்றிபெற உதவ வேண்டும்.

– ஏழுமலை

# மின் கட்டண உயர்வைக் கண்டித்து சிறு குறு தொழில் முனைவோர் உண்ணாவிரதப் போராட்டம்

கோவையில் உள்ள சிறு குறு தொழில் முனைவோர் சங்கங்களின் கூட்டமைப்பு கூட்டம் கொசிமா கூட்ட அரங்கில் நடைபெற்றது.

முன்னதாக கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் டாக்ட் சங்கத்தின் கோவை மாவட்ட தலைவர் ஜே.ஜேம்ஸ் செய்தியாளர்களை சந்தித்தார், அப்போது அவர் கூறியதாவது:

நாட்டின் முதுகெலும்பாக சிறு குறு தொழில்கள் இருந்து வருகிறது. நாடு முழுவதும் பல கோடி மக்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்கி வருகிறது. ஒன்றிய, மாநில அரசுகளின் சுமையை குறைக்கவும், வேலை யில்லா திண்டாட்டத்தைப் போக்கும் வகையிலும், தொழில்துறையில் வேலைவாய்ப்புகளை சிறு குறு தொழில் நிறுவனங்கள் வழங்கி வருகின்றன.

சிறு குறு தொழில் நடத்துபவர்கள் கடந்த இரண்டரை வருடமாக கொரோனா தொற்று, மூலப்பொருள் விலை ஏற்றம் காரணங்களால் கடுமையான பொருளாதார நெருக்கடிகளை சந்தித்து வந்தது.

இந்த நிலையில் தமிழக அரசு மின் கட்டணத்தை உயர்த்தியுள்ளது. முன்னதாக கருத்து கேட்புக் கூட்டம் நடத்தப்பட்டது. அந்த கருத்து கேட்டுக் கூட்டத்தில் பங்கெடுத்து கொண்ட சிறு குறு நடுத்தர தொழில்கள் தொழில் முனைவோர், மின் கட்டணம் உயர்த்தினால் தமிழகத்தில் தொழில்கள் கடுமையான பாதிப்புகளை சந்திக்கும் என்ற கருத்தை தெரிவித்தோம்.

ஆனாலும் மின் கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது. யூனிட் கட்டணம் தொழில்துறைக்கு 1.50 காசு உயர்த்தியது அதை தொழில் துறையினர் ஏற்றுக்கொண்டனர். ஆனால், எல்டி-சிடி 112 கே.வி.மின்சாரத்தை பயன்படுத்திடும் சிறு குறு தொழில்கள் முடங்கும் அளவிற்கு மின் கட்டணத்தை 60 சதவீதம் முதல் 70 சதவீதம் வரை உயர்த்தி உள்ளனர்.

இந்த நிலையில் தொழில் துறையினர் தமிழக அரசை




தொடர்ந்து கேட்டுக் கொண்டதன் அடிப்படையில் 25 சதவீதமாக இருந்த பீக் அவர் கட்டணத்தை 15 %சதமாக குறைத்துள்ளனர்.


சிறு குறு தொழில்களை பொருத்தவரை மின்சார வாரியம் அறிவித்துள்ள காலை 6 மணி முதல் 10 மணி வரையும், மாலை 6 மணி முதல் 10 மணி வரையும் கூடுதலாக 25 சதம் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதனால் சிறு குறு தொழில்கள் முழுமையாக முடங்கிவிடும் நிலை ஏற்பட்டுள்ளது.

எல்டி-சிடி 112 கிலோ வாட் வரை பயன்படுத்தும் தொழில் முனைவோர்கள் 8 சதம், 10 சதம் கூட லாபம் இல்லாமல் தொழில் செய்து வரும் நிலையில் இந்த கட்டண உயர்வு தமிழகத்தின் அடையாளமான சிறு குறு தொழில்களை அழித்துவிடும். அதேபோல 112 கிலோ வாட் வரை எல்டி,டிசிடிக்கு மாதம் நிலை கட்டணம் 150 % சதத்துக்கு மேல் கட்டணம் உயர்த்தி உள்ளது.

சிறுகுறு தொழில்கள் பெரும் அளவில் பாதிக்கும் இந்த இரண்டு வகையான கட்டண உயர்வை தமிழக அரசு கைவிட வேண்டும். இதை வலியுறுத்தி வருகிற 25.11.2022 கோவை டாடாபாத் பவர்ஹஸ் பகுதியில் தொழில் கூட்டமைப்பின் சார்பில் காலை 10 மணி முதல் மாலை 5.30 மணி வரை உண்ணாவிரத போராட்டம் நடைபெறும் என ஜே.ஜேம்ஸ் தனது பேட்டியில் கூறினார்.

# தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்

தமிழ்நாடு விவசாய சங்கம் சார்பில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நவ. 21 அன்று திண்டுக்கல் மாவட்டம், நத்தம் பேருந்து நிலையம் அருகில் தமிழ்நாடு விவசாயிகள் சங்க நத்தம் தாலுகா தலைவர் மலைச்சாமி தலைமையில் நடைபெற்றது. இதில் நத்தம் தாலுகா செயலாளர் ஆனந்தன், திண்டுக்கல் மாவட்ட பொறுப்பாளர் சுப்பையா, சிபிஐ நத்தம் தாலுகா செயலாளர் வெள்ளைச்சாமி, திண்டுக்கல் மாவட்ட து.செயலாளர் வினோத்குமார், தொழிற்சங்க தலைவர்களில் ஒருவரான கிருஷ்ணசாமி, விவசாய சங்க மாவட்டச் செயலாளர் நிக்கோலஸ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயற்குழு



உறுப்பினர் ராணி, பெருமாள் மற்றும் தமிழ்நாடு விவசாய சங்க நத்தம் தாலுகா நிர்வாகிகள் வெள்ளை, தவநூதன், பொன்னுச்சாமி, என்.பி.வி.வெள்ளைச்சாமி, ராமர் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## அருந்ததிய தொழிலாளர் குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கிடுக!

### வட்டாட்சியரிடம் மனு

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம் மானியதஅள்ளி ஊராட்சி அண்ணாநகரில்வாழும்நிலமற்ற அருந்ததியவிவசாய தொழிலாளர் குடும்பங்கள், ஒரே வீட்டில் மூன்றுக்கு மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர். அதனால், அக்குடும்பங்களுக்கு இலவசமாக வீட்டு மனைபட்டா வழங்க வேண்டி தருமபுரி வட்ட ஆதிதிராவிடர் நல வட்டாசியரிடம் 36 குடும்பங்கள் சார்பாக தனி நபர் மனுக்கள் அளிக்கப்பட்டன. இதில் தமிழ்மாநில மாநில விவசாய தொழிலாளர் சங்க மாவட்ட செயலாளர் ஜெ.பிரதாபன் மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் வெ.பை. மாதையன், பார்வதி ஆகியோர் தலைமையில் வட்டாசியரிடம் மனு அளிக்கப்பட்டது.

## மீனவத் தொழிலாளர் சங்கம் ஆர்ப்பாட்டம்

தமிழக மீனவர்கள் மீதான இலங்கை கடற்படையின் தொடர் தாக்குதலை கண்டித்தும், கச்சத்தீவை மீட்டுதரக் கோரியும், இலங்கை சிறையில் வாடும் அனைத்து மீனவர்களையும் அவர்களது படகுகளையும் உடனடியாக மீட்டு தரக் கோரியும், தமிழ்நாடு ஏஐடியூசி மீனவர் தொழிலாளர் சங்கம் சார்பில் இராமேஸ்வரம் துறைமுக வீதி மீன்துறை அனுமதி சீட்டு வழங்கும் அலுவலகம் முன்பு மாநில செயலாளர் சி.ஆர்.செந்தில்வேல் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட துணை செயலாளர் எம்.பிச்சை, மாவட்ட துணை தலைவர் எம்.அந்தோணிபீட்டர், மாவட்ட குழு உறுப்பினர் பி.ஜோதிபாசு ஏஐடியூசி நிர்வாகிகள் ஏ.கே.முனீஸ்வரன் எம்.செந்தில் ஜி.பாண்டி கே.மோகன் முகவைமுனீஸ் வெங்கடேஷ் வி.கருப்பையா கே.மாரிராஜா, ஞானபிரகாசம், ராஜேகோபால், முனியராஜ் யூ.பாண்டி, முனியசாமி, செல்வம், மீனவ மகளிர் அணி சார்பில் பி.லட்சுமி பி.பார்வதி சம்பை பி.லெட்சுமி, ஜெரால்டு, உஷா, ராதிகா, மரிக்கண்ணு, முனியம்மாள், மற்றும் பாதிக்கபட்ட மீனவர்களின் குடும்பத்தை சார்ந்தவர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## ஞாயிறு – கண்ணியாம்பாளையம் சாலையை சீரமைத்திடுக!

### வி.தொ.ச. திருவள்ளூர் மாவட்டக்குழு கோரிக்கை

தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்க திருவள்ளூர் மாவட்டக் குழு கூட்டம் தலைவர் வழக்கறிஞர் டி.கே.ராஜா தலைமையில் நடைபெற்றது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி திருவள்ளூர் மாவட்ட செயலாளர் கே.கஜேந்திரன், மாவட்ட துணை செயலாளரும், சங்கத்தின் மாவட்ட பொருளாளருமான வி.சரவணன், விவசாயிகள் சங்கத் தலைவர் மேல்நலத்தூர் கே.ஆறுமுகம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். சங்கத்தின் மாவட்டச் செயலாளர் என்.எஸ்.பிரதாப் சந்திரன் வேலை அறிக்கை சமர்ப்பித்தார். கூட்டத்தில் மாவட்ட துணைத் தலைவர் கே.வி. செங்கொடி செல்வன், மாவட்ட துணை செயலாளர் எம். பி. குமார், மதியழகன் மற்றும் மாவட்ட குழு உறுப்பினர்கள் ஜி. எம்.சம்பத், துரை, முனுசாமி உள்ளிட்டோர் பங்கேற்றனர். சோழவரம் ஒன்றியம் ஞாயிறு கிராமத்திலிருந்து சென்னை பிராட்வே வரை செல்லும் தடம் எண் 57 ஜெ, பேருந்து சாலை வசதி சரியில்லாததால் தற்போது கண்ணியாம்பாளையத் திலிருந்து இயக்கப்படுகிறது. இதனால் ஞாயிறு கிராமத் திலிருந்து வேலைக்கு, மருத்துவமனைக்கு செல்வோர், கல்லூரி, பள்ளிகளுக்கு செல்வோர் பாதிக்கப்படுகின்றனர்.

எனவே நெடுஞ்சாலைத்துறை ஞாயிறு கிராமம் முதல் கண்ணியம்பாளையம் வரை உள்ள சாலையை உடனடியாக சீர்படுத்தி பேருந்து போக்குவரத்திற்கு உதவிட வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## தியாக சீலர் சி.எஸ்.சுப்பிரமணியம் கட்டிட நிதி

| | |
|---|---|
| தோழர் டாக்டர் வே.துரைமாணிக்கம் குடும்பத்தார் | – ரூ.10,000 |
| கடலூர் மாவட்டக்குழு | – ரூ.7,000 |
| தோழர் முருகன், ஆட்டோ தொழிலாளி, ஸ்ரீவில்லிபுத்தூர் | – ரூ.500 |

## இந்த வார தம்பிக்குறள்

### 97.அழகும் புகழும்

**அழுகைப் புகழை விழையா தழிப்ப**
**உணர்வை அழிப்ப த:து.**

அழகையும், புகழையும் விரும்பாமல் அவற்றை அழிப்பது, உணர்வுகளை அழித்து விடுவதாகும். (உணர்வு – உள்ள எழுச்சி)

**உணர்வை அழிப்ப த:து லகத்தின்**
**உயிரை அழிப்ப த:து.**

அழகினாலும், புகழினாலும் உண்டாகும் உள்ள எழுச்சியை அழிப்பது, உலகின் உயிராகிய இயக்கத்தை அழிப்பதாகும்.

## நூல் நயம்

# விடுதலை வேள்வியில் தியாகி விஸ்வநாததாஸ்




இந்திய நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட விடுதலை வீரர்கள், பல்வேறு வடிவங்களில் தங்கள் போராட்டங்களை அமைத்துக் கொண்டனர். சிலர் ஆயுத வழியிலும், பலர் அகிம்சா வழியிலும் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இவர்களில் தான் அறிந்த நாடகக்கலையின் மூலம் நாட்டுப்பற்றை மக்களிடத்தில் விதைத்து, அம்மக்களை தட்டி எழுப்பியவர்களில் ஒருவர் விஸ்வநாத தாஸ்.

விஸ்வநாததாசின் போர் கோலமும், தன் வாழ்நாள் முழுதும் அவர் சந்தித்த சோதனைகளும், வேதனைகளும் கொஞ்சம் நஞ்சம் அல்ல, எத்தனையோ அடக்குமுறைகள்,சிறைச்சாலைகள், அராஜகங்களை சந்தித்து தான் விடுதலைப் போராட்டத்தை அடுத்த கட்டத்திற்கு கொண்டு சென்றார். அனைவரையும் கவர்ந்து இழுக்கும் திறமையும், குரல் வளமும் கொண்டதால் சிறந்த மேடை கலைஞராக பிரகாசித்தார்.நாடக மேடைகளில் தனது கனல் தெறிக்கும் பாடல்களால் அனைவரையும் ஈர்த்து விடுதலை வேள்வி தீ வளர்த்தார்.

இவரது ஆற்றல் மிகுந்த,மக்களை கவர்ந்திழுக்கும் பாடலை கேட்ட தேசப்பிதா காந்தியடிகள். மக்களைத் தட்டி எழுப்பும் பாடல்களை இவர் தொடர்ந்து பாட வேண்டும் என கேட்டுக்கொண்டார். ஜாலியன் வாலாபாக் நகரில் நடந்த படுகொலை இவரது உள்ளத்தில் மாபெரும் தேசபக்தி தீயை ஏற்றியது. இதனால் முழு சுதந்திரப் போராட்ட வீரராக தேசபக்தி பாடல்களை மேடைகள் தோறும் பாடினார்.

“கொக்கு பறக்குதடி பாப்பா

வெள்ளை கொக்கு பறக்குதடி பாப்பா” என இவர் குரல் எடுத்து பாடினால். வெள்ளை பரங்கியர்கள் தொடை நடுங்கி போவார்கள். இதனால் விசுவநாததாஸ் 29 முறை சிறையில் அடைக்கப்பட்டார். அவர் சிறையில் இருந்தாலும் அவரது மூத்த புதல்வர் சுப்பிரமணிய தாஸ் இந்த நாடகத்தை தொடர்ச்சியாக நடத்தினார். இதனால் வெறிகொண்ட வெள்ளை பரங்கியர்கள் சுப்பிரமணிதாசையும் கைது செய்து சிறையில் அடைத்தார்கள்.

கடலூர் சிறையில் இருந்த சுப்பிரமணி தாஸுக்கு, விசுவநாதாஸ் எழுதிய கடிதத்தில் “மன்னிப்பு கேட்பது என்பது நம் பாரத நாட்டின் புத்திரன் எவனுக்குமே வரக்கூடாது. அதுவும் என் மகனுக்கு வந்தால் அதைவிட அவமானம் எதுவும் இல்லை. என் மானமும் நாட்டின் மானமும் பிரிக்க முடியாது”. என்று சொல்லிவிட்டு. “சிறையில் செத்து மடி ஆனால் மன்னிப்பு கடிதம் மட்டும் கொடுக்காதே” என்று எழுதியுள்ளார். இப்படி தேசத்திற்காக வாழ்ந்த மகத்தான மனிதர் விஸ்வநாத தாஸ். இவரது ஒரு புதல்வர் மட்டுமல்ல அனைத்து புதல்வர்களுமே சிறையில் வாடி உள்ளனர்.

இப்படிப்பட்ட மகத்தான தியாகி விஸ்வநாததாஸ் அவர்களைப் பற்றி வீ.தர்மதாஸ் எழுதிய இந் நூலை அனைவரும் வாங்கி படிக்க வேண்டுகிறோம்.

– இன்சுவை பாரதி

| | | |
|---|---|---|
| நூலாசிரியர் | : | வீ.தர்மதாஸ் |
| பக்கம் | : | 60 விலை: ரூ. 70 |
| வெளியீடு | : | முத்தமிழ்ப் பண்பாட்டுப் பாசறை அறக்கட்டளை, திருவாரூர் |

# யுத்தம் வேண்டாம்




மனித குலம் அமைதியாகவும்,நிம்மதியாகவும் வாழ்வதற்கு யுத்தம் பெரும் தடை கற்களாக உள்ளது. யுத்தத்தால் ஒரு போதும் அன்பை விதைக்க முடியாது. மாறாக யுத்தம் அழிவைத்தான் ஏற்படுத்தும். இதனால்தான் மாக்சிம் கார்க்கி யுத்தம் வேண்டாம் என்கிற இந் நூலை எழுதியுள்ளார்.

இரண்டு உலக மகா யுத்தங்களில் ஈடுபட்டு. எத்தனை பெரிய அழிவுகளை மனித குலம் சந்தித்தது . யுத்தங்களுக்கு என்ன தான் காரணங்கள் சொல்லப்பட்டாலும், எல்லா யுத்தங்களும் மனிதர்களுக்கு இழப்புகளை ஏற்படுத்துபவை. ஆறாத்துயரை அளிப்பவை.ஆகவே யுத்தங்கள் எதிர்க்கப்பட வேண்டியவை.

பெரிய கேட்டை விளைவிக்கும் உலக யுத்தங்களை விரும்புகிறவன் மனிதனோடு மனிதராக வைத்து என்னத்தக்கவனா?. இப்படிப்பட்ட யுத்தங்களை விரும்புகிறவர்கள் யார்? ஏகாதிபத்திய வெறியர்களும், கொள்ளை லாபமும், பேராசை கொண்டவர்களும் தான் என்பது வெளிப்படை. மகா யுத்தங்களால் ஏற்பட்ட விபரீதங்களை உணர்ந்த, மனித தன்மை படைத்த ஒவ்வொருவரும் உலக சமாதானத்தை வேண்டுகின்றனர்.

“முதலாளித்துவம் தாங்கள் இன்னும் பெரிய பணக்காரர் ஆவதற்காக, சர்வதேச யுத்தங்களை நடத்துகிறார்கள். யுத்தங்கள் மக்களிடையே வெறுப்பை விதைக்கின்றன. இப்படிப்பட்ட யுத்தங்களை எதிர்த்து குரல் எழுப்ப உறுதி கொண்டுள்ள எல்லா ஆடவர், பெண்களையும் நான் வாழ்த்துகிறேன்.

ஒவ்வொரு நாட்டின் முதலாளி வர்க்கமும் உலகத்தையும், உலக மக்களையும் கொள்ளையிடுவதில் முதல் உரிமை பெற துடிக்கிறது.. அதனால் மற்ற நாடுகளின் கொலைகாரர்களுடன் போட்டி போடுகிறது இதற்குத் ‘தேசிய உணர்ச்சி’ என்று பெயர் வைத்துக்கொண்டு ஏமாற்றுகிறது” என மார்க் சிம் கார்க்கிக்கு சரியாகவே சுட்டிக்காட்டுகிறார்.


இன்றும் இப்படிப்பட்ட தேசிய உணர்ச்சியின் மூலமாகத்தான் இந்தியா தனது பகைநாடுகளை கட்டியமைத்து கொண்டு இருக்கிறது. இந்த பகை உணர்ச்சியும், தேசிய உணர்ச்சியும் மக்களுக்கானது அல்ல, மாறாக முதலாளிகளின் லாபத்திற்கானது என்பதை மாக்சிம் கார்க்கி யுத்தம் வேண்டாம் என்கிற இந்த புத்தகத்தில் மிகச் சரியாகவே கோடிட்டு காட்டுகிறார். இந்நூலை தமிழில் கு. அழகிரிசாமி மொழிபெயர்த்துள்ளார். இந்நூலை அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டுகிறோம்

– சமரன்

| | | |
|---|---|---|
| நூலாசிரியர் | : | மாக்சிம் கார்க்கி, தமிழில்: கு.அழகிரிசாமி |
| பக்கம் | : | 68 விலை: ரூ. 70 |
| வெளியீடு | : | நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41 பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,அம்பத்தூர், சென்னை – 50 |

## சுழலும் உலகம்

# COP 27: ஏமாற்றம் அளிக்கும் மாநாடு




COP 27 எனும் ஐ.நா அமைப்பின் பருவநிலை மாற்றம் குறித்த மாநாடு இந்த ஆண்டு நவம்பர் 6 முதல் 18 ஆம் தேதி வரை எகிப்து நாட்டில் உள்ள ஷர்ம் எல்ஷேக் நகரில் நடைபெற்றது. ஏறத்தாழ 190 க்கும் அதிகமான நாடுகளின் பிரதிநிதிகள் இம்மாநாட்டில் பங்கேற்றனர். இப்பூமண்டலத்தை அச்சுறுத்தி வரும் புவிவெப்பமயமாதல், பருவநிலை மாற்றம் மற்றும் இவற்றின் விளைவுகளில் இருந்து உலக மாந்தரைப் பாதுகாத்திட இம்மாநாட்டில் தீர்மானகரமான நல்ல முடிவுகள் எட்டப்படும் என்ற எதிர்பார்ப்பு மேலோங்கி இருந்தது. ஆனால், எவ்வித தீர்மானகரமான முடிவுகளும் எட்டப்படாமல் இம்மாநாடு நிறைவுற்றிருப்பது வேதனைக்குரியதாகும்.

இம்மாநாடு குறித்து ஐ.நா அமைப்பின் பொதுச் செயலாளர் ஆன்டோனியோ குட்ரஸ் வெளிப்படுத்தியுள்ள பெருத்த ஏமாற்றம் வெகு விரைவில் உலகம் முழுவதும் எதிரொளிக்கும் என்பது நிச்சயம் ஆகும். இப்பூமண்டலம் நெருக்கடியான நிலையில் இருக்கிறது. நச்சு வாயு வெளியேற்றத்தை உடனடியாக பெருமளவிற்கு குறைக்க வேண்டியதன் அவசியம் குறித்து இம்மாநாடு விவாதிக்கவில்லை.'' என்று அவர் வேதனைபட கருத்து வெளியிட்டுள்ளார்.

இம்மாநாடு குறித்து சர்வதேச அளவில் பல செய்தி ஊடகங்களும் அறிக்கைகள் வெளியிட்டுள்ளன. சி.என்.என் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

''எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளில் பெரும்பாலானவை வெளிப்படுத்திய கடும் எதிர்ப்பு காரணமாக, படிம எரிபொருட்கள் (Fossil Fuels) பயன்பாட்டைப் படிப்படியாக அகற்றுவது குறித்த ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதில் இம்மாநாடு தோல்வி அடைந்துள்ளது. பருவநிலை மாற்றத்தால் உண்டாகும் பேரிடர்களை ஏழை நாடுகள் எதிர்கொண்டு சமாளித்திட, இழப்பு மற்றும் சேதங்களுக்கான பிரத்யேக நிதி ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்று இம்மாநாடு முடிவு செய்துள்ளது. 2030 ஆம் ஆண்டின் போது, பசுமைக்குடில் வாயுக்கள் வெளியேற்றம் பாதியாகக் குறைக்கப்பட வேண்டும் என்பதும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. புவிவெப்பமயமாதலைக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற நோக்கம், இம்மாநாட்டில் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டது.

எனினும், புவிவெப்பமயமாதலுக்கும், பருவநிலை மாற்ற நெருக்கடிக்கும் முக்கிய காரணமாக இருக்கும் அனைத்து படிம எரிபொருட்களையும் படிப்படியாக குறைப்பதற்கான முன்மொழிவை, எண்ணெய் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள பல நாடுகளின் கடும் எதிர்ப்பு காரணமாக நிறைவேற்ற முடியாமல் போனது.''

வெகுகாலத்திற்கு முன்பே மேற்கொள்ளப் பட்டிருக்க வேண்டிய நடவடிக்கைகள் தற்போதும் மேற்கொள்ளப்படாதது மிகுந்த வேதனை அளிப்பதாக ஜெர்மனியின் அயலுறவுத்துறை அமைச்சர் பேயர்பாக் கூறியுள்ளார்.

ப்ளூம்பர்க் அறிக்கையில் கூறியிருப்பதாவது:

ஐ.நா அமைப்பின் பருவநிலை மாற்றம் குறித்த இம்மாநாடு தோல்வியுறுவது தவிர்க்கப்பட்டு உள்ளது. இறுதிக்கட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட சமரசங்கள் காரணமாக, நச்சு வாயு வெளியேற்றத்தைக் குறைப்பதற்கான புதிய முயற்சிகள் குறித்து பல்வேறு ஐயப்பாடுகள் எழுந்துள்ளன.

பருவநிலை மாற்றம் உருவாக்கிடும் பேரிடர்களை வளரும் மற்றும் ஏழை நாடுகள் எதிர்கொண்டு சமாளித்திட ஒரு பிரத்யேக நிதி உருவாக்கப்பட வேண்டும் என்று கடந்த மூன்று தசாப்தங்களாக கோரப்பட்டு வந்தது. அதற்கான ஒப்பந்தம் இம்மாநாட்டில் ஏற்பட்டுள்ளது. இந்த நிதி ஏற்பாடு எவ்வாறு இயங்கும் என்பது குறித்த தகவல்கள் மற்றும் இந்த நிதிக்கான பணக்கார நாடுகளின் பங்களிப்பு குறித்து அடுத்த சில மாதங்களில் தான் தெரியவரும். அடுத்த ஆண்டு, ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெற உள்ள COP 28 மாநாட்டில் இந்த நிதி ஏற்பாடு குறித்த விவரங்கள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும். இந்தப் புதிய நிதி ஏற்பாட்டின்படி, நிதிப் பங்களிப்பு செய்யவிருக்கும் பணக்கார நாடுகளின் அதிகாரப்பூர்வ பட்டியலில் சீனா உள்ளிட்ட எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகள் பலவும் இடம்பெறவுள்ளன. எனினும், இந்த நிதி ஏற்பாடு குறித்து ஐயம் நிலவுகிறது. பருவநிலை மாற்றம் குறித்த நடவடிக்கைகளில் வளர்ந்த நாடுகள், அவை அளித்த வாக்குறுதிப்படி செயல்படுவதில்லை என்பதுதான் நடைமுறை அனுபவமாக இருந்து வருகிறது.

பருவநிலை மாற்றத்திற்குக் காரணமான பசுமைக்குடில் வாயுக்கள் வெளியேற்றத்தைக் குறைப்பதற்குப் பதிலாக, மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளுக்குப் (Adaptation) பதிலாக, இழப்பு மற்றும் சேதத்தை (Loss and Damage) நாம் ஏன் கொண்டாடுகிறோம்? என்று மாலத்தீவு அயலுறவுத் துறை அமைச்சர் அமினத் சவ்னா கேள்வி எழுப்பியுள்ளார்.

COP 27 மாநாட்டு பேச்சுவார்த்தைகளில் எகிப்து நாட்டின் அயலுறவுத் துறை அமைச்சர் சமேஹ் சவுக்கரே தலைமை வகித்தார். மாநாட்டு நடவடிக்கைகளில் நாசூக்கான அணுகுமுறையையே அவர் கடைபிடித்தார். மாநாடு தோல்வியுறுவதைத் தவிர்த்திடவே பேச்சுவார்த்தைகள் நீட்டிக்கப்பட்டன; இறுதிகட்ட சமரசங்கள் மேற்கொள்ளப்பட்டன. கடந்த ஆண்டு ஸ்காட்லாந்து நாட்டில் உள்ள கிளாஸ்கவ் நகரில் நடைபெற்ற COP 26 மாநாட்டின் போது விவாதிக்கப்பட்ட பல முக்கிய அம்சங்கள் இந்த மாநாட்டின் போது இடம்பெறவில்லை அல்லது நீர்ந்து போயிருப்பதாக சிஒபி 26 மாநாட்டிற்கு தலைமை வகித்த அலோக் சர்மா குற்றம் சாட்டியுள்ளார்.

COP 27 மாநாட்டின் நிகழ்வுகளில் படிம எரிபொருள் துறையின் பிரதிநிதிகள் ஆதிக்கம் செலுத்தியதாக ஒரு பரவலான விமர்சனம் எழுந்துள்ளது. மேலும், பெட்ரோலியம் ஏற்றுமதி செய்யும்நாடுகளின் அமைப்பான ஒபெக்கில் உறுப்பு நாடாக இருக்கும் ஐக்கிய அரபு அமீரகத்தில் சிஒபி 28 நடைபெற இருப்பதால், படிம எரிபொருட்களுக்கு எதிரான தற்போதைய நிலைப்பாட்டின் தீவிரத்தன்மை நீர்ந்து போகக்கூடிய அபாயம் இருப்பதாகவும் கருதப்படுகிறது.

தி கார்டியன் அறிக்கையில் கூறியிருப்பதாவது:

பருவநிலை மாற்றத்தால் உண்டாகும் பேரிடர்களை எதிர்கொள்ளவும், அவை காரணமாக உண்டாகும் இழப்பு மற்றும் சேதங்களைச் சமாளிக்கவும், கடந்த மூன்று தசாப்தங்களாகவே வளரும் நாடுகள் நிதி உதவி கோரி வந்துள்ளன. அதற்கான ஒப்பந்தம் இந்த மாநாட்டில் ஏற்பட்டுள்ளது. ஆனால், ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கான நிதி எவ்வாறு உருவாக்கப்படவுள்ளது? எவ்வாறு வழங்கப்பட உள்ளது? என்பது குறித்து இதுவரையில் தெளிவான தகவல்கள் இல்லை.

கடந்த ஆண்டு கிளாஸ்கவ் நகரில் நடைபெற்ற COP26 மாநாட்டில், நிலக்கரி பயன்பாட்டை குறைக்க வேண்டும் என்ற உறுதிமொழி ஏற்கப்பட்டது. படிம எரிபொருட்கள் மீதான தீர்மானம் முதல்முறையாக இறுதி அறிக்கையில் சேர்க்கப்பட்டது. COP 27 மாநாட்டில், அனைத்து படிம எரிபொருட்கள் பயன்பாடும் குறைக்கப்பட வேண்டும் என்ற அம்சம் சேர்க்கப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பு நிலவியது. ஆனால், அதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சி தோல்வியுற்றது. கிளாஸ்கவ் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானமே தற்போதும் தொடர்கிறது.

இவ்வாறு, செய்தி ஊடகங்களின் அறிக்கைகள் COP 27 மாநாடு குறித்து தகவல்கள் தெரிவிக்கின்றன.

**ஆதாரம்: CounterCurrents இணைய இதழ்**

**தமிழில்: அருண் அசோகன்**

# மயிலாடுதுறையை பேரிடர் மாவட்டமாக அறிவித்திடுக!

## இரா.முத்தரசன் வலியுறுத்தல்

கனமழையால் மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி, கொள்ளிடம், தரங்கம்பாடி உள்ளிட்ட தாலுகா முழுவதுமாக பெரும் பாதிப்பு ஏற்பட்டது. இதனால் மயிலாடுதுறை மாவட்டத்தில் சம்பா சாகுபடி செய்த நெற்பயிர் சுமார் 80 ஆயிரம் ஏக்கர் பாதிப்படைந்து, வீடுகள் இடிந்து சேதமடைந்துள்ளது. கால்நடைகளும் உயிரிழந்துள்ளது. இந்த பாதிப்பு பகுதியை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா.முத்தரசன் சீர்காழி வட்டத்திற்குட்பட்ட மணிக்கு கிராமம், தென் மணிக்கு கிராமம், நெப்பத்தூர், திருநகரி, இடமணல், வேட்டங்குடி, பழையபாளையம் ஆகிய இடங்களில் பார்வையிட்டு விவசாயிகளிடம் பாதிப்பு குறித்து கேட்டறிந்தார்.

பின்னர் இரா.முத்தரசன் செய்தியாளர்களிடம் கூறியதாவது: கனமழையால் தண்ணீர் வயலில் தேங்கி இதுவரை வடியாமல் நிற்பதால் நெற்பயிர் முற்றிலும் அழுகி வீணாகி விட்டது. ஏக்கருக்கு ரூ.30 ஆயிரம் வழங்க வேண்டும், குடும்ப அட்டைக்கு ரூபாய் ஆயிரம் நிவாரணம் உடனடியாக அறிவித்தது மகிழ்ச்சியானது. ஆனால் அது போதுமானது கிடையாது. கூடுதலாக அறிவிக்க வேண்டும். தொடர் மழை, வெள்ளத்தால் மீனவர்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது, அவர்களுக்கும் அரசு நிவாரணம் வழங்க வேண்டும். அதிகளவில் பாதிப்பு ஏற்பட்டும் பிரதமர் இதுவரையில் வருத்தம் கூட தெரிவிக்கவில்லை. இதுவே குஜராத்தில் பாதிப்பு ஏற்பட்டிருந்ததால் பிரதமர் விரைந்து சென்றிருப்பார்; வருத்தம் தெரிவித்து இருப்பார். தமிழகத்தை பாகுபாட்டோடு பார்க்க கூடாது பிரதமர். மழையால் பாதிப்படைந்த சாலைகள், வாய்க்காலை நூறு நாள் வேலைத்திட்டத்தில் சரி செய்து வேலை வாய்ப்புகள் தரவேண்டும், பிரதமருடன் தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை நெருங்கிய தொடர்பில் இருப்பதால் தமிழகத்தில் பாதித்த பகுதிக்கு மத்திய அரசு நிவாரண நிதியை கூடுதலாக பெற்று தர வேண்டும். இவ்வாறு பேசினார்.

உடன் நாடாளுமன்ற உறுப்பினர் எம். செல்வராசு, மயிலாடுதுறை மாவட்ட செயலாளர் ஆ.சீனிவாசன், திருவாரூர் மாவட்ட செயலாளர் வை.செல்வராஜ், தஞ்சாவூர் (வடக்கு) மாவட்ட செயலாளர் மு.அ. பாரதி, மயிலாடுதுறை விவசாய சங்க மாவட்ட செயலாளர் பெ.வீரராஜ், கே.எஸ்.சிவராமன், கொள்ளிடம் ஒன்றிய செயலாளர் ஜெய் சக்திவேல், சீர்காழி ஒன்றிய செயலாளர் நீதி சோழன், மாவட்ட குழு உறுப்பினர் எஸ். சுந்தரய்யா, இ.பெ. மாவட்ட செயலாளர் மா.பிரபாகரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# தமிழக அரசியலில் குழப்பத்தை ஏற்படுத்த மத்திய அரசு முயற்சி

## எம்.செல்வராசு எம்.பி. குற்றச்சாட்டு

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி, கொள்ளிடம் சுற்றுவட்டார பகுதிகளில் கனமழையால் பாதிக்கப்பட்ட இடங்களை நாகை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.செல்வராசு பார்வையிட்டு ஆய்வு செய்தார். அதனை தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்து அவர் கூறியதாவது: வரலாறு காணாத பெரும் மழையால் ஒருவார காலமாக மழைநீர் வடியாமல் இப்பகுதிகள் முழுவதும் வெள்ளை காட்சியாக உள்ளது. அங்கங்கே கிராமங்கள் வெள்ளத்தால் சூழ்ந்துள்ளது. இத்தகைய சூழலில் பல்வேறு பணி சுமைகளுக்கு இடையே உடனடியாக தமிழக முதல்வர் நேரில் வந்து பார்வையிட்டதற்கு நன்றியினை கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் தெரிவித்துக்கொள்கிறோம்.

தமிழ்நாடு அரசு வெள்ள நிவாரணமாக ஆயிரம் ரூபாய் அறிவித்துள்ளது. இதுபோதுமாது அல்ல என்ற கருத்தை பொதுமக்கள் அனைவரும் தெரிவித்துள்ளனர். ஆகையால், இந்த நிதியை கூடுதலாக வழங்க தமிழக முதல்வரை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் கேட்டுக்கொள்கிறோம்.

சீர்காழி, தரங்கம்பாடி ஆகிய இரண்டு தாலுக்காவிற்கு மட்டும் நிவாரணம் வழங்காமல் மாவட்டம் முழுவதும் பாதிக்கப்பட்டுள்ளது, ஆகையால் மாவட்ட முழுவதும் நிவாரணம் வழங்க அரசாணை பிறப்பிக்க வேண்டும்.



இங்கு பயிரிடப்பட்டுள்ள சம்பா, தாளடி பயிர்கள் அனைத்தும் நீரில் மூழ்கி அழுகி போய் உள்ளது, இதற்கு இழப்பீடாக ஏக்கருக்கு 30 ஆயிரம் ரூபாய்க்கு குறைவில்லாமல் வழங்க வேண்டும். ஒன்றிய அரசு மாநில அரசுக்கு வழங்க வேண்டிய பேரிடர்நிவாரணநிதியைஎந்த அளவுக்குவிரைவாக வழங்க முடிமோ அந்தளவுக்கு விரைவாக வழங்க வேண்டும், மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வீடுகளை கணக்கிட்டு அவற்றை செப்பனிட்டவும், மேலும் புதிதாக வீடுகளையும் கட்டித்தரவும் உத்தரவிட வேண்டும். கொள்ளிட கரையோர படுகையில் விவசாயம் பாதிப்பட்டுள்ளதற்கும் நிவாரணம் வழங்க உத்தரவு பிறப்பிக்க வேண்டும், பாதிக்கப்பட்ட விவசாயிகள், பொதுமக்களுக்கு கூடுதல் நிதியை தமிழக அரசு வழங்கி அவர்களின் வாழ்வாதாரத்தை ஆதாரத்தை காக்க வேண்டும்.

குடி மராமத்து பணி என்பது பெயருக்கு ஏற்றவாறு அப்பகுதி குடிமக்களை வைத்து விவசாயிகளை இணைத்து குழு அமைத்து பணிகளை மேற்கொள்ள வேண்டும். ஆனால் தற்போது பேக்கேஜ் முறையில் யாரோ ஒரு ஒப்பந்ததாரர் மூலம் அலுவலர்கள் இணைந்து பெயரளவில் செய்து முடிக்கின்றனர். அப்பகுதி மக்கள், விவசாயிகளை வைத்து செய்யாத வரை இதுபோன்று வடிகால் பிரச்சினை தீராது. பயிர் காப்பீட்டில் தனியார் ஈடுப்பட்டுள்ளது, இதனால் இது விவசாயிகளுக்கு முழுமையாக சென்று சேரவில்லை என்ற கருத்து எங்களிடம் உள்ளது. இதனை அரசே ஏற்று செய்தால் விவசாயிகளின் பல கோடி ரூபாய் தனியார் கொண்டு போவதற்கு தடைபோட முடியும், இதனை அரசு மாற்ற வேண்டும், தமிழகம் புறக்கணிப்படுவது அரசியல் ரீதியாக பல காரணங்கள் உள்ளது, நீட் நுழைவுத் தேர்வு, கூட்டுறவு திருத்த மசோதா உள்ளிட்ட 22 மசோதாக்கள் கிடப்பில் போடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டு கவர்னர் தமிழ்நாட்டுக்கு எதிராக பேசும் நிலை உள்ளது. தமிழ்நாட்டு அரசியலில் தலையீடு செய்து ஒரு குழப்பத்தை ஏற்படுத்த வேண்டும் என்று மத்திய அரசு செயல்படுகிறது என்றார்.

1 ம் பக்க தொடர்ச்சி

கருத்தில் கொண்டு, மருத்துவ வசதி சிகிச்சைகளை விபத்து மற்றும் நோய்க்கான வேலை இழப்பு காலத்திற்கான நிவாரணம் மிக மிக அவசரமாக வழங்க வேண்டும். அதற்காக தொழிலாளர் நல மாநில ஈட்டுருதி காப்பீட்டு கழகத்தின் கீழ் உடனடியாக கட்டுமான தொழிலாளர்களை கொண்டுவர வேண்டும்.

### தகுதியான அனைவருக்கும் ஓய்வூதியம்

2005 ஆம் ஆண்டு கட்டுமான தொழிலாளர் நலத்திட்டத்தின் மூலம் ஓய்வூதியம் அறிவிக்கப்பட்டது. அப்போது 5 ஆண்டுகள் தொடர்ந்து உறுப்பினராக இருக்க வேண்டும் என்ற நிபந்தனை இருந்தது, இதை நீக்கி அனைவருக்கும் ஓய்வூதியம் வழங்க வேண்டும் என்ற ஏ.ஐ.டி.யூ.சி.ன் கோரிக்கை ஏற்று அரசு 2011 ஆம் ஆண்டு பிப்ரவரி 28 அன்று அரசாணை 36 வெளியிட்டு, நிபந்தனைகளை நீக்கி அனைவருக்கும் ஓய்வூதியம் வழங்க உத்தரவிட்டது.

ஆனால் நடைமுறையில் பல்வேறு காரணங்களை கூறி ஓய்வூதியம் வழங்கப்படாமல் தவிர்க்கப்படுகிறது. யாரெல்லாம் ஓய்வூதியம் பெற தகுதியானவர்களோ அவர்கள் அனைவருக்கும் ஓய்வூதியம் உடனடியாக வழங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

மாநில உரிமைகளை பறிக்கும் உள்நோக்கத்துடன் ஒன்றிய அரசு ஒரே நாடு, ஒரே சட்டம், ஒரே சமூக பாதுகாப்பு திட்டம் என்ற போர்வையில் கொண்டு வந்துள்ள சட்டம் 2020, தமிழ்நாடு மாநிலத்தில் நடைமுறையில் உள்ள அமைப்புசாரா தொழிலாளர் சமூக பாதுகாப்பு சட்ட திட்டங்களை அழித்து ஒழிக்கும் உள்நோக்கம் கொண்டதாக இருப்பதால் அதனை முறியடிக்க வேண்டும்.

ஒன்றிய அரசு கொண்டுவந்துள்ள இச்சட்டம் அமல்படுத்தப்படுவதால் தமிழ்நாட்டில் ஏற்கனவே நடைமுறையில் இருந்து வரும் அமைப்பு சாரா உடல் உழைப்பு தொழிலாளர்களுக்கான 17 நல வாரியங்கள், குறிப்பாக தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல வாரியமும், நலத்திட்டமும் அதற்கு அடிப்படையாக தமிழ்நாடு இயற்றியுள்ள 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர் பணிகளை முறைப்படுத்துதல் மற்றும் வேலைகளை மேம்படுத்துவதற்கான மாநில சட்டமும் செயலற்றதாகிவிடும் என்பதால், ஒன்றிய அரசு கொண்டுவந்துள்ள சமூக பாதுகாப்பு சட்டம் 2020, தமிழ்நாடு தொழிலாளர்கள் போராடி பெற்ற நடைமுறையில் இருக்கும் சட்டத்தையும் உரிமைகளையும் பலன்களையும் மறுப்பதாக உள்ளது என்பதால் ஒன்றிய அரசின் ஒரே சமூக பாதுகாப்பு சட்டம் 2020 கைவிடப்பட வேண்டும், தமிழ்நாடு அரசு மேற்படி சட்டத்திற்கு எதிராக சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டு வர வேண்டும் என்றும், உடல் உழைப்பு தொழிலாளர் சட்டத்தையும், திட்டத்தையும் நல வாரியங்களையும் பாதுகாத்திட உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

### பெண் தொழிலாளர்களுக்கு பேறுகால பலன்கள்

இந்தியாவின் அரசியல் அமைப்புச் சட்டமும், 1961 ஆம் ஆண்டு வருடத்தில் பேறுகால பயன்கள் வழங்கும் சட்டமும் பெண் தொழிலாளர்களுக்கான சிறப்பு சமூக பாதுகாப்பை உத்தரவாதப் படுத்தியுள்ளன. 1982 ம் ஆண்டு தமிழ்நாடு உடல் உழைப்பு தொழிலாளர் சட்டமும், தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியத்தில் அறிவிக்கப்பட்ட நோக்கங்களும், நலத்திட்டங்களும் கட்டுமான பெண் தொழிலாளர்களுக்கு பேறுகால பயன்களை வழங்கிட இடம் அளித்துள்ளது.

கட்டட கட்டுமான பெண் தொழிலாளர்கள் வயிற்றில் குழந்தையும், தலையில் கலவை சட்டியையும், செங்கல்லையும் சுமக்கும் நிலை சுதந்திர இந்தியாவில் தொடர்வதை இந்த மாநாடு வருத்தத்துடன் சுட்டிக்காட்டுகிறது.

பேறுகால பயன்களை பெண் தொழிலாளர்களுக்கு வழங்குவதில் முதல் கட்டமாக ஆறு மாத சம்பளத்துடன் ஓய்வு வழங்கிட தமிழ்நாடு அரசு திட்டம் கொண்டு வரவேண்டும் என்றும், ஆறு மாத கால விடுப்புக்கு இணையான நிதியாக நல வாரியம் மாதம் 15 ஆயிரம் வீதம் ஆறு மாதங்களுக்கு 90 ஆயிரம் வழங்கிட வேண்டும்.

### மாதம் ரூ.6000 ஓய்வூதியம் வழங்குக

கட்டுமானத் தொழிலாளர்கள் 60 வயதுக்கு மேல் ஓய்வு காலத்தில் இறக்கும் வரை சிரமமின்றி வாழ்ந்திட குறைந்தபட்சம் மாதம் ரூ.6 ஆயிரம் ஓய்வூதியம் வழங்கிட வேண்டுமென தமிழக அரசை இந்த மாநாடு ஒருமனதாக கேட்டுக் கொள்கிறது.

அமைப்புசாரா தொழில்களில் தமிழ்நாட்டு தொழிலாளர்களுக்கு 90% வேலைவாய்ப்பை உறுதி செய்யும் சட்டம் கொண்டுவரப்படவும் அதில் கட்டட கட்டுமான தொழிலாளர்களுக்கும் அமல்படுத்தவும் தமிழ்நாடு அரசு தனி சட்டம் கொண்டு வர வேண்டும்.

கட்டுமான பெண் தொழிலாளர்களின் ஓய்வு பெறும் வயதை 50 எனவும், ஆண் கட்டுமான தொழிலாளர்களின் ஓய்வு பெறும் வயதை 55 எனவும் நிர்ணயம் செய்திட வேண்டும்.

சமூக நலத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சிறப்பு திட்டங்களை காரணம் காட்டி நலவாரிய பலன்களை மறுக்கக்கூடாது.

### இயற்கை மரண நிதியை உயர்த்துக

தற்போது இயற்கை மரணம் நிதியாக ரூ.50,000 வழங்கப்படுகிறது. இது மிக மிக சொற்பமானது. இறுதி சடங்கு செலவுகளுக்கு கூட போதுமானது அல்ல. வருவாய் ஈட்டி வந்த ஒருவரை இழந்து நிலை குலைந்து போன குடும்பத்தை காப்பாற்ற வேண்டியது அரசின், நல வாரியத்தின் கடமையாகும் என்பதால், தற்போது வழங்கப்பட்டு வரும் இயற்கை மரணம் உதவி நிதியை ரூ.5 லட்சமாக உயர்த்தி வழங்கிட வேண்டும் என மாநாடு கேட்டுக்கொள்கிறது.

விபத்தில் மரணமடையும் கட்டட கட்டுமான தொழிலாளி குடும்பத்திற்கு ரூ.5 லட்சம் என்ற விபத்து நிவாரணம் போதுமானதல்ல என்பதால், அதனை ரூ.10 லட்சமாக உயர்த்தி வழங்கிட வேண்டுமென தமிழ்நாடு அரசை இந்த மாநாடு வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது.

விபத்துகளில் பாதிக்கப்படும் கட்டுமான தொழிலாளர்களுக்கு உரிய சிகிச்சை அளிக்க முடியாமல் நூற்றுக்கணக்கானவர்கள் அகால மரணம் அடைகின்றனர். நூற்றுக்கணக்கானவர்கள் முடங்கிப் போகின்றனர். அவர்களை காப்பாற்றும் முயற்சியில் அவர்களின் குடும்பங்கள் கடனாளிகளாக ஆகிவிடுகின்றனர்.

### இ.எஸ்.ஐ. மருத்துவ வசதி செய்திடுக

எனவே, இ.எஸ்.ஐ. திட்டம் செயலுக்கு கொண்டுவரப்படும் காலம் வரையிலும் கட்டட கட்டுமான தொழிலாளர்கள் எவ்வகை விபத்தில் பாதிக்கப்பட்டாலும் அவர்கள் முழு சிகிச்சை பெற்றிட அனைத்து வசதிகள் கொண்ட மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெறவும், அதற்கான ஆகும் செலவை வாரியம் ஏற்கவும், சிகிச்சை பெறும் காலத்தில் அவர்களின் குடும்பத்திற்கு நிவாரணம் வழங்கிடவும் தமிழக அரசு ஆவன செய்திட வேண்டுமென இம்மாநாடு வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது.

### குழந்தைகளுக்கு கல்வி

கட்டிட கட்டுமான தொழிலாளர் குழந்தைகளின் கல்வி செலவு முழுவதையும் வாரியம் ஏற்று அவர்தான் குழந்தைகளின் கல்வி பெறும் உரிமையை உத்தரவாதப்படுத்த வேண்டும் என மாநாடு கேட்டுக் கொள்கிறது.

### திருமண உதவி

கட்டுமான தொழிலாளர்கள் குழந்தைகளின் திருமணத்திற்கு உதவி தொகையாக ரூபாய் ஒரு லட்சம் வழங்கிட வேண்டும் என மாநாடு கேட்டுக் கொள்கிறது.

புலம்பெயரும் தொழிலாளர்கள் சட்டத்தை கறாராக அமல்படுத்த வேண்டும். தன்னாட்சி அதிகாரம் கொண்ட முத்தரப்பு வாரியம் அமைத்திட வேண்டும். கட்டுமான பெண் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச கூலி அமல்படுத்த வேண்டும். 100 நாள் வேலை திட்டத்தை காரணம் காட்டி பதிவு மறுக்கக்கூடாது. தகுதி படைத்த கட்டுமான பெண் தொழிலாளர்களுக்கு தொழில் பயிற்சி அளிக்க வேண்டும் என்பன உள்ளிட்ட 20 தீர்மானங்கள் இந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன.

JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
Posted on 26.11.2022 at Egmore RMS 1 / Patrika Channel.
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57

# அனைத்திந்திய தொழிற்சங்கப் பேராயம் AITUC




# தமிழ்நாடு ஏஐடியுசி 20வது மாநில மாநாடு

**1, 2, 3 டிசம்பர் 2022 - திருநெல்வேலி**
**குருதாஸ் தாஸ்குப்தா நகர்,**
**ஜி.மணியாச்சாரி அரங்கம்**

வாழ்த்துரை: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் **சி.வி.கணேசன்**

## கருத்தரங்கம்

**மு.சண்முகம்** M.P. - LPF
**க.அ.ராஜா ஸ்ரீதர்** - HMS
**ஜி.சுகுமாறன்** - CITU
**டி.வி.சேவியர்** - INTUC
**அ.அனவரதன்** - AIUTUC
**க.ஞானதேசிகன்** - AICCTU
**ஆர்.சம்பத்** - WPTUC

## வாழ்த்தரங்கம்

**சி.எச்.வெங்கடாச்சலம்** - WFTU
**சி.ஸ்ரீகுமார்** - WFTU
**இ.அருணாசலம்** - AIBEA
**கே.நடராஜன்** - NFTE
**ச.சவரிமுத்து** - GIEU
**மு.பொன்னிவளவன்** - TNGEU
**வி.ராமபத்ரன்** - AIBOA

**02.12.2022 அன்று மாலை 5.00 மணியளவில் பரிக்ஷா குழுவினரின் பலூன் நாடகம்**

**03.12.2022 அன்று மாலை சகா கலைக்குழுவினரின் கிராமிய கலா நிகழ்ச்சி**

**3.12.2022 மாலை 4.00 மணிக்கு பாளையங்கோட்டை மரியா கேன்டீன் பேருந்து நிறுத்தம் அருகில் இருந்து...**

# மாபெரும் செம்படைப் பேரணி

## பொதுக்கூட்ட சிறப்புரை

# கே.ராஜன்

கேரள வருவாய்த்துறை அமைச்சர்

**இரா.முத்தரசன் - கே.சுப்பராயன் M.P**
**டி.எம்.மூர்த்தி - கே.இரவி - வஹிதாநிஜாம்**
**நா.பெரியசாமி - எம்.ராதாகிருஷ்ணன்**

அலைகடலென திரண்டு வாரீர்! வாரீர்!!

**வரவேற்பு குழு**

| | | | |
|---|---|---|---|
| **செ.லெட்சுமணன்** | **எஸ்.காசி விஸ்வநாதன்** | **ஆர்.சடையப்பன்** | **ஆர்.ரங்கன்** |
| புரவலர் | பொதுச்செயலாளர் | தலைவர் | பொருளாளர் |

Janasakthi Tamil Weekly Published by R. Mutharasan and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: K.Subbarayan ., Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by A.Sivakumar at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.